# அந்தரத்தில் ஓர் ஊஞ்சல்

இனிமேலும் அங்கே உட்கார்த்திருப்பதில் அர்த்தமே இல்லையெனத் தோன்றிற்று கீர்த்திக்கு.

உமா அவன் பக்கம் திரும்பவேயில்லை. அவ்வளவு ஏன், தனக்காகத் தன் கணவன் காத்திருப்பதைப் பொருட் படுத்தவேயில்லை.

எத்தனை நேரமாகக் காத்திருக்கிறான்!

ஒரு தலையசைப்பு.... சின்னதாய் ஒரு புன்னகை.... இது கூடவா முடியாமல் போய்விட்டது?

முடியாமல் என்ன? மனசில்லை. அவ்வளவுதான்.

அவன் மெள்ள எழுந்து வாசற்பக்கம் வந்தான். நெஞ்சம் முழுக்கத் தேய்த்துக் கழுவிவிட்டாற் போல ஒரு வித வெறுமை.

'ச்சே, என்ன வாழ்க்கை இது?'

மாதக் கணக்காக வெளிநாடுகளில் சுற்றிவிட்டுத் திரும்பியவனுக்குப் புருஷனிடம் பேச ஒரு வார்த்தை கூடவா இல்லாமல் போய்விட்டது?

அந்தரங்கத்தில் பிரியம் இருக்க வேண்டாம். நாலு பேர் முன்னால் நடிக்கவாவது செய்யலாம் இல்லையா?

உமாவுக்கு நடிக்கச் சொல்லியா தரவேண்டும்?

எத்தனை பேரிடம் எப்படியெல்லாம் பழகுகிறாள் அவள்?



Vennila

கீர்த்தி, வாசற் பக்க போர்டிகோவிலிருந்தபடியே தலையைத் திருப்பி உமாவைப் பார்த்தான்.

உருக்கி வார்த்த பொன் போல-அது என்ன இப்படியொரு திருநிறுப்பு - பத்து பேர் நடுவிலும், பளீரெனப் பிரகாசிக்கும் அழகு.

இந்த நிறமும், அழகும் யாருக்கு வரும்? அதே போல அவளின் கல் மனசும், யாரையும் சுலபமாய் எடுத்தெறிந்து பேசும் சுபாவமும்தான் யாருக்கு வரும்?

இவளை வரவேற்பதற்காக, வேலை மெனக்கெட்டு மீனம்பாக்கம் விமான நிலையம் வரையில் வந்தே இருக்க வேண்டாம் என்றுதான் தோன்றிற்று அவனுக்கு.

இவளுக்காகச் செலவிட்ட நேரத்தில் குறைந்தபட்சம் இரண்டு நோயாளிகளையாவது கவனித்திருக்கலாம்.

காலையில்கூட ஓர் ஆபரேஷன் கேஸ்.

புற்றுநோய் சிகிச்சையில் இன்றைக்குக் கீர்த்தி வாசனை விட்டால் தென்னிந்தியாவில் வேறு டாக்டர் இல்லை.

காலையில் வந்த கேஸுக்கு, கீர்த்தியின் கையால் ஆபரேஷன் நடந்தால்தான் தான் பிழைத்தெழுவோம் என்கிற நம்பிக்கை.

''பத்து மணிக்கு நான் ஏரோடிரோம்லே இருக்கணும் ரமேஷ். இந்தக் கேஸை நீங்க பாத்துக்குங்களேன்.''

அவன் தனது உதவியாளரான டாக்டர் ரமேஷிடம் ஆன மட்டும் கேட்டுப் பார்த்துவிட்டான்.



''பேஷண்ட்டுக்கு எங்க மேலே எல்லாம் நம்பிக்கையே இல்லே டாக்டர். நீங்க ஆபரேஷன் பண்ணினாத்தான் பிழைப்பேன்னு சொல்லிட்டிருக்காரு. அப்புறமும் நான் கத்தியை எடுத்தேன்னா பயத்துலேயே மனுஷன் சொர்க்கத்துக்கு டிக்கெட் வாங்கிடுவாரு. அதனாலே, நீங்களே முடிச்சுட்டுப் போங்க. இல்லாவிட்டால், ஆபரேஷனை நாளைக்கு ஒத்தி வச்சிக்குங்க.''

ரமேஷ் சொல்வதிலும் நியாயம் இல்லாமலில்லை. எத்தனைதான் திறமைசாலியாக இருந்தாலும், இந்த மாதிரி வக்கீல், டாக்டர் தொழில்களில் ராசியென ஒன்று இருக்கிறதல்லவா?

கைராசி இல்லாத டாக்டரை எவன் சீந்துவான்?

கீர்த்திக்குக் கைராசி இருக்கிறது. முகராசி இருக்கிறது. பெண்டாட்டி ராசிதான் இல்லை.

அது என்னமோ ஆரம்பத்திலிருந்தே இருவருக்கும் ஒத்துப் போகவே இல்லை. அவள் கிழக்கே பார்த்தால், இவன் மேற்கே பார்ப்பான்.

எல்லாம், 'நன்றி மறப்பது நன்றன்று' என்று பிள்ளைப் பருவத்தில் படித்ததன் வினை.

கீர்த்தி இத்தனை விசுவாசமுள்ளவனாக இருந்திருக்க வேண்டாம்.

எத்தனை பேர்கள் காரியம் ஆகிற வரையில் காலை பிடிப்பதும் காரியம் ஆனதும் கழுத்தைப் பிடிப்பதுமா இருக்கிறார்கள்!

அதெல்லாம் ஏன் இவனுக்குத் தெரியவேயில்லை?

Vennila

கீர்த்தி, வாசற்புறம் நின்றபடியே மீண்டும் ஹாலை எட்டிப் பார்த்தான். கூட்டம் இன்னமும் 'குறையவில்லை. உமாவின் சலங்கைச் சிரிப்பு ஹால் முழுக்க ஆக்கிரமித்திருக்க, அவளைப் பெற்ற புண்ணியவதி மகளைப் பெருமையுடன் பார்த்தபடி 'ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்தாள்.

அவள் தலைக்கு மேல், சுவரில் தங்க நிறச் சட்டத்துக்குள் டாக்டர் சங்கரமூர்த்தி, அகலமான புன்னகையுடன், ஹாலில் நடக்கும் சம்பாஷணைகளைக் கீழ் பார்வையால் அளந்துகொண்டிருக்கிறார்.

சங்கரமூர்த்தியின் வெங்கலச் சிரிப்பும், 'கீழ்ப் பார்வையில் வெளிப்படும் நவரசமும் அவருடன் பழகியவர்களுக்குள் வெகுப் பிரசித்தம்.

நவரசமென்றால் நிச்சயமாய் நவரசம்தான். பெரிய, சற்று புடைத்த விழிகள். கீர்த்திக்குத் தெரிந்து, அவர் ஒரு நாள்கூடக் கண்களை மலர்த்திப் பிறரைப் பார்த்ததில்லை. எப்பொழுதுமே கீழ்ப் பார்வைதான். அந்தப் பார்வைக்கே சுற்று வட்டாரம் கை கட்டி, வாய் பொத்தி நிற்கும்.

கீர்த்தி பத்து வயசுப் பையனாக, சங்கரமூர்த்தியின் ஆப்த நண்பரும் அவனது தந்தையுமான சிவராமனின் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து நின்றபொழுது—

''சிவராமன் பிள்ளையாடா நீ?''

''ஆமா மாமா.''

''என்ன கிளாஸ் படிக்கிறே?''

''ஆறாவது...''



''மார்க்கெல்லாம் எப்படி?''

''கிளாஸிலே நான்தான் ஃபஸ்ட்.''

''பலேடா பயலே. 'வாத்தியார் பிள்ளை மக்குங்கிற' அந்தப் பழமொழியைத் தகர்த்துட்டே. சரி சரி, உள்ளே போ. மாமி இருப்பா. சாதம் போடச் சொல்லிச் சாப்பிடு. போ, என்னத்துக்கு இப்படித் தயங்கித் தயங்கி நிக்கறே? இனிமே இது உன் வீடு மாதிரி.''

சங்கரன் பார்வையை உயர்த்தி அவனைப் பார்க்காவிட்டாலும் அந்த விழிகளில் ததும்பிய வாத்சல்யம், பத்து வயசுக் கீர்த்திக்குப் புரியாமல் இல்லை.

''சிவராமன் என் பால்ய சிநேகிதன். இதுல ஒரு வேடிக்கைப் பாரு...என்னைவிட அவன்தான் டாக்டருக்குப் படிக்கணும்னு ஒரே பிடியா இருந்தான். எனக்கு அந்தக் காலத்திலே பெரிசா லட்சியம் எல்லாம் ஒண்ணும் கிடையாது. எங்க அப்பா கிட்ட பணம் இருந்தது. இப்ப மாதிரி மெடிக்கல் காலேஜுல சேரப் பகீரதத் தபஸ் செய்யணுங்கற அவசியமும் அந்தக் காலத்திலே இல்லே. 'நம்ம ஸ்டேடஸுக்கு நீ ஒரு டாக்டரா ஆனாத்தான்டா எனக்குப் பெருமை'ன்னு அப்பா சொன்னார். சரிதான்னுச் சேர்ந்துட்டேன். உங்க அப்பாவுக்கு அப்பா ஒரு முசுடு. பிள்ளைய வலுக்கட்டாயமா டீச்சர்ஸ் டிரெயினிங்குக்கு அனுப்பினார். அப்பவெல்லாம் தினமும் வந்து ஒரு பாட்டம் அழுதுட்டுப் போவான். அப்பவே எனக்கு அவனையும் டாக்டருக்குப் படிக்க வைக்கணும்னு ஆசை; முடியல்லே. இப்ப அவன் பிள்ளைக்காவது உதவ முடிகிறதேன்னு எனக்கு எத்தனைத் திருப்தி தெரியுமா?''

அவர் தன் கையிலிருந்த ஸ்டெதெஸ்கோப்பை உருட்டியபடிச் சொல்லும்போது அந்தப் பார்வையில் நீரோட்டம் இருப்பது போலக் கீர்த்தி, அவரது கருணை மிகுந்த வார்த்தைகளில் சொட்டச் சொட்ட நனைந்திருக்கிறான்.

Vennila

அவாது விழியோரத்தில், சின்னப் பெண்கள் மையினால் குருவி வால் இழுத்து விட்டுக் கொள்வது போல அழுத்தமாய் ஒரு சுருக்கம் படிந்திருக்கும்.

அடிக்கடி சிரிக்கும் போது கண்களில் நிஜமாகவே மை தீட்டிக் கொண்டாற் போல ஒரு கவர்ச்சி.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பவர்களுக்கு இது போல, கண்ணோரத்தில் ரேகை படிவது சகஜம் தான்.

சங்கரன் கலகலத்த மனுஷர்தான். உள்ளும் புறமும் ஒரே மாதிரியாகவே இருந்து காட்டியவர். பார்த்த மனிதர்களிடமெல்லாம் அன்பைக் கொட்டியவர்.

அவரை—அப்பேர்ப்பட்ட நல்ல மனிதரை—எதற்குமே அலட்டிக் கொள்ளாத அந்த இரும்பு நெஞ்சத்தை ஆட்டிப் படைத்த ஒரே சக்தி இதோ இன்று மகளின் எதிரில் சோபாவில் கல்குண்டு மாதிரி உட்கார்ந்து, அகங்காரத்துடன் சிரித்துக் கொண்டிருக்கிறது.

வேறு யார்? உமாவின் தாய் மீனாட்சிதான்.

பொழுது விடிந்து, பொழுது போனால் இவளுக்கும் சங்கரனுக்கும் ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் உண்டாகும். வெற்றி தோல்வி, அந்தந்த நேரத்திற்கு எற்றபடி வித்தியாசப்படும். மனைவியிடம் அதிகம் பேசமாட்டார் சங்கரன். அவள் பேசுவதையெல்லாம் வாய் திறவாமல் கேட்டுக் கொண்டிருப்பார். கடைசியில் தன் மனசுக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அதைத்தான் செய்வார். கத்தி அமர்க்களம் செய்தால், ஒரே போடாகப் போட்டு விடுவார். ''இந்தா, இது என் வீடு. இங்கே என் இஷ்டப்படிதான் எல்லாம் நடக்கணும். பிடிக்கலைன்னா கிளம்பு.''



மீனாட்சி பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவாள். அவர் அந்தண்டை போனதும், ஆத்திரம் தாங்காமல் வாயில் வந்தபடி கத்தித் தீர்த்து விடுவாள்.

கீர்த்தி அந்த வீட்டின் பிரஜையானதுமே அவள் தன் ஆட்சேபணையை உயர்ந்த குரலில் ஆரம்பிக்காமல் இல்லை.

''ஆமா இவன் யாரு?''

''என் சிநேகிதன் பிள்ளை. இனிமே இங்கேதான் இருக்கப் போறான்.''

''ஏன், பிள்ளையில்லாத சொத்து பாழாப் போகுதோ? அதான் உமா இருக்கா இல்லை?''

''உமா பெண் குழந்தை. எனக்குப் பிள்ளை ஒண்ணும் வேணும்னு ஆசையிருக்காதா?''

''எனக்கு இனிமே குழந்தையே பிறக்காதுன்னு தீர்மானம் பண்ணியாச்சா?''

''நான் தீர்மானம் பண்ணலை. உனக்கூப் பத்துக் குழந்தை பெத்துக்கக்கூடிய அளவுக்குத் தெம்பிருக்கலாம். ஆனா எனக்குத் தேவை ஒரு சத்புத்திரன்.''

''அப்படின்னா....என் வயித்துலே பிறக்கிறதெல்லாம் அசத்தா இருக்கும்னு உங்க எண்ணமா?''

''இத பாரு, சும்மா என் வாயைக் கிளறாதே. உமாவுக்கு ஆறு வயசாகுது. ஆறு வயசுக் குழந்தை மாதிரியா அவளை வளர்த்திருக்கே நீ? உன்னோட பேசிப் பேசி, அவ இப்பவே பத்து சங்கரன்களைத் தூக்கிச் சாப்பிட்டுடுவா போல இருக்கு. பெண் குழந்தையையே இப்படிச் செல்லம்

Vennila

கொடுத்து வளர்த்திருக்கிற நீ. பிள்ளையைப் பெந்துக்கிட்டா பூலோகம் தாங்காது. ராட்சசப் பிறவியா இருக்கும் அது. பதினைஞ்சாவது வயசிலேயே பெனிசிலின் போட்டுக்க என்கிட்ட வருவான். வேண்டாம் தாயே, ஆளை விடு.''

''அது சரி. இந்தப் பிள்ளையை நீங்க சேர்த்துக்கிட்டா ஆச்சா? எனக்குன்னு ஒரு இஷ்டம் இல்லையா? இவனுக்கு நான் சோறு போட மாட்டேன்.''

''போடலைன்னா போயேன். சமையற்காரன் அம்பி இருக்கான். போட்டுட்டுப் போறான். இப்ப மாத்திரம் என்ன வாழுது? எனக்கே அம்பிதான் சாப்பாடு போடறான். இவனுக்கும் சேர்த்துப் போட்டுட்டுப் போறான்.''

''இவனை எனக்குப் பிடிக்கல்லே. நீசல். முழியைப் பார்த்தாலே பத்திட்டு வருது.''

''பார்க்காதே. கண்ணை இறுக்க மூடிக்கோ. டேய், பயலே. நீ வாடா. உன்னை ஸ்கூல்லே 'சேர்த்துப் படிக்க வைக்க நானாச்சு. என்ன அந்த மாமியையே வச்ச கண் வாங்காமல் பார்த்துட்டு இருக்கே? பயமா இருக்கா? எனக்குக் கூடக் கல்யாணமான புதுசுல இவளைப் பார்க்கப் பயமாத்தான் இருந்தது. நாளடைவில் எல்லாம் சரியாப் போயிட்டது. உனக்கும் பழகிப் போயிடும். நீ வா.''

கீர்த்தியின் கையைப் பற்றியவாறு விருட்டென நகர்த்தார் சங்கரன். பத்து வயதுச் சிறுவனுக்கு எல்லாமே பிரமிப்பாகத்தான் இருந்தது.

என்ன கத்து கத்துகிறாள் இந்த மனுஷி! யாராவது புருஷனிடம் இப்படி நடந்து கொள்வார்களா? மற்றவர்



களைப் பற்றித் தெரியாவிட்டாலும் தன் வீட்டில் இது போல ஒரு சம்பவம் நடந்து, அவன் பார்த்ததில்லை.

அம்மா சாது? பரம சாது. கன்னத்தில் அறைந்தால் வாங்கிக் கொள்கிற அளவுக்கு அப்பாவி.

அப்பாவுமே அம்மாவைக் கடிந்து கொள்கிற ரகம் இல்லை. அவ்வளவு ஏன், குழந்தைகள் எதிரில் பேசிக் கொள்வது கூடச் சங்கோஜத்துக்குரிய விஷயமாய் இருந்தது அவர்களுக்கு.

கீர்த்தி விவரம் புரியும் வயதை அடைந்தபோது அவன் இதுபற்றி நிறையவே யோசித்திருக்கிறான்.

அவனுக்குத் தெரிந்து, அம்மா, அப்பாவின் கையில் கூடத் தண்ணீர் டம்ளரைக் கொடுத்ததில்லை. ஆனால், அதற்காக இப்பொழுது உமாவுக்கும் அவனுக்கும் இடையில் இருக்கும் விரிசல் போல் எந்தவொரு பிளவும் இல்லை. அது என்னமோ, கீர்த்தியின் பெற்றோரிடையே ஓரிரண்டு வார்த்தைகளும் குழந்தைகளின் மூலமாகத்தான்.

இப்படிப்பட்ட அம்மாவும் அப்பாவும் எப்படி மூன்று குழந்தைகளைப் பெற்றுக் கொண்டார்கள்! கீர்த்திக்கு— வளர்ந்த கீர்த்திக்கு— இதெல்லாம் மகா ஆச்சரியம்.

அப்பாவும் அம்மாவும் நடத்திய வாழ்க்கையில் சத்தமில்லாவிட்டாலும், சந்தோஷக் கவிதைகளின் சந்தம் மிகுந்திருந்தது.

அம்மா, அப்பாவுக்குப் பணிவிடை செய்வதற்காகவே தான் பிறவி எடுத்ததுபோல அதிலேயே ஒன்றியிருப்பாள். குழந்தைகள்கூட அவளுக்கு இரண்டாம் பட்சம்தான்.

Vennila

''கீர்த்தி, தம்பிப் பாப்பா அழறான். அப்பா பரிட்சை பேப்பர் திருத்திட்டிருக்கார். அவனைத் தூக்கிட்டு அந்தப் பக்கம் போ.''

''இந்தா கோமு, அப்பா குளிச்சிடட்டும். அப்புறம் நீ குளி. அவருக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு பாரு.''

''அடேய் கீர்த்தி, எனக்காக ஒரு காரியம் செய்யேன். அப்பா ராப் பகலா இருமறார். கிளாஸ்லே பசங்களோட கத்திக் கத்தி சூடு எறிப் போச்சு. கோடி வீட்டு மாமி கிட்ட போய் இந்தக் கிண்ணத்துல நெய் வாங்கிட்டு வாடா. நான் கேட்டேன்னு கேளு. கொடுப்பா. இந்த வெள்ளிக்கிழமை வெண்ணெய்க்காரன் வந்ததும் வாங்கிக் காய்ச்சி தந்துடறேன்னு சொல்லு.''

அப்பப்பா... அம்மாதான் புருஷனுக்காக என்னமாய் உருகியிருக்கிறாள்!

நெய் வாங்கிச் சாப்பாட்டில் சம்பிரமமாய்ச் சேர்த்துக் கொள்ளக்கூடிய வசதியுள்ள குடும்பமா அது? இல்லையே!

கீர்த்திக்கும் கோமுவுக்கும் குழம்புச் சோற்றுக்கு நல்லெண்ணெய்யை விடும் அம்மா, அப்பாவுக்கு மாத்திரம் விழுது நெய்யை ஆவி பறக்கும் சாதத்தின் மீது ஊற்றுவாள். கோமு சின்னப் பெண்ணானதால், அத்தனை சூட்சுமம் தெரியாது. கீர்த்தி மட்டும் தட்டில் உள்ள சாதத்தைப் பிசைந்தபடியே பெற்றோரை ஓரக்கண்ணால் பார்ப்பான்.

சாதத்தின் மீது படர்ந்த நெய் உருகி ஒவ்வொரு சோற்றுப் பருக்கையினுள்ளும் ஊடுருவுகிற அந்த நேரத்தில், அப்பா, சடக்கென நிமிர்ந்து அம்மாவை ஒரு பார்வை பார்ப்பார்.



''எது நெய்?''

''உங்களுக்காகத்தான்.... ராத்திரி முழுக்க இருமினீங்களே....''

''வாங்கினியா?''

''இல்லே. கோடி வீட்டம்மாகிட்டேயிருந்து ஒரு கிண்ணம்.... கோவிச்சுக்காதீங்க. வர்ற வெள்ளிக்கிழமை வெண்ணெய்க்காரன் வந்ததும்....''

''அடி அசடே, வெறும் வறட்டு இருமல்.... எப்படி வந்ததோ அப்படியே போயிடும். இதுக்காகக் கடன் வாங்குவியோ. அதுவும் குழந்தைகளை விட்டுவிட்டு எனக்கு மாத்திரம்.... இது என்னடி ஓர வஞ்சனை? எந்த வஞ்சனை பண்ணினாலும் பந்தி வஞ்சனை பண்ணாக் கூடாதுடி. குழந்தைகளை விடவா எனக்கு என் உடம்பு உசத்தி?''

''உங்களுக்கு ஒசத்தியோ இல்லையோ! எனக்கு நீங்கதான் எல்லாம். பேசாமே சாப்பிடுங்க. சாதம் ஆறிப் போகும். எற்கெனவே புழுங்கல் அரிசி— அதுவும் நெத்து நெத்தா, வெருவேனான்னு இருக்கு. இதுல ஆறப் போட்டா.... சாப்பிடுங்க.''

மேற்கண்ட சம்பாஷணை அவர்களிடையே நடந்திருக்க வேண்டும். வார்த்தைகளின் ஓசை இல்லாவிட்டாலும் பார்வையில் இந்த வசனங்கள் அவர்களுக்குள் நடந்திருக்கும். அப்பாவின் கண்களில் தென்படும் கலக்கமும் அம்மாவின் பெரிய விழிகளில் சுடர்விடும் பாசமும்....

எல்லாம் கண்ணிமைக்கும் நேரம்தான். வாய்ப் பேச்சை விடவும் வேகமாய்.... தந்தியடிப்பது போல....

Vennila

அப்பாவும் தானாகட்டும். தன் பிரியத்தை எத்தனை பூடகமாய் மனைவியிடம் காண்பிப்பார்!

என்றைக்குமே, கீர்த்தியின் தாய் தன் கணவர் சாப்பிட்டு விட்டுப் போன எச்சில் இலையில்தான் சாப்பிடுவாள்.

பத்து வயது கீர்த்திக்கு இதெல்லாம் புரியாத மர்மமாகவே இருக்கும்.

''எம்மா, நீ வேற இலை போட்டுக்க மாட்டேங்கறே?''

''எதுக்குடா வீண் செலவு?''

''எச்சில் இலையில சாப்பிட என்னமோ போல இல்லை?''

அம்மா அவனுடைய கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்ல மாட்டாள். மெல்லியதாய்ப் புன்னகைப்பாள். அத்தனைதான்.

கீர்த்திக்கு இந்த எச்சில் இலை விவகாரம் போலவே இன்னொன்றும் புரியாத புதிர்.

என்றைக்குமே சாப்பாட்டை எறியக்கூடாது என்றும் அளவுக்கு மேல் தட்டில் போட்டுக் கொண்டு தின்ன முடியாமல் சாக்கடையில் கொட்டுவதைப் போல தேசத் துரோகம் வேறு எதுவுமே இல்லையென்றும் படித்துப் படித்துச் சொல்லும் அப்பா, தான் மட்டும் ஒரு நாளைப் போல தினமும் எதையாவது இலையில் மிச்சம் வைத்து விட்டு எழுந்திருக்கிறாரே, ஏன்?

'வாழைக்காய் பொடிமாஸ் எத்தனை ஜோரா இருந்தது? அம்மா போடறப்போ அளவே தெரியாமே நானும் கோமுவும் போட்டி போட்டுட்டுத் தின்னோமே.



இந்த அப்பா மாத்திரம் அத்தனை நல்ல பொடிமாஸை ஏன் எறிகிறார்? இலையில் போட்டதை எறிகிற மாதிரியா நம் குடும்ப நிலைமை இருக்கு? இப்படி மிச்சம் வைக்காமல் போடறப்பவே 'போதும்னு' சொல்லியிருந்தால் மத்தியானம் மோர் சாதத்துக்காவது தொட்டுட்டிருக்கலாமே!' கீர்த்தி பொருமலோடு அப்பாவின் இலையைப் பார்ப்பான்.

அம்மா அந்த இலைமுன் அமர்ந்து, தலைகுனிந்தபடி பொடிமாஸை—அப்பா மிச்சம் வைத்து விட்டுப் போனதை—சாதத்துடன் சேர்த்துப் பிசைந்து கொண்டிருப்பாள்.

''அம்மா....''

''உம்.''

''தினமு ம்இந்த அப்பா, கறியையோ, கூட்டையோ எறிஞ்சிட்டுப் போறாரே, இவர் மாத்திரம் எறியலாமோ?''

''பெரியவங்களை அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அவர் எறிஞ்சால் என்ன, நான் சாப்பிட்டுடறேன் இல்லையா, வீணாப் போகலையே?''

''அது எப்படி? இங்கே நீ இருக்கே, சாப்பிடறே. வெளியிலே எங்கேயாவது கல்யாணம் கார்த்திகையிலே போய், இவர் இது மாதிரி எறிந்தால் யார் சாப்பிடுவாங்களாம்?''

''அந்த மாதிரி சாப்பிடறப்ப எறியமாட்டார்.''

''வீட்டிலேயும் அதே மாதிரி சாப்பிட்றதுதானே.''

''போடா தடியா, பொம்பிளைங்க சாப்பிடற இடத்திலே உனக்கென்ன வேலை?''

அம்மா உடனே பேச்சை மாற்றுவாள். அவளை அந்த இடத்தில் நிற்க விடாமல் துரத்துவாள்.

Vennila

இன்றைய கீர்த்திக்கு அப்பாவின் செய்கைக்குக் காரணம் பொட்டிலறைந்தாற்போலப் புரிந்தது.

ஒருவர் உண்ட இலையில் மற்றவர் உண்பது, சுகாதாரமான, நாகரிகமான, சுத்தமான செய்கை இல்லையென்று இன்று பெரிய டாக்டரான இவன் வாதிடலாம். இருந்தாலும் அன்று அப்பா, அம்மாவின் மீது வைத்திருந்த பாசம் இதிலேயே எத்தனை அற்புதமாய் விளங்கியது!

பள்ளிக்கூட வாத்தியாரான அவரால் தன் மனைவிக்குப் பட்டுப் புடைவையோ, நகையோ, ஒரு முழம் பூவோ வாங்கித் தரச் சக்தியில்லாமல் இருந்தாலும் அடுப்படியில் என்ன மீதி இருக்கிறதோ என்கிற சிந்தனையும், தனக்காக மாடாய் உழைக்கும் பெண்டாட்டிக்கு, சமைத்த பண்டத்தில் எதுவுமே இல்லாவிட்டால் என்னாகும் என்ற பரிதவிப்பும் நிறைய இருந்தன.

''என்ன, உன்னைத்தானே?''

''சொல்லுங்க.''

''பொடிமாஸ் ரொம்ப நன்றாயிருந்தது. பசங்களைச்சுக் கட்டிட்டாங்க போல இருக்கே! உனக்கு ஏதாவது இருக்கா! இல்லே இருப்புச் சட்டிதான் மிச்சமா?''

''என்னைப் பத்தி என்ன...எனக்கு மோர் சாதமும் துனி ஊறுகாயும் போதும்.''

''நீ இப்படிச் சொல்லுவேன்னு தெரியும். அதனாலத்தான் இலையிலே கொஞ்சம் பொடிமாஸ் வச்சிருக்கேன். எடுத்துக்கோ. எப்பவும் என்னைப் பத்தியே நினைச்சிட்டிருந்தாப் போதுமா? உன் வயித்தையும் கவனிச்சுக்க வேண்டாமா?''



அப்பா எச்சில் இலையில மிச்சம் வைத்துவிட்டு மட்டும் எழுந்திருக்கவில்லை; அம்மாவுக்கு அந்த இலையில் காதலைக் கொட்டி ஒரு காவியமே எழுதிவிட்டுத்தான் எழுந்திருக்கிறார் என்பது கீர்த்திக்குப் புரிய எத்தனை நாளாயிற்று?

ஒருவருடன் மற்றவர் பேசினால்தானா? ஒரு நாளைக்கு இரண்டு தரம்—காலையும், இரவும்—மறக்காமல் அப்பா எழுதும் இந்தக் காதல் கடிதங்களை விடப் பேச்சுவார்த்தைகள் அத்தனை சுவையாக இருந்திருக்குமா என்ன?

அப்பேர்ப்பட்ட அப்பாவுக்கு உடம்பு ஏதோ படுத்தியதால் இருமி இருமி, நெஞ்சு வெறும் தகரப்பெட்டி மாதிரி ஆனதால் வேலூர் ஆஸ்பத்திரிக்குப் போய் சிகிச்சை அளித்தால்தான் தேவலை என உள்ளூர் டாக்டர்கள் சொன்னதால் அம்மா, ஆறு வயது கோமுவையும் நாலு வயது தம்பியையும் அழைத்துக்கொண்டு, அப்பாவை வேலூர் ஆஸ்பத்திரியில் சேர்க்கக் கிளம்பிவிட்டாள்.

கீர்த்தியின் படிப்புதான் பாதிக்கப்படும்போலிருந்தது. தனக்கு என்ன ஆனாலும், தன் பிள்ளை படித்துப் பெரிய மனிதனாவதில் எவ்வித இடையூறும் வந்துவிடக்கூடாது என்பது சிவராமனின் தீர்மானம்.

வேலூர் ஆஸ்பத்திரியில் சேர்ந்தவுடன் சென்னை சென்ற தன் சிநேகிதர் ஒருவரிடம் கீர்த்தியையும், சங்கரனுக்கு ஒரு கடிதத்தையும் கொடுத்து அனுப்பிவிட்டார்.

அதுமுதல் சங்கரனின் பாதுகாப்பில் கீர்த்தி வளர்ந்து வருகிறான். நேரம் கிடைக்கும்பொழுது, கீர்த்திக்கும் வாராந்திர விடுமுறை கிடைக்கும்பொழுது, அவனையும் அழைத்துக்கொண்டு வேலூர் போய் வருவார் சங்கரன்.

Vennila

மீனாட்சி தன் பாட்டுக்குப் புலம்பிக் கொண்டேயிருப் பாள்.

''நல்ல சிநேகிதம் வந்து வாய்ச்சிருக்கு நான் இல்லே, கிழமை இல்லே. மத்த நாளிலேதான் நர்ஸிங்ஹோம், நர்ஸிங்ஹோம்னு அதைக் கட்டிட்டு அழறார்ன்னா, சனி ஞாயிறில் இவர் வீட்டோட இருந்ததும் போச்சு. வாரா வாரம் போய்ப் பார்க்கலைன்னா என்ன? இந்தக் கஷ்டம் என்னிக்கு ஓயப் போறது! படுக்கையில் கிடக்கிற அந்த ஆள் தானாட்டும், ஒண்ணு தேறி எழுந்து உட்காரணும், இல்லே சட்டுபுட்டுனு மூட்டையைக் கட்டணும். இப்படியா எல்லாருக்கும் தொந்தரவா....''

சங்கரன் தன் நண்பனைத் தனது நர்ஸிங்ஹோமிற்கே அழைத்து வந்துவிடவேண்டும் என்றுதான் பிரயத்தனப் பட்டார். சிவராமன்தான் பிடிவாதமாய் மறுத்துவிட்டார்.

''உனக்கு இப்ப நான் கொடுக்கிற தொந்தரவே போதும். பட்டணவாசத்திலே நானும் என் குடும்பமும் வேற வந்து உனக்கு மேலும் தலைவலியைக் கொடுக்க வேண்டாம்.''

''அதெல்லாம் ஒரு சிரமுமில்லை. அடுத்த வாரம் நானும் கீர்த்தியும் வர்றப்ப நீங்க எல்லாரும் என்னோட கிளம்பத் தயாரா இருக்கணும்....''

கண்டிப்பும் கனிவும் ஒரு சேரச் சொல்லிவிட்டு வந்தார் சங்கரன். ஆனால் அடுத்த வாரம் வரையில் காத்திருக்க வில்லை சிவராமன்.

தந்தி வந்ததும், இவர்கள் அலறிக்கொண்டு போனதும்....'த்சு, அதெல்லாம் மறுபடியும் நினைத்துப் பார்க்கக்கூடாது.'



கீர்த்தி, அப்பாவின் இறுதிப் பயணத்தைத் தன் நினைவிலிருந்து ஒதுக்க முயலுவான். அந்த முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டாலும் ஒரேயொரு சம்பவத்தை மட்டும் அவனால் மறக்கவே முடியாது.

அம்மாவின் தாய்வழி உறவினர் வீட்டிலேதான் பத்து நாள் காரியமும் நடந்தது. அம்மா அன்ன ஆகாரமில்லாமல் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தாள். இரைந்து அழக்கூடத் தெம்பில்லை.

பதின்மூன்றாம் நாளன்று பொட்டில்லாத, பழைய தேஜஸ் இல்லாத அம்மாவைச் செத்த பிணத்தைத் தூக்கி உட்கார வைப்பது போல எல்லாருமாய்க் கூடிச் சேர்ந்து இலை முன் உட்கார்த்தி வைத்தார்கள்.

''இந்தா, ஆனதை நினைச்சு அழுதுட்டேயிருக் காதே....இது மாதிரி ஒண்ணு உனக்கு வரவேண்டாம்தான். வந்தாச்சு. இனிமே, இருக்கிறவர்களுக்காகவாவது நீ உசிர் வாழ வேண்டாமா? பிடிக்கறது, பிடிக்கலை—இந்த நினைப்பையெல்லாம் ஒதுக்கி வை. ஏதோ கொஞ்சம் சாப்பிடப் பாரு. சோறும் தண்ணியும் உள்ளே போனால் தான் துக்கம் அடங்கும். பொய்யில்லேடி. வயிறு காலியா இருக்க இருக்க, நெஞ்சுக்குள்ளே நெருப்பா அழுகை குமைஞ்சிட்டேதான் இருக்கும். ஒரு வாய் அள்ளிப் போட்டுக்க.''

யாரோ ஒரு அம்மாள், அவனது தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சொல்ல, கீர்த்தி, அம்மாவின் முன் போடப்பட்டிருந்த இலையையே பார்த்தபடி நின்றான்.

வழக்கமாய் அப்பா சாப்பிடும் தையல் இலை அல்ல அது. நுனி வாழையிலை. புத்தம் புதுசாய் அதில் பாயசமும் பருப்பும் பச்சடியும்....



Vennila

இலையில் போட்ட சாதத்தைப் பார்த்ததும் அம்மா "ஓவென' அழுதான். அவள் எதற்காக அழுகிறாள் என்பது புரியாமலேயே அவனும் அவளுடன் சேர்ந்து அழுதான்.

அவனுக்குத் தெரிந்து, அம்மாவுக்காகப் புது இலை போடப்பட்டு, மிச்சம் வைக்காத உணவை—அவனுக்கே அவனுக்கென்று பரிமாறப்பட்ட உணவை—அவன் சாப்பிடத் தொடங்கியது அன்று முதல்தான்.

கீர்த்தி மட்டும் அப்பாவின் காரியங்கள் முடிந்த கையோடு சங்கரனுடன் கிளம்பி விட்டான்.

அம்மா, அவர்களுடன் வர மறுத்துவிட்டாள்.

"இவனை நல்லபடியாகப் படிக்க வையுங்க. அது போதும். அவரோட ஆசையும் அதுதான். நான் இப்படி விலகியே இருக்கேன்."

"மத்த ரெண்டு குழந்தைகளையும் என்னோட அனுப்புங்க. நீங்க வச்சிட்டுச் சிரமப்பட வேண்டாம்."

"ஐயய்யோ, இவன் ஒரு சுமை போதும் உங்களுக்கு. இதுகளைப் பத்தி வேற கவலைப்படணுமா? நான் பார்த்துக்கறேன். முடியலைன்னா அவரோட அண்ணா ஒருத்தர் திருச்சியில இருக்கார். பத்தாம் நாள் கூட இங்கே வந்திருந்தார். அவர் கிட்ட அனுப்பிவைக்கிறேன்.

அம்மா கீர்த்தியின் கன்னத்தை விரலால் நீவி முத்தம் கொடுத்து அழுதபடி அனுப்பி வைக்க, இங்கே மீனாட்சி அவனது கன்னத்தில் விரலால் இடித்தபடி வரவேற்றாள்.

"ஏழரை நாட்டுச் சனி ஒழிந்ததுன்னுப் பார்த்தால் சனிக்கே சனி பிடிச்சு, இருந்த இடத்துக்கே திரும்பி வந்துட்ட மாதிரி இவனை எதுக்கு மறுபடியும் இங்கே அழைச்சிட்டு வந்தீங்க?"



"என் இஷ்டம்."

"நான் இந்த வீட்டுல இருக்கறதா போகிறதா?"

"அது உன் இஷ்டம்."

சங்கரன் கீழ்ப் பார்வையால் கீர்த்தியைப் பார்த்தபடி பெண்டாட்டிக்குப் பதிலளித்தார்.

கீர்த்தி தலை குனிந்து நின்றான். அன்று குனிந்த அவனது தலை இன்று வரையில் நிமிரவே இல்லையே!

## 2

அன்று அவனுக்காகத் தன் மனைவியிடம் கட்சி கட்டிக் கொண்டு வாதாடிய சங்கரன், இன்று உயிரோடு இருந்திருந்தால் அங்கு நடப்பதே வேறாக இருந்திருக்கும்.

புருஷனை அலட்சியம் செய்யும் உமாவுக்குத் தன் வார்த்தைகளாலேயே சவுக்கடி கொடுத்திருப்பார்.

கீர்த்திக்கு அவர் செய்த ஒரேயொரு துரோகம் தன் பெண்ணைப் பற்றியச் சகல விவரங்களும் தெரிந்தும் அவளை அவனுக்கு மணமுடித்ததுதான்.

கீர்த்தியை மட்டம் தட்டும் விஷயத்தில் 'அம்மாவே தேவலை' என்பது போல நடந்து கொண்டாள் மகள்.

"அம்மா, அவனோட உட்கார்ந்து நான் சாப்பிட மாட்டேன். அவனை அப்புறமாச் சாப்பிடச் சொல்லு."

"என் சினேகிதங்க எல்லாரும், 'இந்த அழுக்கு மூட்டை யாருடி?''ன்னு கேலிப் பண்றாங்க. இவனை அந்தண்டைப் போகச் சொல்லு."

Vennila

''டேய், நீ புத்திசாலின்னா உன்னோட இருக்கட்டும், நான் பிராக்ரஸ் ரிப்போர்ட்டைக் காண்பிக்கறப்போதான் நீயும் காண்பிக்கனுமா?''

''இந்தா உன் சட்டையை எல்லாம் என் ஃபிராக்கோட பக்கத்துல உலர்த்தாதேன்னு எத்தனை தடவை சொல்லி யிருக்கேன்? உன் அப்பா டி. பி. யிலே செத்தார். உனக் கும் நாளைக்கு டி. பி. வரும். டி. பி. ஒட்டுவாரொட்டி. உன் காத்துப் பட்டாலே எனக்கும் வியாதி வந்துடும். சட்டையை எடு. எடுடான்னா....''

''உன் தட்டு, தம்ளர் எல்லாத்தையும் கொல்லைப் பக்கம் வெராந்தாவோட வச்சுக்கோ. இங்கே கொண்டு வந்து எல்லாச் சாமான்களோடும் கலக்காதே.''

கீர்த்திக்கு அழுகை கொப்பளிக்கும். அந்தக் கணமே அந்த வீட்டை விட்டு வெளியேறி, கிடைக்கும் பஸ்ஸில் ஏறி, அம்மாவைத் தேடி ஓட வேண்டும் போல இருக்கும்.

'அம்மா....அம்மா, என்னை ஏன் இங்கே விட்டே? நானும் கோமுவோட, தம்பிப் பாப்பாவோட, உன் கூடவே இருந்திருப்பேனில்லே? நான் படிச்சுப் பெரிய டாக் டராகலைன்னா என்ன? அப்பா மாதிரிச் சாதாரணப் பள்ளிக்கூட வாத்தியாரா ஆனாப் போதாதா? எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலே.'

அவன், மனசுக்குள் ஊமை அழுகையாய் அழுவான். அந்த வீட்டிற்கு வந்த பிறகு, சிரிப்பென்பதே மறந்து விட்டது அவனுக்கு. சங்கரனுக்கு அவன் உள்ளத்து உணர்ச்சிகள் புரியாமல் இல்லை.

சின்னப் பையன், ஆட்டமும் பாட்டமுமாக இருக்க வேண்டிய வயசு. இப்படிக் களையிழந்து உட்கார்த்திருக் கிறானென்றால்....

''மீனாட்சி, அவனை ஏதாவது சொன்னியா?''

''ஏன், எனக்கென்ன வம்பா?''

''பின்னே ஏன் சுரத்தேயில்லாமல் இருக்கான்?''

''அதுக்கென்ன செய்யறது? அவனுக்குத் தினமும் தயிரும் வெண்ணையும் பாலும் பழமுமாக வச்சுத் திணிக் கத்தான் செய்யறேன். ஏதாவது அவன் உடம்பிலே ஒட்டி னாத்தானே.''

''சரி. இனிமே அவனை என்கூடச் சாப்பிடச் சொல் றேன். உமா எங்கே?''

''என்னப்பா?''

''கீர்த்தியை நீ விளையாட்டில சேர்த்துக்கறதில் லையா?''

பேசாமல் உம்மென்று இருப்பாள்.

''உனக்கு அவனோட விளையாடப் பிடிக்கலைன்னா விடு. நான் அவனுக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான் களை வாங்கித் தரேன். நாளையிலேயிருந்து நான் நர்ஸிங் ஹோம் போறப்ப என்னோட கார்லேயே அவனைக் கொண்டு போய் ஸ்கூல்லே விடறேன்.''

அவரது வார்த்தைகளைக் கேட்டுச் சீறிக் கொண்டு வந்தாள் மீனா. ''நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்க் கறேன். அவனுக்கு நீங்க இத்தனை இடம் கொடுக்கற தைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமா இருக்கு. நிஜத் தைச் சொல்லுங்க. இவன் உங்க சிநேகிதன் மகன் தானா, இல்லே....''

Vennila

அவன் வார்த்தைகளை முடிக்குமுன், பளாரென அவள் கன்னத்தில் விழுந்தது அறை.

பொறி கலங்கிப் போய்விட்டாள் மீனாட்சி. இத்தனை நாள், அவர்களுக்குள் எத்தனையோ தகராறுகள் வந்திருக்கின்றன. ஆனால், சங்கரன் கை நீட்டி அடிக்கும் அளவுக்குப் போனதில்லை.

அன்று முதல் கீர்த்தி, அவளது பரம வைரியாகப் போய் விட்டான். உமாவோ, தன் தந்தையின் அன்பில் பங்கு போட்டுக் கொள்ள வந்த பங்காளியாகவே கருதத் தொடங்கினாள்.

'இந்தா. உன் சங்காத்தமே வேண்டாம். உன் பிறந்த வீட்டைப் பார்க்கப் போய்ச் சேர்' என்று சங்கரன் சொல்லிவிட்டால், மீனாட்சி எங்கே போவாள்?

செல்வமும் அந்தஸ்தும் சங்கரனை மணந்த பின்பு வந்து சேர்ந்தவைகளே தவிர, பிறந்த வீட்டில் இரண்டு வேளைச் சோற்றுக்கு வழியில்லை.

ஏழைக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தால், தனது சுபாவத்துடன் ஒத்துப் போய்ப் பதவிசாகக் குடித்தனம் செய்வாள் என்கிற எண்ணத்தில்தான் அவர் மீனாட்சியை மணந்தாரே தவிர, இவளது அழகையோ, படிப்பையோ பார்த்து இல்லை.

ஆனால் மீனாட்சியோ தன் தலையில் சூட்டப்பட்ட கிரீடத்தினால் தலை கனத்துப் போய்விட்டாள்.

இன்று அவளுக்கு எதுவுமே, யாருமே லட்சியமில்லை. சண்டை உச்சக்கட்டத்துக்குப் போய், ''உன் பழைய நாட்களை நினைத்துப் பார்!'' என்று சங்கரன் சொல்லிவிட்டால் மட்டும் முகம் கறுத்துப் போய்விடுவாள்.



அவர் அது மாதிரியெல்லாம் பேசக் கூடியவரல்லதான் பேசிவிட்டால்....?

இந்த ஒரு பயமே அவளை மேற்கொண்டு கூச்சல் போட விடாமல் வாயைக் கட்டிப் போட்டது.

போதாக் குறைக்கு, சமீப காலமாகச் சங்கரன் யாரோ ஒரு தேவதாசிப் பெண்ணுடன் சுற்றுவதாக வேறு அவள் கேள்விப் பட்டாள்.

சங்கரனா! இந்தச் சங்கரனா?

ஊர் உலகத்தைப் பற்றிக் கவலைப் படாதவர்தான் சங்கரன். இருந்தாலும் அவருக்கென்று ஒரு மனசாட்சி, அவருக்கென்று ஒரு நேர்மை, நியாயம் இருக்கிறதல்லவா?

மனிதர் அதுமாதிரி அலைகிற ரகம் என்று சத்தியம் செய்தால்கூட யாரும் நம்பமாட்டார்கள். ஆனால், மீனாட்சிக்கு மட்டும் இந்தச் சந்தேகம் எப்பொழுதுமே உண்டு.

கீர்த்தியைக் கூட அவள் அதுபோன்ற கண்ணோட்டத்தில்தான் பார்த்தாள்.

''சனியன், சனியன்! எவள் மூலமாய்ப் பிறந்ததோ....''

மொத்தத்தில் இவர்களின் கருத்து வேறுபாடுகளினால் தனது சின்ன வயசு சந்தோஷங்களையெல்லாம் பறிகொடுத்தது கீர்த்திதான்.

அவனுக்கு மீனாட்சியின் வெறுப்புக்குக் காரணமும் தெரியாது. உமாவின் கடுப்பின் உள்ளர்த்தமும் தெரியாது.

Vennila

சங்கரனின் அன்பு மாத்திரம் புரிந்தது. அதனாலேயே அந்த வீட்டை விட்டு வெளியேற முடியாமல் இருந்தான்.

பள்ளிக்கூட விடுமுறை நாட்களில், அவனைச் சங்கரனே வேலூருக்குப் பக்கத்திலிருக்கும் கிராமத்துக்கும் அழைத்துப் போவார்.

பட்டணத்திலிருந்து பளீரிட்ட சட்டையும் கால்சராயுமாய் வந்திறங்கும் கீர்த்தியைப் பார்த்து, அவன் தாய் மாத்திரமல்லாது, அக்கம் பக்கத்து ஜனங்களே வாய் பிளந்து நிற்பார்கள்.

''வாத்தியாரய்யா வூட்டுப் பையனா? இங்கிலீஷ்காரத் தொரை கணக்கா இல்லே இருக்கான்!''

பக்கத்து வீட்டு ஆயா சொல்லும் பொழுது பெருமையில் பூரித்து நிற்பாள் அவன் தாய்.

கோமுவும் தம்பிப் பயலும் அவனுடன் ஒட்டலாமா வேண்டாமா என்பது போல, கண்களில் மிரட்சி பொங்க, எட்ட நின்றபடி அவனைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

''கீர்த்தி கண்ணா!''

''உம்!''

''சமர்த்தா இருக்கியா? டாக்டர் வீட்டு மாமியைப் படுத்தாமே இருக்கியா?''

''உம்!''

கீர்த்தி தலையைக் குனித்தபடி முனகுவான்.



வேறென்ன சொல்ல முடியும்? 'நான் ஒண்ணும் டாக்டர் வீட்டு மாமியைப் படுத்தறதில்லை. மாமிதான் என்னை ரொம்பப் படுத்தறாள்'—இப்படிச் சொல்லிவிட முடியுமா?

அவன் தலை குனிந்திருந்தாலும், நெஞ்சம் முழுக்க இந்த நினைப்புதான் ஆலவட்டம் போடும்.

'டேய் பயலே, இன்னிக்கு என்ன, சனிக்கிழமையா அடுத்த வெள்ளிக்கிழமை சாய்ங்காலம் வந்து உன்னை அழைச்சிட்டுப் போறேன். ரெடியா இரு.''

சங்கரன், கீர்த்தியின் கன்னத்தைத் தட்டிவிட்டு, காரிலேறி விடுவார்.

கீர்த்தி அவர் சென்று மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருப்பான்.

பெற்றவளோ, மகன் அந்தப் பெரிய மனிதர் வீட்டில் எப்படி வளர்கிறான் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலில் மகனின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

''இருக்கிற இருப்புக்குக் குழந்தை தளதளவென நன்றாக இருக்க வேண்டாமோ? மனிதர், இங்கே வரும் பொழுது வாங்கி வரும் பழங்களையும், பிஸ்கட் பாக்கெட்டுகளையும் பார்த்தாலே மயக்கம் வருகிறதே! இவனுக்குப் பாலும் தயிருமாய்ப் புகட்டாமலா இருப்பார்கள்? ஆன வயசுக்கு, புடலம் பிஞ்சில் கல்லைக் கட்டிவிட்டாற்போல இருக்கிறதே தவிர, உடம்பில் சதைப் பற்றே இல்லையே?''

தாய், மகனின் மெலிந்த கரத்தை ஆதுரத்துடன் வருடியபடி கேட்பாள்.

''நல்லாச் சாப்பிடறியா, இல்லையா?''

Vennila

''ஓ சாப்பாட்டுக்கென்ன? தினமும் காலையிலே இட்லி, தோசைதான். மத்தியானம் கூட்டு, கறியோட சாப்பாடு. நடுவிலே ஒவல்டின், சாயந்திரம் டிபன் ராத்திரி சாப்பாடு.''

''உடம்பைப் பார்த்தா அப்படித் தெரியலையேடா?''

கீர்த்தி, அம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். பக்கத்திலேயே பிஸ்கெட் பாக்கெட்டை எப்படிப் பிரிப்பது என்று தெரியாமல் கையில் வைத்தபடி மலங்க விழிக்கும் கோமுவைப் பாத்தான். ஆரஞ்சுப் பழத்தைத் தோலியை உரித்துவிட்டுத் தின்கிற அளவுக்குக்கூடப் பொறுமையில் லாமல் பழத்தை பல்லால் அழுந்தக் கடிக்கும் தம்பியைப் பார்த்தான்.

''சொல்லிவிடலாமா?, சொல்லிவிடலாமா?''

''சொல்லிவிட்டால் அடுத்த நிமிஷமே அம்மா அவனை மறுபடியும் பட்டணத்துக்கு அனுப்ப வேண்டாமென்று தீர்மானம் பண்ணிவிடுவாள்.

இங்கே இருந்துக்கொண்டு என்ன செய்வது?

கோமு என்ன செய்கிறாள்? தம்பிப் பயல் என்ன செய் கிறான்?

அதெல்லாம் அவனுக்குத் தெரியாதா என்ன? கோமு, அங்கே இருக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் நாலாவது படிக்கிறாள். தம்பிப் பயல் முதல் வகுப்பில் அடியெடுத்து வைத்திருக்கிறான். இவர்களது பேச்சில் படிப்பு விவரம் அதிகம் அடிபடுவதைவிட, பள்ளிக்கூடச் சத்துணவு விவரம்தான் நிறைய அடிபடும்.

''கோமு, நீ கணக்கு சரியாப் போடறதில்லையாமே?



''அடுத்த வீட்டுப் பையன் என்கிட்ட சொல்லிக் கேலி பண்றானே! மூனு மார்க்கும் நாலு மார்க்கும் வாங்கறியாமே?''

''ஆமா... அவன் பெரிய எம்டின். என்னைச் சொல்ல வந்துட்டான். கணக்கு டீச்சருக்கு என்னைக் கண்டாலே ஆகாது. ரெண்டு மூனு தடவை என்னை அவங்க வீட்டுக்கு வரச் சொன்னாங்க. என்னத்துக்குக் கூப்படறாங் கன்னுப் போய்ப் பார்த்தா, 'நாலு படி அரிசி ஊறப் போட்டிருக்கேன். கொஞ்சம் நீயோ, உங்க அம்மாவோ வந்து அரைச்சுக் குடுத்துட்டுப் போங்க''ன்னாங்க.

''நான் டெஸ்ட்டுக்குப் படிக்கணும்; எங்கம்மா கையில் நகச் சுத்து. இப்ப அரைச்சுத் தர முடியாது''ன்னுட்டேன்.

அந்தக் கோவத்துல மார்க்கைக் குறைச்சுப் போட றாங்க. மத்தியானம் லஞ்ச் அவர்லே கூடப் பாரு—என் தட்டுல சாதம் போடறப்போ வேணும்னே குறைச்சுப் போடறாங்க.''

''அம்பி. நீ எத்தனை மார்க்குடா வாங்குவே?''

அதெல்லாம் எனக்குத் தெரியாதுடா. கோமுவைக் கேளு, சொல்லுவா. ஸ்கூலுக்குப் போன உடனேயே கிளாஸ்ப் பானையில் தண்ணி ரொப்பச் சொல்லுவாங்க.''

கூட்ஸ் வண்டி வந்து நிற்கும் பாரு. அப்ப எல்லாருமா தண்ணி பிடிக்க ஓடுவோம். தண்ணி பிடிச்சு வச்சு உடனே கிளாஸ் ரூமைப் பெருக்குவோம்.

மணியடிச்சதும் 'நீராடும் கடலுடுத்த' பாடுவோம். அப்புறம் ஹெட்மாஸ்டர், ''யூனிபாரம் போட்டுட்டு வராதவங்க எல்லாம் வெளியிலே நில்லுங்க. கிளாசுக்குள் போகக் கூடாதுன்''னு கத்துவார். சரிதான்னு வெளியிலே

Vennila

நிப்போம். ஜூனியார்ம் இருக்கிற அன்னிக்கு நோட்டு வாங்கக் காசு இருக்காது. எல்லாம் இருந்தா அன்னிக்கு வாத்தியார் வந்திருக்க மாட்டார்.''

''ஏண்டா?''

''வாத்தியார் எங்களுக்கு மாத்திரம் வாத்தியார் இல்லே. இந்த ஊரிலே யார் வீட்டிலே திவசம், ஆண்டு நிறைவுன்னாலும் அவர்தான் மந்திரம் சொல்ல வருவார். அதனால, ஊருல யார் வீட்டில விசேஷம்னாலும் அவர் ஸ்கூலுக்கு வரமாட்டார். மத்தியானத்துக்கு மேல் வந்தா உண்டு. அதுக்குள்ள நாங்க ஸ்கூல்ல தர்ற சாப்பாட்டைச் சாப்பிட்டுட்டு, புத்தக மூட்டையைத் தூக்கிட்டு வீட்டுக்கு வந்திடுவோம்.''

''இரு இரு. இப்ப நீ சொன்னதையெல்லாம் அந்த வாத்தியார்கிட்டேயே போய்ச் சொல்றேன்?''

''சொல்லேன். ஆனா, அவர் கேட்க மாட்டார். மாசா மாசம் அப்பாவோட காரியத்துக்கு எல்லாம் அவர் தானே வருவார்! நாமதான் வடை, பாயசத்தோட சாப்பாடு போடறோமே.''

தம்பியைக் கையால் அமர்த்திவிட்டுக் கோமு சொல்வாள்.

''இவன் கிளாஸ் வாத்தியார்தான் என் கிளாஸ் டீச்சரோட புருஷன். பள்ளிக் கூடத்திலே, தினமும் என் தட்டுல மாத்திரம் கொஞ்சமாச் சோறு போடறாங்க இல்லே. அதனால அவ புருஷன் நம்ம வீட்டுல திதி சாப்பாடு சாப்பிட வர்றப்ப, நான் நல்லா ஒரு கை பார்த்துக்குவேன். வடை, அதிரசம் எல்லாம் இரண்டாந் தடவை



வேணுமான்னு அம்மா என்னை விட்டுக் கேட்கச் சொல்லுவாங்க. நான் கேட்கவே மாட்டேன்.

அவரா, ''ஒரு அதிரசம் கொண்டா குழந்தேன்''னுக் கேட்டாலும், ''இதோ கொண்டு வரேன்'னு சொல்லிட்டுப் போய்க் கொல்லைப் பக்கம் நின்னுடுவேன். அவர் சாப்பிட்டு முடிச்சுக் கை கழுவற மட்டும் உள் பக்கம் எட்டியே பார்க்க மாட்டேன்.''

அக்காவின் பழி வாங்கும் படலத்தைக் கேட்டுத் தம்பிப் பயல் 'களுக்' கெனச் சிரிப்பான்.

கீர்த்திக்கோ நெஞ்சே விண்டுவிடும் போல வலிக்கும்.

இவர்களுக்கு எத்தனை எடுத்துச் சொன்னாலும் புரியாது. சோற்றைவிடப் படிப்பு முக்கியம் என்றோ, அல்பத்தனமாய் ஆகார விஷயத்துக்காக இப்படிப் பெரியவர்களை அவமதிப்பது தப்பு என்றோ இவன் எப்படி எடுத்துச் சொல்லுவான்?

சொன்னால், ''உனக்கென்னடா, தினமும் வயிறு முட்டச் சாப்பிடறே! சொல்ல மாட்டே?''

இப்படிக் கோமுவே இடித்துக் காட்ட மாட்டாளா?

இவர்களின் கஷ்டத்தைப் பார்க்கையில் தன் பாடு எவ்வளவோ தேவலை என்று நினைத்துக் கொள்வான் கீர்த்தி.

அந்த வீட்டில் மீனாட்சியும் உமாவும் அவனைக் கரித்துக் கொட்டினாலும் சங்கரன் அவனைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொள்ளாத குறையாகத் தாங்குகிறாரே.

Vennila

சாப்பாடு, தூக்கம், பள்ளிக் கூடத்துக்குப் போய் வருதல் எல்லாமே சங்கரனோடுதான்,

''டேய், நல்லாச் சாப்பிடுடா. கோழி மாதிரிக் கொறிக்காதே...அம்பீ, அவனுக்குத் தயிர் இன்னும் கொஞ்சம் போடு. காய்கறி கீரையெல்லாம் தொட்டுட்டுச் சாப்பிடுடா. நல்லா ரசிக்கச் சாப்பிடத் தெரியணும்.''

''எங்கே சிரசாசனம் போடு பார்க்கலாம். முழங்காலை மடக்காதேடா. நல்லா நீட்டு.''

''அடே கீர்த்தி, காலைல நான் பீச் பக்கம் வாக்கிங் போய் விட்டு வரேனே, தெரியும் இல்லையா? நாளையில இருந்து நீயும் என் கூட வா.''

''ஸ்கூல் படிப்பு அவசியம்தான். அதுக்காக எப்பவும் பாடப் புத்தகத்திலேயே மூஞ்சியப் புதைச்சிட்டு இருக்காதே. வெளி உலகத்திலே நீ தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு. மத்த 'ஜெனரல் நாலெட்ஜ் புக்ஸ்' எல்லாமும் படி. உன்னைச் சுத்தித் தினசரி நடக்கிற உலகத்தை நல்லாப் புரிஞ்சுக்க.

சங்கரன் அவனை அத்யந்த சினேகிதன் போல நடத்தினார். தாய், பிள்ளையைக் கவனிப்பதை விடவும் மேலாக கவனித்தார்.

பதினேழாவது வயது வரையில் கீர்த்தி அறிந்த சங்கரன் வித்தியாசமான மனிதர். குடும்பத்துக்கும் தொழிலுக்கும் இடையே தினசரிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவர்.

பொண்டாட்டியிடம் ஆயிரம்தான் பூசல் இருந்தாலும் ஆபரேஷனுக்காகக் கையில் கத்தியை எடுக்கையில் புதுசாக ஜனனமெடுத்தவர் போல் நடந்து கொள்பவர்.



உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தில், தான் மட்டுமல்லாமல், தன்னைத் தேடிவரும் அத்தனை பேரையும் வாழவைக்க வேண்டும் என்கிற கொள்கையுடையவர்.

பணக்கார நோயாளிகளிடம் அவர் நடத்து கொள்ளும் முறைக்கும், பாட்டாளி வர்க்கத்தினரிடம் அவர் நடந்து கொள்ளும் முறைக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

''என்ன மிஸ்டர் ராம்நாத், பிளட் ஷுகர் ஏகமா ஏறியிருக்கே. அனாவசியமான டின்னர், பார்ட்டி இதுலேயெல்லாம் கலந்துக்காதீங்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? போதாக்குறைக்கு டிரிங்க்ஸ் வேற. பணம் இருந்தா மட்டும் போதாதுய்யா.

''நீங்க சேர்த்து வச்ச சொத்தை, நீங்களும் கொஞ்ச நாளாவது இருந்து அனுபவிக்கணும்னா உடம்பை நல்லபடியாப் பார்த்துக்கணும். விஸ்கியும் ஐஸ்க்ரீமும் ஸ்வீட்டும் நாக்கிலேயிருந்து தொண்டையிலே மட்டும் மட்டும்தான் சுகமா இருக்கும். தொண்டைக்குக் கீழ் போயாச்சுன்னா நமக்கு,எமன் அதுதான்.

''இன்சுலினை அதிகமாக்கணும். தினமும் ஊசி போட்டுக்க வாங்க. இந்தப் பக்கம் இன்சுலினை ஏத்திட்டு அந்தப் பக்கம் குலோப்ஜாமுனையும், ஸ்காட்ச்சையும் உள்ளே இறக்காதீங்க.''

''ஹீஹி—நீங்க இத்தனை சொன்னதுக்கு அப்புறம், அதையெல்லாம் விரலாலே சீந்துவேனா? நாளையிலேர்ந்து ஊசி போட்டுக்கறேன். நீங்க வீட்டுக்கே வந்து ஊசி போட்டுட்டுப் போயிட்டால் தேவலை. சிரமம் தரேன். மன்னிக்கணும்.''

Vennila

''எனக்கு என்னய்யா சிரமம்? ஊசி போட்டுக்கப் போறது நீங்க. நான் உம்ம வீட்டுக்கு வந்தா, ஒண்ணுக்கு மூணு பங்கு ஃபீஸ் தரப் போறது நீங்க. சிரமம் எனக் கில்லை ஐயா, உமக்குத்தான்.''

''பணத்தைப் பத்தி என்ன? வேண்டியது தரேன்.''

''தாங்க, நிறையத் தாங்க. ஒவ்வொரு தடவையும் நாக்கு சபலப்படற சமயத்துலே எல்லாம், பக்கத்துலேயே ஒரு உண்டியலை வச்சிட்டு, இது விஸ்கிக்கான பணம். இது பாதாம் ஹல்வாவுக்கான பணம்னு போட்டுட்டே வாங்க. கடைசியில மொத்தப் பணத்தையும் என்கிட்ட தாங்க. நான்,உம்ம பேர்ல என் நர்ஸிங்ஹோமுக்கு வர்ற ஏழைகளுக்குப் பாலும் பழமும் ரொட்டியும் வாங்கித் தரேன். புண்ணியத்துக்குப் புண்ணியமாச்சு, உடம்பும் நல்லாயிருக்கும்.''

—இப்படி சிரிக்கச் சிரிக்கப் பேசி, பணக்காரர்களிடமி ருந்து பணத்தைக் கறக்கும் சங்கரன், ஏழைகளிடம் நடந்து கொள்ளும் முறை:

''எம்பா, உனக்கு நான் எத்தனைத் தடவை சொல் லறது? வெறும் மாத்திரை மருந்துகளாலே மாத்திரம் உடம்பைத் தேற்ற முடியாது.''

''நல்லாச் சாப்பிடணும். நீ என்ன வேலையிலே இருக்கே''

''ரிக்ஷா ஓட்டறேங்க''

''வருமானம் போதலையா? ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது நல்ல சாப்பாடாச் சாப்பிடணும்ப்பா.''

அவன் தலை குனிந்து நிற்பான்.

''குழந்தைங்க இருக்கா?''



''உம் நாலு பசங்க.''

''ஆபரேஷன் பண்ணிட்டியா?''

'இல்லை' என்று தலையசைப்பில் சொல்வான்.

''இப்பப் பொண்டாட்டிக்கு எத்தனை மாசம்?''

''மூணு மாசம்ங்க.''

''இப்பவே ஒரு வாய்ச் சோத்துக்குத் திண்டாடற நீ, எந்தத் தைரியத்துலேய்யா அஞ்சாவதைப் பெத்துக்கப் போறே? முதல்லே, பெண் சாதியை ஆபரேஷன் பண்ணிக்கச் சொல்லு. உன் உடம்புலத் தெம்பே இல்லே. மருந்து மாத்திரை டானிக் எல்லாம் நானே தரேன்.''

''எல்லாமாச் சேர்ந்து பத்து ரூபாய்க்குள்ளாற முடியுங் களா? எங்கிட்டே அவ்வளவுதாங்க இருக்கு.''

''நான் உனக்குத் தரப்போற மருந்துக்கெல்லாம் காசு கிடையாதுய்யா. அதெல்லாம் எனக்கு வர சாம்பிள்ஸ் தான். எனக்கு ஃபீஸ் ஒண்ணும் தரவேண்டாம். பத்து ரூபாயிலே நிம்மதியாச் சாப்பிடு.''

''டாக்டரய்யா!''

''ஷ்...கும்பிடெல்லாம் வேணாம். பத்து ரூபாய்க்குப் பட்டைச் சாராயம் அடிப்பியா? அப்படின்னா அந்தப் பணத்தை என்கிட்ட கொடு. உனக்கு மாசம் முழுக்க நல்ல சாப்பாடு போடறேன்.''

வந்தவன், அவரது பேச்சில் வாயடைத்துப் போய் நிற்பான்.

கீர்த்தி, சங்கரனை ''மாமா'' என்று தான் அழைத் தான். அவருடன் கூடவே நர்ஸிங் ஹோம் வரையில் போய் வருவதைப் பழக்கமாக்கிக் கொண்டான்.



Vennila

பதினைந்தாவது வயதில், அவன் டாக்டர் சங்கரனுடன் முதன்முதலாக அந்த வீட்டிற்குப் போனான்.

அன்று முதல் சங்கரனுக்குள் இருக்கும் இன்னொரு சங்கரன் அவனுக்கு அறிமுகமானார்.

வீடு, பழங்காலத்தியது. வீடு பெரிதாக இருந்த அளவுக்கு, அதில் இருந்த நாற்காலி சோபாக்கள் அத்தனை வசதியாய் இல்லை.

வாசற்புறமிருந்த நித்தியமல்லிப் பந்தலைத் தாண்டி உள்ளே சென்றால், இருட்டான, குளுமையான தாழ்வாரம். அதைத் தாண்டி உள்ளே போனால் பெரிய கல்யாணக் கூடம்.

கூடத்தில் நல்ல தேக்கு மரத்தில் வேலைப்பாடு களுடன் கூடிய பழங்கால ஊஞ்சல்.

மற்றபடி ஓரிரண்டு ஒற்றை சோபாக்கள். அவை களும் சரியாகக் கவனிக்கப்படாத காரணத்தினால் பிய்ந்து போய்த் தேங்காய் நார் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.

கூடத்துச் சுவரில், நாலு பக்கமும் நடன முத்திரை களுடன் ஒரு பெண் பலவித பாவங்களில் அபிநயிக்கும் பெரிய புகைப்படங்கள்.

ஒரேயொரு புகைப்படத்தில் மட்டும் அபிநயிக்கும் பெண், சாதாரணமாக நின்று கொண்டிருக்க, அவள் பக்கத்தில் ஏகப்பட்ட நகைகளுடன் நாற்பது வயது அம்மாள், ''என் பெண் பெரிய நாட்டியக்காரியாக்கும்'' என்கிற மிதப்புடன் நின்றிருப்பாள்.

கீர்த்தி அந்த வீட்டுக் கூடத்து வரைதான் ஆரம்ப காலத்தில் சென்றிருக்கிறான். கூடத்தைத் தாண்டிய தில்லை.



இவர்கள் அந்த வீட்டுக்குள் நுழையும் போதே, கார் சத்தம் கேட்டு ஓட்டமும் நடையுமாய் முப்பத்தைந்து வயது மதிக்கத் தகுந்த பெண்மணியொருத்தி ஓடி வருவாள். அவள் பின்னாலேயே தலைப்பைப் பிடித்துக்கொண்டு பதினொரு வயசு சிறுமியொருத்தி.

''என்ன லட்சுமி, உடம்பு எப்படியிருக்கு? தேவலாமா?''

இப்படிக் கேட்டபடி உள்ளே போவார் சங்கரன். கீர்த்தியும் இவருடன் சேர்ந்து போவான். கூடத்தில் போடப்பட்டிருக்கும் மேனி இளைத்த சோபாவில் ஒரு மூலையாக ஒடுங்கிக் கொள்வான்.

''கீர்த்தி, இங்கே உட்கார்ந்திரு. இதோ வந்துட் டேன்.''

சங்கரன், அவனைத் திரும்பிப் பாராமல் சொல்லி விட்டு மருந்துகள் அடங்கிய பையுடன் மாடிக்குப் போவார். அவர் பின்னாலேயே லட்சுமி போவாள்.

பதினொரு வயதுப் பெண், மாடிக்குப் போவதா, இவனுடன் பேசுவதா என்பது போலச் சிறிது தயங்கி விட்டு, உட்பக்கமோ, வாசற் பக்கமோ ஓடும்.

கீர்த்தி, சுவரில் இருக்கும் புகைப்படங்களை நிதான மாகப் பார்த்துக்கொண்டிருப்பான்.

புகைப்படங்களில் இருக்கும் பதினெட்டு இருபது வயதுப் பெண்ணான லட்சுமியை அவனால் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

இருபது வயசில் இருந்ததற்கும் முப்பத்தைந்து வயசில் அவள் இப்பொழுது இருப்பதற்கும் அதிகம் வித்தியாசம் இல்லை, உடம்பு சற்று சதை போட்டிருக்கிறது.

Vennila

இருந்தாலும் நாட்டியம் கற்றுக் கொண்டதன் பலனாக இடுப்பும் கை கால்களும் நல்ல வடிவத்துடன் இருந்தன.

முகத்தில் நல்ல களை. அவளை விடவும் அந்தப் பதினொரு வயதுச் சிறுமியின் முகத்தில் அபாரமானக் களை. சங்கரனின் மனைவி மீனாட்சியைப் போலவோ, மகள் உமாவைப் போலவோ சிவந்த மேனியில்லை. மாநிறத்துக்கும் சற்று மேல். கண்ணும் மூக்கும் சித்திரத்தில் எழுதிப் பார்க்கலாம் போலிருந்தது.

இந்த வீட்டில் யார் நோயாளி? சங்கரன், யாருக்குச் சிகிச்சை செய்வதற்காக இங்கு வருகிறார்? புரிகிற வயசு இல்லை கீர்த்திக்கு.

ஆனால் அவன் சங்கரன் அந்த வீட்டிற்குப் போகும் போதெல்லாம் கூடவே போவான். கூடத்தில் உட்கார்ந்திருப்பான். லட்சமி அவனை நேய பாவத்துடன் வரவேற்று பலகாரத்தை வைத்து அவனைச் சாப்பிடும்படி உபசரித்து விட்டுச் சங்கரனுடன் மாடிக்குப் போவாள்.

கீர்த்தி பலகாரத்தைச் சுவைத்தபடி புகைப்படங்களை நோட்டமிடுவான். எத்தனை முறை பார்த்தாலும் அந்தப் புகைப்படங்கள் அலுக்காதது போல், எத்தனை சாப்பிட்டாலும் அவள் படைக்கும் பலகாரங்களும் அலுக்காது.

அவன் சாப்பிடுவதைக் கதவிடுக்கில் ஒளிந்தபடி பார்த்துக் கொண்டிருப்பாள் அந்தச் சிறுமி.

ஒரு முறை, பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவனுக்கு விக்கலெடுத்தபொழுது, அவள் ஓடி வந்து தண்ணீர் கூஜாவை எடுத்துக் கொடுத்தாள்.

''தாங்க்ஸ்.''

''டோண்ட் மென்ஷன்.''



இதற்கடுத்த சில தடவைகளில் அறிமுகமான சிரிப்பு, பரஸ்பரம் ஒருவரையொருவர் விசாரித்து அறிந்து கொண்ட படலங்கள்.

உமாவைப் போல்,இல்லாமல் பூரணி இவனிடம் மனசு விட்டுப் பேசியதே மிக இதமாக இருந்தது கீர்த்திக்கு. இயல்பான அவனது கூச்ச சுபாவம் அகன்று, அவனிடம் சிரித்துப் பேசத் தொடங்கினாள்.

''என்ன கிளாஸ் படிக்கறே?''

''ஸெவன்த்.''

''இங்கிலீஷ் மீடியமா, தமிழ் மீடியமா?''

''தமிழ் மீடியம்.''

''உங்க அப்பா எங்கே?''

''அப்...அப்பாவா...?''

இதற்கு மட்டும் பூரணி பதில் தெரியாமல் விழிப்பாள். விரல்களைச் சொடுக்கி விட்டுக் கொள்வாள். சற்று நேரத்தில் 'தெரியாது' என்கிற பாவனையில் இவனைப் பார்த்துச் சிரிப்பாள்.

''நீ டான்ஸ் கத்துக்கலையா?'' அவன் லட்சுமியின் புகைப்படங்களைப் பார்த்தபடி கேட்பான்.

''ஊகூம், எனக்கு ஆசைதான், அம்மாவுக்குத்தான் நான் டான்ஸ் கத்துக்கறது பிடிக்கலை. நல்லா படி, போதும்னுட்டாங்க.''

கீர்த்தியின் பதினேழாவது வயசில்தான் சங்கரனுக்கும் அந்த வீட்டினருக்கும் இடையே என்ன உறவென்பது புரிந்தது.

Vennila

புரிந்தபோது தாளமுடியாத அதிர்ச்சிக்கு உள்ளானான் அவன்.

அதுவும், சங்கரன் வாயாலேயே உண்மை தெரிந்ததும் விக்கித்துப் போய்விட்டான்.

## 3

சாதாரணமாய்ப் பதினைந்து வயதுக் கீர்த்தியும் பதினொரு வயதுப் பூரணியும் பெரிய மனிதத் தோரணையில் ஏதாவது பேசிக் கொண்டிருப்பதைத் தன் கீழ்க்கண்ணால் ரசிக்கும் சங்கரன், இரண்டு வருடங்களில் இவர்களுக்குள் எத்தனை ஆழமாய் நட்புக்கிளை விரிக்கப் போகிறது என்பதை அறிந்திருந்தார்.

நிஜம்தான். கீர்த்திக்குப் பூரணியின் சிநேகம் தேவையாயிருந்தது. அவனைப் போலவேத் தகப்பனில்லாத சிறுமி, அவனைப் போலவே அந்தஸ்த்தின் சாயல் இல்லாத மனசு.

ஆரம்பத்தில், சங்கரனுடன் எந்தவித நோக்கமும் இல்லாமல் அந்த வீட்டிற்குப் போய் வந்தவன், நாளடைவில் சங்கரனது காரில் ஏறும் பொழுதே கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

''மாமா, பூரணி வீட்டுக்கா?''

''ஆமாடா பயலே....''

''அப்போ கொஞ்சம் வெயிட் பண்றீங்களா? நான் அவளுக்கு நாலஞ்சு ஸ்டோரி புக்ஸ் தரேன்னு சொல்லியிருக்கேன். எடுத்துட்டு வந்துடறேன்.''



''சீக்கிரம்....சீக்கிரம்....'' சங்கரன் சிரித்தபடி விரலைச் சொடுக்கி, அவனைத் துரிதப்படுத்துவார்.

அவன், தனது அறையை நோக்கித் தலைதெறிக்க ஓடுவான்.

காரில் போகும்பொழுதுகூட, அவன் சங்கரனிடம் தன் இனிய சிநேகிதியைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வருவான்.

''மாமா....''

''என்னடா?''

''பூரணி, தமிழ் மீடியம்லே படிச்சாலும் நல்ல இங்கிலீஷ் நாலேட்ஜ் மாமா.''

''அப்படியா? மார்க்ஸ் எல்லாம் எப்படி?''

''அவளுமே கிளாஸ் ஃபர்ஸ்ட்தானாம் மாமா.''

''பார்த்தா ரொம்பச் சாதுவா இருக்காளே! பயந்த சுபாவமோ?''

சங்கரன், வேண்டுமென்றே கேள்வி கேட்டு, உதட்டுக்குள் சிரிப்பை அடக்க முயல, அவன் அவரது முகத்தையே பாராமல் உற்சாகமாய்ப் பதிலளித்தான்.

''சாதுதான். ஆனா, பயந்தாங்கொள்ளி இல்லே மாமா, எங்க அம்மா மாதிரின்னு வச்சுக்குங்களேன்.

''போடடா சக்கை! உங்க அம்மா மாதிரின்னா.... அது எப்படிடா? சாதுன்னா என்ன, பயந்தாங் கொள்ளின்னா என்ன?''

''என்ன மாமா இது கூடத் தெரியல்லே உங்களுக்கு? 'சாது'ன்னா யாரையும் அனாவசியமா வம்புக்கு இழுக்

Vennila

காத சுபாவம். தான் உண்டு. தன் வேலை உண்டுன்னு இருக்கறவங்க. பயந்தாங்கொள்ளின்னா அது—அது—எதுக்கெடுத்தாலும் பயந்து சாகிற ஜென்மம்.''

''உதாரணமா என் சம்சாரத்தைச் சொல்லலாமா? நீயும் நானும் அவள் வாய்க்குப் பயப்படுவோம், அவள் கரப்பான் பூச்சிக்குப் பயந்து அலறுவாள்.''

சங்கரன் சொல்ல, கீர்த்தி பொங்கி வரும் சிரிப்பைக் கையால் அணைபோட முயன்று தோற்றுப் போவான்.

ஒவ்வொரு நாளும் லட்சுமியின் வீட்டிலிருந்துத் திரும் புகையில் சங்கரனின் சிரிப்பு மறைந்து, முகத்தில் சிந்தனை படிந்திருக்கும். ஆனால், அதற்காகக் கீர்த்தியிடம் பேசாமல் வரமாட்டார். கேள்வியெல்லாம் பூரணியைப் பற்றியதாகவே இருக்கும். பதிலும் அப்படியே.

''கையிலே என்னடா அது?''

''மயில் தோகை மாமா.''

''இதை வச்சிட்டு என்ன பண்ணப் போறே?''

''பூரணி சொன்னாள் இதை ஏதாவது புத்தகத்துக்குள்ளே வச்சிருந்து, கொஞ்ச நாள் கழிச்சுத் திறந்து பார்த்தால் குட்டி போட்டிருக்கும்னு.''

''அவ சொன்னா, நீ கேட்டுட்டு வந்தியா? என்டா டாக்டருக்குப் படிக்கப் போறே. உயிரில்லாத ஒரு வஸ்து. அது எப்படிக் குட்டி போடும்னு சொல்லு, நமக்கெல்லாம் தலை மயிர் மாதிரி மயிலுக்கு இந்தத் தோகை.

கீர்த்தி, அந்த மயில் பீலியை விரலால் நீவியபடி மௌனமாக உட்கார்ந்திருப்பான். அவனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர எண்ணி, சங்கரன்தான் மேலும் மேலும் கேள்விகளையும் போடுவார்.



''இன்னும் என்ன சொன்னா அவ?''

''போங்க மாமா.''

''அடேய், நான் விளையாட்டுக்குச் சொன்னேன். அதுக்குப் போய்க் கோவிக்கக்கலாமா? ஆமா, இந்தப் பூரணிப் பொண்ணு இருக்காளே, அவ உனக்கு டியரெஸ்ட் ஃபிரண்டா?''

''ஆமா மாமா.''

''ஹேய் பொய் சொல்றே''

''நான் எதுக்குப் பொய் சொல்றேன்? அவ என் டியரெஸ்ட் ஃபிரண்டுதான். என்ன பெட்?''

''அப்படின்னா உங்கிட்ட எல்லா விஷயத்தையும் சொல்லுவாளா?''

''பின்னே?''

ஒரு விஷயத்தை மறைச்சு வச்சிருக்கான்னு சொல்லுவேன்.''

''ஒண்ணும் கிடையாது. என்னவாம் அது?''

''அவ ரொம்ப ஜோரா பாடுவா. உனக்குத் தெரியுமா?''

''பாடுவான்னு தெரியும். ரொம்ப ஜோராப் பாடுவான்னு தெரியாது. உங்களுக்கு யாரு சொன்னது?''

''யாரோ சொன்னாங்க. அதெல்லாம் ஸீக்ரெட். நான் சொல்ல மாட்டேன்.''

''சொல்ல வேண்டாமே. எனக்கேத் தெரியுமே. அவ அம்மா—அதான் லட்சுமி ஆன்ட்டி. அவங்கதான் சொல்லியிருப்பாங்க. எனக்குத் தெரியாதாக்கும்?''

Vennila

அவன் கார் ஸீட்டில் அமர்ந்திருப்பதையும் மறந்து, அவர் பக்கம் திரும்பிச் சப்பணம் போட்டமர்ந்து, விரல்களால் அவரது இளம் தொந்தியில் கிச்சுக்கிச்சு மூட்டுவான்.

''அடேய்.... வேண்டாம்டா. கார் எங்கேயாவது போய் மோதிடும். வேண்டாம். விட்டுடு, கார் ரிப்பேரானா சரியாக்கிடலாம். யார் மேலேயாவது மோதிட்டா வம்பு. அப்புறம் எல்லோரும் என்னைப் பத்தி என்ன சொல்லுவாங்கத் தெரியுமா?,'

''என்ன சொல்லுவாங்க?''

''இந்த டாக்டருக்குக் கேஸே வர்றதில்லை போல இருக்கு. அதனால்தான் அவரே ஒவ்வொரு ஆள் மேலயும் மோதி, புதுக் கேஸைத் தயார்ப் பண்றார்னு சொல்லுவாங்க.''

''ஓஹ் ஹோஹ் ஹோஹ்....''

கீர்த்தி, வயிற்றைப் பிடித்துக் கொண்டு, கண்களில் நீர் மல்கச் சிரிப்பான்.

அவனது சிரிப்பு, சங்கரனுக்குள் ஜில்லிப்பாய் இறங்கும்.

பூரணியுடன் பழக ஆரம்பித்த பிறகே, கீர்த்தியிடம் அந்த வயதுக்கே உரிய கலகலப்பைக் கண்டார் அவர். உமாவின் அலட்சியத்தினாலும், எரிச்சலினாலும், நத்தை போல் ஒடுங்கியிருந்தவன் இப்பொழுதுதான் இயல்பான நிலைக்கு வந்திருக்கிறான்.

உண்மையிலேயே பூரணி பாராட்டுக்குரியவள்தான். அவள் அம்மாவைப் போலவே. நினைத்துப் பூரித்தும் போனார் சங்கரன்.



பூரணியின் படிப்பைப் பற்றியும் பாட்டைப் பற்றியும் அவளது சுபாவத்தைப் பற்றியும் கீர்த்தி, பேச்சுவாக்கில் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் விலை மதிக்க முடியாத முத்தாய் நினைத்து, தன் நெஞ்சுக்குள் சேமித்து வைத்தார்.

ஒரே ஒரு முறை கீர்த்தி, அவரது இதயத்துள் அமிழ்ந்துள்ள ரகசியத்தை மெல்லத் தொட்டான். இந்த நாள் அவனது மனத்தில் இன்றளவும் புதுசாய்த் துவங்குகிறது.

''மாமா, பூரணி வீட்டிலே யாருக்கு ட்ரீட்மெண்ட் எடுக்கறீங்க?''

''ஏண்டா கேட்கறே?''

''இல்லே....நீங்களும் ஒருநாள் விட்டு, ஒருநாள், தவறாமப் போறீங்க. எனக்குத் தெரிஞ்சே, நீங்க ரெண்டு வருஷமா இவங்க வீட்டுக்கு விசிட் பண்றீங்க. உங்களோட விசிட்டிங் சார்ஜ்ஜே ஏகமா ஆயிருக்குமே!''

இதைச் சொல்லிவிட்டுத் தான் அதிகம் பேசிவிட்டோமா என்பது போல அவன் சங்கரனைப் பார்க்க, அவர் அரைக் கண்ணால் அவனைப் பார்த்துப் புன்னகையுடன் தலையசைத்தார்.

''உம், சொல்லு, என் நிறுத்திட்டே?''

''உங்ககிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்தும் சரியாகாத பேஷண்ட் இருக்காங்களா என்ன?''

''கில்லாடிடா நீ.''

சங்கரன் கீர்த்தியின் பிடரியில் செல்லமாகப் தட்டினார். பிறகு சிறிது நேரம் தனக்குள் மூழ்கிப் போனார்.

Vennila

கீர்த்தி, அவரது முகத்தில் மின்னல் வேகத்தில் மாறும் உணர்ச்சிகளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர், அவன் பக்கம் திரும்பாமல் காரோட்டுவதிலேயே முனைப்பாய் இருப்பது போலக் காண்பித்துக் கொண்டாலும், தாடையில் ஜிவ்வென நரம்பு புடைப்பதும், கழுத்துப் பக்கம் திடீரெனக் குங்குமத்தை அப்பினாற் போலச் சிவப்பதும், மேலுதட்டில் முத்து முத்தாய் வியர்ப்பதும் அவன் பார்வையிலிருந்து தப்பவில்லை. சற்றுநேரம் கழித்து அவர் பேசியபோது, குரலில் கூட ஒரு வித இளகல்.

''ஒரு டாக்டர் அடிக்கடி ஒருத்தர் வீட்டுக்குப் போனா, அது நோயாளியைக் கவனிக்கத்தான்னு முடிவு செஞ்சுடக் கூடாது கண்ணா....''

மௌனமாய் அவரை எறிட்டான் கீர்த்தி.

''எல்லோருடைய வியாதிகளையும் குணப்படுத்தற டாக்டருக்கே வியாதி வந்தால்? ஓ... உனக்கு இப்பச் சொன்னால் புரியாது. பின்னாலே நீயே புரிஞ்சுக்குவே. இந்த டாக்டரோட வியாதியைக் குணப்படுத்தற டாக்டர் அந்த வீட்டிலேதான் இருக்கார்.''

சத்தியமாய் அப்பொழுது கீர்த்திக்கு அவரது வார்த்தைகளின் அர்த்தம் புரியவில்லை. அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தான். ஆனால் அவனது பதினேழாவது வயதில், சங்கரன் தனது அந்தரங்கத்தையெல்லாம் அவன் முன், பானையை உடைப்பது போலப் போட்டு உடைத்து விட்டார்.

அந்த நாள்....

முன் போல சிறுபிள்ளைத்தனமாக அவன், பூரணியிடம் இப்பொழுதெல்லாம் பழகுவதில்லை. அவனிடம்



ஒரு வளர்ந்த பையனுக்கு உரிய சகல லட்சணங்களும் குடி கொண்டாயிற்று. ஒல்லியாய், தேகத்தில் கிள்ளியெடுக்கச் சதையே இல்லாமல் அதுவரை இருந்தவன், இந்த ஒரு வருடத்தில் அபாரமாக வளர்ந்து விட்டான்.

புஜத்தில் இரண்டு மணல் மூட்டைகளைக் கட்டி விட்டாற்போல, கரணை கரணையாகத் தசைத் திரட்சி, முதுகு அகலமான பாறை போல, குரலில் பெண் தன்மை மாறி கரகரப்பு ஏறி, அவன் ரொம்பத்தான் மாறி விட்டான்.

பூரணியிடம் முன் போல வம்பு விளையாட்டு இல்லை. சீண்டல், சிணுங்கல் இல்லை. அவளைத் தேடிக்கொண்டு கொல்லைப் புறம் வரையில் ஓடுவானே, அந்த ஓட்டம் இல்லை. இருவருமாக ஊஞ்சலில் அமர்ந்து வீசிவீசி ஆடுவார்களே, அந்த ஆட்டம் இல்லை.

அவன் அமைதியாக ஊஞ்சலில் உட்கார்ந்திருப்பான். அவள் அதே கூடத்தின் ஒரு மூலையில், கையில் புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு, அவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருப்பாள்.

''காலேஜ்லே என்ன குரூப் எடுத்திருக்கே?''

—பூரணி அவனிடம் விசாரிப்பாள்.

''ஸயன்ஸ்தான். மாமா என்னை டாக்டருக்குப் படிக்கச் சொல்றார்.''

''டாக்டர் பெண் உமா—அவளும் டாக்டருக்குத் தானே படிப்பா, இல்லையா?''

அவளின் குரலில் மெல்லியதாய் ஏக்கம் இழையோடும், அவன் அவளைப் பார்த்துச் சிரிப்பான்.

Vennila

''அவளும் உன்னை மாதிரி இப்பத்தானே நைன்த் ஸ்டாண்டர்டு படிக்கிறா. என்னப் படிக்க போறாளோ தெரியலை.''

''கீர்த்தி...''

''உம்''

''எனக்கு மாத்ஸூம் ஸயன்ஸூம் சொல்லித் தரியா?''

''ஓ... எங்கே, புஸ்தகத்தைக் கொண்டாயேன்.''

பேச்சில் முன்பிருந்த குழந்தைத் தனம் மாறிக் கொஞ்சம் தயக்கமும், நிறைய வெட்கமும் புதுசாய்ச் சூழ்ந்து கொண்டிருந்தன.

கீர்த்தி, அவளுக்குப் பாடத்தில் ஏற்படும் சந்தேகங் களை விளக்குவான். தான் கல்லூரியில் அடியெடுத்து வைத்த நாளைப் பற்றிச் சொல்லுவான். சகமாணவர்கள் 'ராகிங்' என்கிற பெயரில் நடத்துகிற கூத்தைப் பற்றி விவரிப்பான்.

மாமா அவனுக்குப் புதுசாய்க் கார் ஓட்டக் கற்றுக் கொடுப்பதைப் பற்றிப் பெருமைப்படுவான்.

கல்லூரி ரசாயனக் கூடத்தில், முதல் நாள் தவளையை அறுத்துப் பார்த்ததை விவரிப்பான். கல்லூரி விளை யாட்டுப் போட்டிகள் எல்லாவற்றிலும் தானே முதலாவ தாக வந்தது பற்றிக் கண்களில் பெருமிதம் சுடர்விடக் கூறுவான்.

அந்தப் பக்கம், தான் பூரணியுடன் பேசிக் கொண்டி ருக்கும் சமயத்தில் யாரும் வர மாட்டார்கள் என்கிற நம் பிக்கையில் அவளிடம் தனது புஜபலத்தைக் காண்பிக்க வேண்டும் என்கிற ஆவலில் படபடப்பான்.



''பூரணி, எங்க காலேஜ் பளு தூக்கற போட்டியில கூட நான்தான் ஃபர்ஸ்ட்.''

''உம்?''

''இதோ இங்கப் பாரு.''

அவன் தனது முஷ்டியை உயர்த்திக் காட்டுவான். அவள் பெரிய கண்கள் ஆச்சரியத்தில் விரிய, பலூன் மாதிரிப் புடைத்து விம்மும் இவனது புஜத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

''அம்மாடி....எவ்வளவு பெரிசு.''

''தொட்டுப் பாரு, கல்லு மாதிரி இருக்கும்.''

அவள் தயங்குவாள்.

''அட, தொட்டுத்தான் பாரேன்.''

அவள் மெல்ல அருகில் வந்து, முஷ்டியை அழுத்திப் பார்ப்பாள். ''வலிக்கல்லே?''

''ஊகூம்''

இதற்குப் பின் அவன் தன் பலத்துக்காகத் தான் சாப் பிடும் உணவு வகைகளையும் செய்யும் தேகப் பயிற்சிகளை யும் பட்டியல் போட்டு விவரிப்பான்.

இந்தச் சிநேகம் காலை நேரத்துப் பூபாளம் போன்றது, மாலை நேரத்துக் கோயில் மணியோசை போன்றது, இரவு நேரத்துப் பூக்களின் கும்மென்ற வாசம் போன்றது.

மூன்று நாட்களாகப் பூரணி அவன் கண்ணில் படா ததே பெரிய கேள்விக் குறியாக உறுத்தியது.

Vennila

''பூரணிக்கு உடம்பு சரியில்லையா மாமா?''

அவன் தயங்கித் தயங்கிக் கேட்டான். அவர் அவனைப் பார்த்து முறுவலித்தார். கனிந்திருந்த கண்களில் இரு நட்சத்திரம் மினுக்கியது.

''அவ பெரியவளாகியிருக்காடா கீர்த்தி. நாளைக்கு லட்சுமி அவளை மணையிலே வச்சுப் பாடப் போறா. இந்தப் பழக்கமெல்லாம் எதுக்கு, வேண்டாம்னு சொன்னேன், கேட்க மாட்டேங்கறா.''

கீர்த்தி, ஜன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். நாலைந்து மாதங்களுக்கு முன் இதுபோல உமா பூப்பெய்தியதும் சங்கரனின் மனைவி மீனாட்சி ஊரைக் கூட்டி அமர்க்களப்படுத்தியதும் நினைவுக்கு வந்தது.

சங்கரன் ஆன மட்டும் சொல்லிப் பார்த்துவிட்டார். மீனாட்சி கேட்கவில்லை. பெரிய மனிதர் வீட்டுப் பெண்களையெல்லாம் விருந்துக்கு அழைத்திருந்தாள். நாதகரமும், சதிர் கச்சேரியுமாய் அட்டகாசம் செய்துவிட்டாள். திருமணத்துக்குப் பரிசளிப்பது போலப் பரிசுகள் மலை மலையாய்க் குவிந்தன.

இந்த வைபவத்துக்குப் பின் உமா மேலும் பெரிய மனுஷித் தோரணையுடன் அவன் நின்ற இடத்தில்கூட நிற்கப் பிடிக்காமல் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு நகர்ந்து நகர்ந்து போனாள்.

''இனிமே பூரணி என்கூடப் பேசமாட்டாளோ?''

இந்த நினைப்பே கீர்த்தியின் நெஞ்சத்தை வலியெடுக்கச் செய்தது. சங்கரன், ஒரு கையால் ஸ்டியரிங்கைப் பிடித்தபடி, இன்னொரு கையால் அவனது தோளைத் தொட்டுத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார்.



''கீர்த்தி, நாளைக்குக் காலேஜ் உண்டா?''

''சனிக்கிழமை. அரை நாள் மட்டும் உண்டு மாமா.''

''அப்போ காலேஜ் விட்டதும் நேரே டிஸ்பென்ஸரிக்கு வா. கடைத் தெருவுக்குப் போகணும். பூ, பழம், வெத்தலை எல்லாம் வாங்கணும்.''

''சரி.''

''மீனாட்சி மாட்னி ஷோவுக்குப் போகணும்னு சொல்லிட்டிருந்தா. வீட்டுக்குப் போனாக் குரங்குப் பிடியாப் பிடிச்சுக்குவா அதனாலே.''

''நான் டிஸ்பென்சரிக்கு வந்துடறேன் மாமா.''

''வெரி குட். மீனாட்சிகிட்டே நாளைக்கு ஒரு ஆபரேஷன் இருக்குன்னு பொய் சொல்லப் போறேன். உன்னைக் கேட்டாலும், அதையே சொல்லு; மாத்திச் சொல்லிடாதே.''

அவன், சட்டென்று சங்கரனின் முகத்தைப் பார்த்தான். சின்னப் பையனிடம் பொய் சொல்லச் சொல்கிறோமே என்கிற லஜ்ஜை அந்த முகத்தில் மிக நன்றாய்த் தெரித்தது.

மறுநாள் சங்கரன் பூ, பழம், மாத்திரமல்லாது, பூரணிக்குப் பட்டுப் பாவாடையும், தாவணியும் கூட வாங்கினார். அதுவும், அவர் வழக்கமாய் வாங்கும் பெரிய ஜவுளிக் கடையில்.

நாலைந்து மாதங்களுக்கு முன் உமாவுக்கு எடுத்த அதே நிறம். வெளிர் நீலத்தில், உடலில் ஜரிகைக் கட்டமும், கருநீல நிறத்தில் முடிக் கரையுமாய்.



Vennila

''இந்தக் கலர் இப்பத்தானுங்களே பாப்பாவுக்கு எடுத்தது?''

வாடிக்கையாய் வாங்கும் கடையாதலால் கடைக்காரன்கூட உமாவின் சமீபத்திய பட்டுப் பாவாடையை நினைவில் வைத்துக்கொண்டு கேட்டான்.

''இது நம்ப பாப்பாவுக்கு இல்லேப்பா. சிநேகிதர் பொண்ணுக்கு.''

சங்கரன் மறுபடியும் பொய் சொன்னார்.

அந்த வீட்டில் பூரணியின் மஞ்சள் நீராட்டு வைபவம் மிக அடக்கமாய் வீட்டு மட்டோடு நடந்தது. லட்சுமி யாரையும் அழைக்கவே இல்லையா, அல்லது அக்கம் பக்கத்துப் பெண்கள் வந்து விட்டுப் போய் விட்டார்களா தெரியவில்லை.

வீடு நிசப்தமாயிருந்தது.

அவர்கள் அந்த வீட்டுக்குள் நுழையும் போது, மாலை மங்கிக் கொண்டிருந்தது.

வாசலில் போட்டிருந்த கோலத்தின் மீது ஆரத்திச் சிவப்புப் படர்ந்திருக்க, இருண்ட நடையில் மாக் கோலம் பாம்பாய் நெளிந்து கூடத்துக்கு வழிகாட்ட, கூடத்தில் கும்மெனப் புகையும் ஊதுவத்தியின் மணத்தினூடே தம்பூராவின் சுருதி ரீங்கரிக்க, ஊஞ்சலில், தம்பூராவைத் தன் மீது சாய்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் பூரணி.

கீர்த்தி வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

''பேசுவதா, வேண்டாமா?''



திடீரெனத் தங்கள் இருவருக்குமிடையில், கண்ணுக்குத் தெரியாததொரு திரை விழுந்து விட்டாற் போலத் தவித்துப் போனான்.

லட்சுமி அவர்களை வரவேற்றதோ, பூரணி சங்கரனின் காலில் விழுந்து வணங்கியதோ எதுவுமே தெரியவில்லை.

அவன் கண்கள் நிறைய பூரணிதான் நின்றாள்.

''எத்தனை அழகு! அம்மா....எத்தனை அழகு!''

''சங்கரன் லட்சுமியுடன் மாடிக்குப் போய் வெகு நேரம் வரையில் ஆடாமல் அசையாமல் கூடத்து நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தான் கீர்த்தி.

பூரணி உள்ளே ஓடியவள்தான். அப்புறம் அவன் கிளம்பும் வரையில் வெளியே வரவேயில்லை.

அன்று அந்த வீட்டை விட்டுக் கிளம்பிய சங்கரன் ஏதோ ஒருவிதப் பதட்டத்தில் இருந்தாற்போலிருந்தது.

பாதி மூடிய விழிகளில் அந்தக் குருவி வால் சுருக்கத்தில் கண்ணீர் கசிவது போன்ற ஒரு பிரமை.

''அழுகிறாரோ? ஐயோ எதற்கு?''

அந்த நிமிஷத்தில் கீர்த்தி பதறிப் போனான்.

''மாமா....''

''என்னடா?''

''உடம்புக்கு ஒண்ணுமில்லையே?''

''ஏன் கேட்கறே?''

Vennila

''இல்லே, என்னமோ போல் இருக்கீங்களே. அதான் கேட்டேன்.''

அவ்வளவுதான். உடைந்து போய் விட்டார் சங்கரன். அத்தனை நேரம் வரையில் நெஞ்சில் சுமந்திருந்த அத்தனை சுமைகளையும் கொட்டித் தீர்த்து விட்டார்.

''கீர்த்தி....கீர்த்தி....''

''என்ன மாமா? ஐயோ, அழாதீங்க. என்னன்னு சொல்லுங்க, ப்ளீஸ்.''

''பாருடா, பூரணி என்னமாப் படிக்கறா! ஃபர்ஸ்ட் ராங்க் வாங்கறா. அவளைப் போய்ப் பள்ளிக்கூடத்தை விட்டு நிப்பாட்டப் போறேன்னு சொல்றாடா இந்த லட்சுமி. அசடு. சரியான அசடு.''

''அந்தக் காலத்துலதான் தேவதாசிப் பெண்கள் வயசுக்கு வந்துட்டா, படிப்பை நிறுத்திட்டுப் பொட்டுக் கட்டிக்கும்னு சொல்லுவாங்க.''

''இவளுக்கு என்னடா. ராஜாத்தி. இவளைப்பார்த்தா யாராவது இந்தக் குலத்தைச் சேர்ந்த பெண்ணுன்னு சொல்லுவாங்களா? அந்த அடக்கமும் அந்தப் பதவிசும் கையெடுத்துக் கும்பிட வைக்காதா?''

''மாமா!''

''ஷ்....குறுக்கே பேசாதே. அந்தப் பூரணி யாருன்னு நினைச்சுட்டிருக்கே? என் பெண்ணுடா. உமா மாதிரி, என் ரத்தத்தோட ரத்தம்டா.''

''மாமா....''

''குழந்தை என்ன பாவம் செஞ்சதுடா? அந்தக் குலத்துலே பிறந்ததைத் தவிர வேற என்ன பாவம்



செஞ்சது? பெத்த அப்பன் யாருன்னு கூடத் தெரியாமல் என்னை ''மாமா''ன்னு அது கூப்பிடறப்ப எல்லாம் குடலே புரண்டு நெஞ்சுல அடைச்சுக்குதுடா.

''லட்சுமி இருக்காளே, சத்தியமா அவளைப் போல ஒரு உத்தமி இந்தப் பூலோகத்துல கிடையாது. ஒத்துக்க றேன். என்னைத் தவிர, இன்னொரு ஆம்பிளைய அவ கண்ணால ஏறெடுத்துப் பார்த்ததுகூடக் கிடையாது.

''எப்ப அவளை நான் தொட்டேனோ, அப்பவே சொல்லிட்டேன் அவகிட்டே.''

''இந்தா, இந்த நிமிஷத்திலேயிருந்து என் பெண் டாட்டிக்கு நான் கொடுத்திருக்கிற சகல உரிமைகளும் உனக்கும் உண்டு. நீ இனிமே தாசிப் பெண் இல்லே. அந்த நினைப்பையே மறந்துடு''ன்னு சொன்னேன்.''

''குழந்தையைப் பெரிய கான்வென்ட்டுல படிக்க வைக்கணும்னு சொன்னப்பவும், 'வேண்டாம். தகுதிக்கு மேலே ஆசைப் படக் கூடாது'ன்னு அடம் பிடிச்சா.''

''இப்ப, அவ படிக்கிற படிப்புக்கும் ஃபுல்ஸ்டாப் வைக்கப் போறேன்கறா. என்னு கேட்டா, இப்பவே பூரணிய அவ கிளாஸ்மேட்ஸ் எல்லாம் குலப் பெயரைச் சொல்லிக் கேலி பண்றாங்களாம்.

''இவ, மேல படிச்சு, எந்த ஆபீஸரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறா? அதுக்கு, படிக்காம வீட்டோடு இருந்து வேலை வெட்டியக் கத்துக்கட்டும். தலையெழுத்து எப்படியிருக்கோ, அப்படி இருந்துட்டுப் போகட்டும்' கறாடா.''

''குழந்தைக்கு ஆரத்தி எடுத்து, ஆசீர்வாதம் செஞ்சு அரை நாழிகூட ஆகல்லே, இப்படிச் சொல்ல எப்படிடா

Vennila

மனசு வந்தது அவளுக்கு? இவ பெத்த பெண்ணாயிருந்
தாலும் அவளோட எதிர்காலத்தைப் பத்தின அக்கறை
எனக்கும் இருக்கில்லையா? ஆத்திரம் தாளாமக் கத்திட்டு
வந்துட்டேன்.''

அவன் ஏதும் பேசவில்லை.

''நீ வேணுமானா உன் பெண்ணைக் கண்ட
சப்பனுக்கும் கல்யாணம் பண்ணித் தரச் சம்மதிக்கலாம்.
ஆனா, அதுலே எனக்கு இஷ்டமில்லே. என் பெண் படிக்
கணும். காலேஜுக்குப் போகணும். டிகிரி வாங்கணும்.
வெளியிலயிருந்து மாப்பிள்ளையத் தேடினாத்தானே உன்
குடும்பத்தைப் பத்தின பேச்சு வரும்? நான் என் கைக்
குள்ளே மாப்பிள்ளைய வெச்சிருக்கேன். டாக்டர் மாப்
பிள்ளை. அதுக்கு ஏத்தாப்பல என் பெண்ணும் படிச்சிருக்
கணும்னு சொல்லிட்டேன். என்டா கீர்த்தி, இதுலே
என்னடா தப்பு?''

அவனுக்கு உடல் சிலிர்த்தது.

''என்னடா முழிக்கிறே? என் பூரணியைக் கல்யாணம்
பண்ணிக்க மாட்டேன்னு சொல்லுவியாடா? டேய் கீர்த்தி,
செஞ்ச உதவிக்குப் பிரதிபலன் எதிர்பார்க்கறதா நினைச்
சுடாதேடா. நான் உன்னைப் பூரணிக்குப் புருஷனாக்
கறதுக்காகப் படிக்க வைக்கல்லே. ஏதோ, அவ கேட்டா.''

''என் பெண் படிச்சு, டிகிரி வாங்கிட்டு எந்த ஆபீஸ
ரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறா? ஏதோ, நான்
செஞ்ச புண்ணியம், நீங்க என்னை மொத்தமாகக் குத்த
கைக்கு எடுத்துக்கிட்டீங்க. இவளுக்கு அந்த மாதிரி யார்
கிடைக்கப் போறாங்கன்னு சொன்னா.''

''இத்தனை தூரம் உங்களுக்காகவே உசிரை வச்சிட்டு,
உங்களுக்காகவே வாழ்ந்தாலும் உலகத்துல என்னை
உங்கப் பொண்டாட்டியா அடையாளம் காமிச்சிக்க



முடியலையே! உங்கப் பெண், உங்களை ''அப்பா''ன்னுல
கூப்பிட முடியலையே. அவளுக்கு மாத்திரம் எங்க குலத்துல
இல்லாத வழக்கமா, எங்கேயிருந்து தாலியும். மேளமும்
வரப் போகுது?'ன்னு கேட்டாடா.''

''அப்ப எனக்கு ஒரு வெறி வந்தது. அந்த வெறியில
தான் சொன்னேன், பூரணிக்கு மாப்பிள்ளை வச்சிருக்
கேன்டீன்னு.''

''கீர்த்தி...கீர்த்திக் கண்ணா! நான் சொன்னதுல
ஏதாவது தப்பா? உன் அனுமதியில்லாம, உங்க அம்மா
வோட அனுமதியில்லாம, இப்படியொரு வார்த்தைய
நான் சொல்லியிருக்கக் கூடாதோ?''

அவர் உதடு நடுங்க, முகமும் உடம்பும் வியர்வையால்
தெப்பமாய் நனைய, அவனுடைய முகத்தையே கெஞ்சுகிற
பாவனையில் பார்க்க, கார், மெரீனாவின் சந்தடியற்ற
நடைபாதையோரமாய் நின்றுவிட, கீர்த்தி அவரது இரு
கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்
கொண்டான்.

அந்த நேரத்தில், அந்த வயசில், அவன் பேசிய
வார்த்தைகள்! நன்றியுள்ள, பாசமுள்ள இளைஞன்
எவனானாலும் இதைத்தான் சொல்லியிருப்பான்.

''உங்களுக்கு இல்லாத உரிமை வேற யாருக்கு
இருக்கு மாமா? நீங்க அழாதீங்க. நான் இருக்கற வரைக்
கும் அழவே கூடாது. நீங்க என்னா சொன்னாலும்,
அதைத் தலைப் பொறுப்பாகச் செய்யக் காத்திட்டிருக்
கேன். இப்ப வாங்க, வீட்டுக்குப் போகலாம். அங்கே
மாமி, உங்களை இன்னும் காணமேன்னு காத்திட்டிருப்பா.
வண்டியைக் கிளப்புங்க. உங்களால முடியலைன்னா
நகருங்க. நானே டிரைவ் பண்றேன்.''

Vennila

அவனது வார்த்தைகளில் நெக்குருகி, அவனது தோளிலேயே முகம் புதைத்து, தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டார் சங்கரன்.

அன்று இரவு சங்கரன் நிம்மதியாக உறங்கியிருக்கலாம். ஆனால், கீர்த்திக்குத் தூக்கமே வரவில்லை; புரண்டு புரண்டுப் படுத்தான்.

என்னமோ, சங்கரனின் துக்கம் தோய்ந்த முகத்தைக் காணச் சகிக்காமல், ''நீங்கள் எது சொன்னாலும் சரி'' என்றானே தவிர, உண்மையில் அவனுள் அப்பொழுது குழப்பமும் அதிர்ச்சியுமே மிஞ்சியிருந்தன.

குழப்பத்துக்குக் காரணம்—

''தேவதாசி என்றால் ஒதுக்கப்பட வேண்டியவர்களா?''

பதினேழு வயசு கீர்த்திக்கு, இது பற்றி அதிகம் தெரிய வாய்ப்பில்லை, அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படி.

அதிர்ச்சிக்குக் காரணம்—

இப்பேர்ப்பட்ட சங்கரன் வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் உடைய சங்கரன், மீனாட்சிக்குத் துரோகம் இழைத்துவிட்டு இன்னொருத்தியை நாடி ஏன் போக வேண்டும்? மீனாட்சிக்கு விஷயம் தெரிந்தால், வீட்டையே தீர்த்தாளி செய்துவிட மாட்டாளா?

இந்தச் சம்பவத்துக்குப் பின், அவன் லட்சுமியின் குலத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அறியத் தீவிரமாக முனைந்தான்.

''தேவதாசிகள் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள். இவர்கள் மணப்பது ஆண்டவனை. இந்தத்



திருமணம்தான் பொட்டுக் கட்டுதல் என்று அழைக்கப் பட்டது. இந்த விவாகத்திற்குப் பிறகு ...''

இது, அவன் சேகரித்தக் குறிப்பு.

''அடப் போடா மடையா! அப்படின்னா என்னன்னு தெரியாதா? நிஜமாகவே தெரியாதா? ஏய், ஏய்.... கப்ஸா தானே வேண்டாம்கறேன். தேவதாசின்னா ப்ராஸ்டா, அந்தக் காலத்திலே கால் கேர்ள்களை இப்படித்தான் கூப் பிடுவாங்க. என்னப்பா, போதுமா? இல்லே, இன்னும் ஏதாவது விளக்கணுமா?''

இது, கல்லூரிச் சிநேகிதனின் விளக்கம்.

அர்த்தம் புரிந்த பின், கீர்த்திக்குப் பூரணியின் மீதிருந்த பரிவு அதிகமாயிற்றேயொழிய, குறையவில்லை.

''இந்த மாதிரிச் சில குடும்பங்களை ஒதுக்கி, இப்படிச் சில சம்பிரதாயங்களையெல்லாம் இந்த மனிதர்கள் ஏன் ஏற்படுத்தினார்கள்? இவர்களின் வக்கிர மனசுக்கு, பாவம் இந்த மாதிரி நல்ல பெண்களா பலியாகிறது!

''மாமா செஞ்சதுல என்ன தப்பு? மீனாட்சி மாமியவிட, பூரணியோட அம்மா லட்சுமி எத்தனையோ விதத்துல ஒசந்தவதான். எவன்தான் இப்படிச் சண்டை போட்டே பிராணனை எடுக்கிற பெண்டாட்டியோட காலம் முழுக்கக் குப்பை கொட்டுவான்!''

''ஜாதியிலேயும், மதத்திலேயும் என்ன இருக்கு? நல்ல மனிதர்கள் எந்தக் குலத்துல இருக்கிறார்களோ, அந்தக் குலம் நிச்சயம் ஒசந்ததுதான். பூரணி மாதிரி ஒரு நல்ல பெண், அடக்கமான பெண் கிடைப்பாளா?''

''எல்லாம் சரிதான். அம்மா என்ன சொல்லுவாளோ.... அவளுமே இந்தக் குலத்தைப் பற்றி எல்லாரையும் போல மட்ட மாய்த்தானே நினைச்சிட்டிருப்பா?''

Vennila

''அவ எண்ணத்தை எப்படி மாத்தறது?''

''அதைப் பத்தி இப்ப என்ன? எப்படியாவது மாத்திடலாம். இப்பத்தானே நான் பி. யூ. சி. படிக்கிறேன். கல்யாணத்துக்கு இன்னும் எத்தனை வருஷம் இருக்கு!''

கீர்த்தி, தன்னை எத்தனையோ விதத்தில் அடக்கிக் கொண்டாலும், ஒரேயொரு நினைப்பை மாத்திரம் அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, சங்கரனுடன் பூரணியின் வீட்டுக்குள் நுழையும் போதெல்லாம், நெஞ்சுக்குள் புத்தம் புது ரோஜாக்கள் குப்பென மலர்ந்து பன்னீர் மணம் வீசியது.

ஒவ்வொரு முறை அந்த வீட்டு வாசற்படியில் காலைப் பதிக்கும் போதெல்லாம், எங்கோ கெட்டி மேளம் ஒலிப்பது போல ஒருவிதப் பிரமை.

கெட்டிக் கரை போட்ட மடிசார் புடைவையும், முகத்தில் அளவிட முடியாத பூரிப்புமாய் லட்சுமி, அவனுக்கு ஆரத்தி சுற்றி வரவேற்பது போல...

''ஸ்ரீ ராமா ஜெய ஜெய...

சீதம்மா மனோஹரா...

...ஜனகருடைய மனை புகுந்து,

சீதையுடைய வில்லை முறித்து...

ஜானகியை மாலையிட்டார்—ராமர்

ஜனகருடைய மனம் மகிழ...''

பழுத்த சுமங்கலிகளின் பாட்டு, கீர்த்தி, சங்கரனின் முகத்தைப் பார்க்க, அந்த முகத்தில் சந்தோஷமும் பெருமையும் பேட்டியிட...



''மன்மதனுக்கு மாலையிட்டாயே—அடி மாதே...''

—அவர், பூரணியைப் பார்த்துச்-சிரிக்க, அவள், கையிலுள்ள மாலையைக் கீர்த்தியின் கழுத்தில் போட்டு விட்டு, நாணி முகம் சிவப்பது போல...

பாவம் கீர்த்தி, எத்தனை கற்பனைகளை அனாயாசமாக மனத்தில் வளர்த்துக் கொண்டான்!

## 4

சங்கரன் விதைத்த ஆசை விதை, விருட்சமாய், விண்ணைத் தொடுமளவுக்குக் கீர்த்தியின் உள்ளத்துள் வளர்ந்து விட்டது.

வெளிப்படையாய்க் காட்டிக் கொள்ளா விட்டாலும், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவனின் கண்ணோட்டமே மாறி விட்டது.

பூரணியின் வீட்டுக் கூடத்தில், அவளது முகம் எந்தக் கதவிடுக்கின் வழியே நிலவொளியாய்த் தெரிகிறது எனத் தேடுவதே குறியாய் இருந்தான்.

அந்த இனிமையான—காலங்கள் கீர்த்தியின் ஆயுசு உள்ள மட்டும் மறக்க முடியாதவை.

ஒரு முறை அவன் போனபோது, அவள் கூடத்தில் குனிந்தும் நிமிர்ந்தும் எதையோ தேடிக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் பழைய சிநேகமும் புதுசாய்ப் பூத்திருந்த வெட்கமுமாய்த் தயங்கித் தயங்கி அவள் சிரிக்க'

''என்ன தேடறே?'' என்றான் அவன்.

''ஒண்ணுமில்லே...''

''ஒண்ணுமில்லாம யாரும், இப்படிச் சுவருக்கும் தூணுக்கும் விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ண மாட்டாங்க, சொல்லு. என்ன தேடறே?''

Vennila

அவள், தன் கையிலிருந்த ஒற்றைக் கொலுசைக் காண்பித்தாள். ''திருகு எங்கேயோ விழுந்துட்டது.''

கீர்த்தியும் அவளுடன் சேர்ந்து தேடத் தொடங்க, சரியாய்ப் பத்து நிமிஷத் தேடலுக்குப்பின், அந்தப் பொல்லாத திருகு, சோபாவின் பின்புறத்துக் கால் மறைவிலிருந்து கண் சிமிட்டியது.

''இதோ!'' கீர்த்தி பாய்ந்து சென்று அதைக் கையில் எடுத்தான்.

அவள் கை நீட்டினாள்.

''காலைக் காட்டு, நானே போட்டு விட்டுடறேன்.''

பூரணி, அவனது வார்த்தைகளில் சற்று மிரண்டு பின்வாங்க, அவன் வற்புறுத்த, அவள் ஊஞ்சலில் அமர்ந்து பாவாடை விளிம்பைச் சற்று உயர்த்தி அவனுக்கு வசதியாய்க் காலை நீட்ட....

அவன் அந்தப் பாதத்தின் அழகிலேயே தன்னை மறந்து கொலுசில் மாட்டிய திருகை, மேலும் மேலும் திருகி விட்டுக் கொண்டேயிருக்க—

''ஆச்சா?''

''இரு, இரு.''

''எத்தனை நேரம்?''

''திருகு லூஸா இருக்கு போல இருக்கு. சுத்தச் சுத்தச் சுத்திட்டேயிருக்கு. ஒரு கட்டிங் பிளேயர் கொண்டா.

''கட்டிங் பிளேயரா....ஐயோ, எதுக்கு?''

அவன் அவளைப் பார்த்துக் குறும்பாய்ச் சிரித்தான்.



''இந்தச் சுண்டு விரல் ரொம்பவும் துளியூண்டா இருக்கு. கொலுஸோட திருகை, இறுக்கி விட்டுட்டு, அப்படியே சுண்டு விரலையும் கட்டிங் பிளேயராலே ஒரு இழுப்பு இழுத்து விடறேன்.

''ச்சீ....''

அவள் துள்ளிக் கொண்டு ஓடினாள். அதற்குப்பின், அவன் கிளம்பும் வரையில் வெளியே வரவேயில்லை.

கீர்த்தி, அடுத்து வந்த நாட்களில், இவளைச் சந்திக்கும் பொழுதெல்லாம், ''கொலுசைத் திருகி விடணுமா?'' என்று கேட்பதும் அதற்கு அவள் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாய் பதிலளிப்பதும்....

''எல்லாம் சரியாத்தான் இருக்கு. திருகி விடணும்னா சொல்றேன்.''

''வீட்டுல கட்டிங் பிளேயர் இல்லே.''

''அம்மாகிட்ட நீ, கொலுசுத் திருக கட்டிங் பிளேயர் கேட்டேன்னு சொன்னேன். அம்மாவே எடுத்து வந்து தரேன்னு சொல்லியிருக்காங்க. இரு, இரு....''

''என் கொலுசுக்கு ஒண்ணும் கட்டிங்பிளேயர் வேண்டாம். உன் தலையில் ஏதாவது மறை கழண்டு இருந்தா சொல்லு. கொண்டு வந்து தரேன்.''

பொய்யான கோபம் பாதியும், விளையாட்டுப் பாதியுமாய் அவள் சொல்லும் வார்த்தைகள்....

பூரணியின் படிப்பு விஷயத்தில் மட்டும் சங்கரன் தான் பிடித்த பிடியைத் தளர்த்தவேயில்லை.

கீர்த்தி மருத்துவக் கல்லூரியில் இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்த சமயத்தில், பூரணி பள்ளிப் படிப்பை முடித்திருந்தாள்.

Vennila

''மேற்கொண்டு அவளை என்னடா படிக்க வைக்கலாம்?'' சங்கரன், இவனைக் கேட்டபொழுது, கூச்சத்தில் தடுமாறிப் போனான்.

''அவளையே கேளுங்க மாமா. அவளுக்கு எந்த சப்ஜெக்ட் பிடிக்கிறதோ....''

கீர்த்தியின் வார்த்தைகளை உள்ளிருந்தவாறே கேட்டுக் கொண்டுதான் இருந்தாள் பூரணி.

அவனது வார்த்தைகள் அவளுள் சந்தோஷத் திணறலை உண்டு பண்ண,

''பேச்சைப் பார். என்னைக் கேட்டா, எனக்கு என்ன தெரியுமாம்?'',

என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

பூரணி நிறையத்தான் மாறிவிட்டாள். இந்த வயதுக்குள் அவள் நிறையவே தெரிந்து வைத்திருந்தாள். தானாகத் தெரிந்து கொண்டது பாதி என்றால், சுற்றமும் நட்பும் அவளுக்கு எடுத்துச் சொன்ன விஷயங்கள் மீதி.

பதினைந்தாவது வயதிலிருந்து அவள் தன் தாயிடம் கேட்கிற கேள்விகள் கொஞ்ச நஞ்சமில்லை.

''அம்மா இன்னிக்குக் கிளாஸ்மேட் ஒருத்தி, மத்த பொண்ணுங்க கிட்ட சொல்லிட்டிருந்தா.

''பூரணி படிச்சு ஆபீஸ்ல வேலை செஞ்சு சம்பாதிக்கறதை விடவும், அவ குடும்பத் தொழிலைச் செஞ்சாலே நிறைய சம்பாதிக்கலாம்னு''.

''என்னடீ எங்கக் குடும்பத் தொழில்''!னு கேட்டேன். சிரிக்கிறா.''



''போய் உங்க அம்மாவைக் கேளு''ங்கறா.

''அவ என் இப்படிச் சொல்றா?''

''அவளை இங்கே இழுத்து வா. வாயிலே சூடு போட்டு அனுப்பறேன்.''

அம்மாவின் சீற்றத்தின் மூலம், தன் சிநேகிதி ஏதோ பேசக் கூடாததைப் பேசி விட்டாள் என்பதை மிகச் சுலபமாக அவள் புரிந்து கொண்டாள்.

''அம்மா, என் அப்பா யாரு?''

அவள் மௌனமாய்த் தலை குனிந்தாள்.

''என் சொல்ல மாட்டேங்கறே?''

''எப்ப சொல்லணும்னு எனக்குத் தெரியும். அப்ப சொல்றேன். இப்ப எதுவும் அதிகப் பிரசங்கித்தனமாக் கேட்காதே.''

இப்படி அம்மா எரிந்து விழுந்தபோது, தன் அப்பாவைப் பற்றிய விவரத்தில் தன் வகுப்பு மாணவி கூறியது போல ஏதோ அருவருக்கக் கூடிய, அவமானப்படக்கூடிய செய்தி அடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள்.

ஒருமுறை பள்ளியில், அவளது தந்தை பெயரை ஆசிரியை கேட்ட பொழுது, நாலைஞ்சு விஷமக்கார மாணவிகள் தங்களுக்குள் ஏதோ சமிக்ஞை செய்து குறும்பாய்ச் சிரிக்க, அவள் ''எஸ். மூர்த்தி,'' என்று வழக்கமான பதிலை அளித்துவிட்டு மாணவிகளைப் பார்க்க....

'எஸ். மூர்த்தியாம், எஸ். மூர்த்தி, இவளுக்கெல்லாம் எது இனிஷியல்?''

Vennila

இப்படியொரு கிசுகிசுப்பான குரல் எழும்பியபோது அவள் மரண அடி பட்டாற் போலத் துடித்துப் போய் விட்டாள்.

அன்று மாலை, லட்சுமி பூஜையறையில் குத்து விளக்கை ஏற்றிக் கொண்டிருக்கையில், பூரணி கூடத்து ஊஞ்சலில் குப்புறப் படுத்துத் தனக்குள் மூழ்கிப் போக,

''சாயந்திரம், விளக்கேத்தற நேரத்தில இது என்ன படுக்கை? எழுந்திரு. போய்த் தம்பூராவை எடுத்து வச்சு ரெண்டு கீர்த்தனையைப் பாடு.''

என்று லட்சுமி மகளைப் பார்த்து அதட்டினாள்.

''உம்... எம்மா, நான் உன்னை ஒண்ணு கேட்டா, கோவிச்சுக்க மாட்டியே?''

''அது நீ கேட்கிற கேள்வியைப் பொறுத்து இருக்கு. என்ன விஷயம் சொல்லு.''

''ஸ்கூல் ரிஜிஸ்தர்ல என் அப்பா பேரு எஸ். மூர்த்தி ன்னு கொடுத்திருக்கியே. நிஜமாவே என் அப்பாப் பேரு அதானா?''

''இதுல என்ன சந்தேகம்?''

''பின்னே எதுக்கு என் கிளாஸ் மேட்ஸ் எல்லாம் சிரிக்கறாங்க? 'இனிஷியல் இல்லாதவ'ங்கறாங்களே, என் இனிஷியல் ''எம்'' தானே?''

''அந்தக் கழுதைகளுக்கு வேற வேலை கிடையாது. ஒரு நாள், உங்க ஹெட்மிஸ்ட்ரஸைப் பார்த்துச் சொல்றேன் பாரு.''



''ஆமா, எங்க அப்பா—அதாம்மா, மிஸ்டர் எஸ், மூர்த்தி—அவர் அட்ரஸ் என்ன? எங்கே வேலையிலே இருக்கார்? வேலை ஏதாவது இருக்கா, இல்லே...''

''தடிக் கழுதை! உனக்கு வாய் ரொம்பத்தான் நீண்டு போச்சு.''

லட்சுமி மகள் தன் தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டதையும் மறந்து ஓங்கி அறைந்துவிட்டாள்.

அதற்குப்பின் பூரணி தன் தாயிடம் இதுபற்றிப் பேசுவதையே விட்டுவிட்டாள்.

இருந்தாலும், மனசுக்குள் இந்தக் கேள்விகள் புழுவாய்க் குடையாமலில்லை. அதே நேரத்தில் அம்மாவுக்கும் சங்கரனுக்கும் இடையிலுள்ள பந்தம் புரியத் தொடங்கியபோது—

''அம்மா இருக்காங்களா பாப்பா? டாக்டர் சங்கர மூர்த்தி இந்தப் பழக் கூடைய நம்ம வீட்டுல வச்சுட்டு வரச் சொன்னாரு.''

''வாங்க சின்னம்மா. என்ன வேணும்? பவுடரா? ஸ்நோவா? எது வேணுமோ வாங்கிக்குங்க. 'பணமா? என்னம்மா இது திடீர்னு. நான் கணக்கிலே குறிச்சுக்கறேன். உங்க கிட்டப் பணம் வாங்கினா டாக்டர் சங்கர மூர்த்தி என்னைக் கோவிச்சுக்குவாரு....''

''லட்சுமியம்மா, உங்களுக்கு விஷயம் தெரியுமா? நம்ம டாக்டரய்யா புதுசா ஒரு நர்ஸிங் ஹோம் கட்டறாரே, அதன் பேரு என்ன தெரியுமோ? பூரணி கிளினிக்.''

வெளி வட்டாரத்தில் அடிபடும் பேச்சுகள் பூரணியின் காதுவரை எட்டியபோது எல்லாமே'வெட்ட வெளிச்சமாகி விட்டது.



Vennila

அத்தனை வருத்தத்திலும் கொஞ்சம் மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

ஏதோ இந்தக் குலத்தில் பிறந்துவிட்டாளே தவிர, அம்மா ரொம்ப நல்லவள். உத்தமி; பதிவிரதை. என்னையும் அது மாதிரி வளர்க்கத்தான் பாடுபடறா.

இந்த நினைப்பே அவளுக்குப் பெருமையாய், இந்தப் பெருமையே அவளுக்கு ஒரு கம்பீரமாய் அமைந்தது.

இப்படியொரு நினைப்புத் தோன்றிய பிறகு, அவள் ஒருபோதும், தன் தாயின் மனசு புண்படப் பேசியதே இல்லை.

அன்றொரு நாள் கீர்த்தியுடன் அவன் பேசிக்கொண்டிருந்த போது, அவன் ஏதோ சொல்ல, அவள் சற்று உரக்கச் சிரிக்க, மாடியில் சங்கரனுடன் பேசிக்கொண்டிருந்த லட்சுமியின் காதில் இவளின் சிரிப்பொலி விழுந்திருக்கிறது.

அந்தக் கணத்துக்குப் பேசாமல் இருந்த லட்சுமி, அவர் கீர்த்தியுடன் விடைபெற்றுக் கிளம்பிய பிறகு, மகளை வெட்டிவிடுவது போல ஒரு பார்வை பார்க்க, பூரணி அரண்டு போய்விட்டாள்.

''என்னம்மா?''

''பெண் குழந்தைகள், இத்தனை சத்தமாவா சிரிக்கிறது—அதுவும் ஒரு ஆம்பிளை முன்னே?''

''கீர்த்தி நம்ம கீர்த்தி'தானேம்மா?''

''சே சே! நம்ம கீர்த்தியா? நம்மக் கீர்த்தியா....அந்தப் பிள்ளை உன்னைவிடப் பெரியவன். தெரியுமில்லே?



இப்படித்தான் தலையிலே அடிச்சாப்பல பேரைச் சொல்றதா? வெட்கமாயில்ல உனக்கு?''

பூரணி தாயின் முகத்தைக் குழப்பத்துடன் பார்த்தாள்.

''இது என்னம்மா புதுசா இருக்கு? இத்தனை நாள் அவனைப் பேரைச் சொல்லித்தானே கூப்பிடறேன்? இப்ப என்ன புதுசா?''

''என்னது, அவனா? இதோ பாரு, அவன் இவன்னு பேசினே, பல்லைத் தட்டிக் கையிலே கொடுத்திடுவேன். நாளைக்கு உன் கழுத்தில் தாலி கட்டப்போற பிள்ளை. உன்னைத் தன் குடும்பத்துக்கு மகாராணியா முடிசூட்டப் போற பிள்ளை. அவனுக்கு நீ கொடுக்கற மரியாதை இது தானா?''

அம்மாவின் வார்த்தைகளில் அயர்ந்து போய் நின்றுவிட்டாள் பூரணி. பேச்சே எழும்பவில்லை.

லட்சுமிக்கு அவளின் பிரமிப்பைக் கண்டதும்தான் தான் செய்த தவறே புரிந்தது. அசட்டுச் சிரிப்புடன், தன் தலையில் தானே குட்டிக் கொண்டாள். மகள் இன்னமும் மலைத்துப் போய் நிற்பதைக் கண்டு சிரிப்புப் பொங்கியது.

''என்ன பூரணி, எத்தனை நேரம் இப்படியே 'நிப்பே? நான் ஒரு மக்கு. என் வாயில் ஒரு ரகசியமும் நிக்காதே.''

அவள் மகளின் அருகில் வந்து தனது இரு கைகளாலும் அந்தப் பூ முகத்தை ஏந்திக் கொண்டாள்.

''இந்த வம்சத்துல பிறந்ததை நினைக்க நினைக்க நான் அழுத காலம் எல்லாம் போச்சு. என்னோட இந்தப் பேரு போதும். என் கண்ணு, என் செல்லம், நீ ஒரு

Vennila

குடும்பப் பெண்ணா, ஒருத்தனோட தாலி கட்டின பெண்டாட்டியா வாழப் போறே. உனக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு நம்ம குலத்தைப் பத்தி தெரியவே வேண்டாம்.''

இதைச் சொல்லும் பொழுதே துக்கம் தாளாமல் அழுது விட்டாள் லட்சுமி.

பூரணிக்குத் தன் தாய் அழுவதைத் தாங்க முடியவில்லைதான். இருந்தாலும், அந்த வருத்தத்துக்கும் அடியில் சிலுசிலுவென ஒரு குளிர்ச்சி ஓடுகிறதே, அது என்ன?

''நாளைக்கு உன் கழுத்துல தாலி கட்டப் போற பிள்ளை, உன்னைத் தன் குடும்பத்துக்கு மகாராணியா முடிசூட்டப் போற பிள்ளை...''

அம்மாவின் இந்த வார்த்தைகளில் தெறித்த பனிச் சிதறலில் அவள் உள்ளம் சிலிர்த்து நின்றது.

அன்று முதல் அவள் கீர்த்தியைக் கண்டாலே குப்பென முகம் சிவந்து போனாள். அவனுடன் நாலு வார்த்தை பேசுவதற்குள் பாழாய்ப் போன வெட்கம் வந்து, அவளைப் பிடுங்கித் தின்றது. அவன் என்ன சொன்னாலும் கேட்பதற்குத் தயாராக இருந்தாள்.

ஒருவனை ஆத்மார்த்தமாய் நேசிப்பதில், அந்தரங்கத்தில் வைத்துப் பூசிப்பதில் உள்ள சுகம் என்னவென்பதைப் புரிந்து கொண்டவுடன், படிப்பும் சங்கீதமும்கூட இரண்டாம் பட்சமாகத்தான் தோன்றியது அவளுக்கு.

இருந்தாலும், இப்பேர்ப்பட்ட மனிதனைக் கைப்பிடிப்பதற்கு ஓரளவுக்காவது தகுதி வேண்டாமா?

கீர்த்தி பெரிய டாக்டர் என்றால், அவன் மனைவியாகப் போகிற தான் குறைந்தது பி. ஏ. வாவது படித்திருக்க வேண்டாமா?



இந்த எண்ணத்திலேயே அவள் கல்லூரியில் சேர்ந்தாள்.

இரு தரப்புப் பெரியவர்களும், அவர்களது திருமண விஷயத்தைப் பற்றித் தீர்மானமாய் ஒரு முடிவுக்கு வந்து விட்ட பொழுதும், அந்தக் காதலர்கள், அத்துமீறிப் பழகினதில்லை. ஏன், முன் போல அத்தனை கலகலப்பான சம்பாஷணைகள் கூட இல்லை.

எப்பொழுதாவது கீர்த்திதான் அவளைப் பேச்சுக்கு இழுப்பான். அவள் அவனெதிரில் வராமல் கூடத்தை ஒட்டிய பூஜையறைக் கதவின் மேல் சாய்ந்தபடியே பதில் அளிப்பாள்.

''நீ படிக்கற காலேஜ்லதான் உமாவும் படிக்கிறா. உனக்கு அவளைப் பழக்கமுண்டா?''

''அவ என்னைவிட ஒரு வருஷம் சீனியர். எங்கிட்டே எல்லாம் பேசினதில்லே; காலேஜ்ல அது ஒரு தனி குரூப்.''

''அது என்ன தனி குரூப்?''

''அவளைச் சுத்தி, அஞ்சாறு பெண்கள் உண்டு. எல்லாமே பெரிய இடத்துப் பெண்ணுங்க.''

''நீயும் பெரிய இடத்துப் பெண்தான் பூரணி.''

''இருக்கலாம், இருந்தாலும் அவளைப் போல வெளிப்படையாகச் சொல்ல முடியாதே. காலேஜ்ல அவ அப்பா பேரு டாக்டர் சங்கர மூர்த்தி. என் அப்பா பேரு வெறும் எஸ். மூர்த்தி.''

''உன்னைப் பத்தி அவளுக்கு ஏதாவது தெரியுமா?''

''நல்ல வேளை, தெரியாது. தெரிஞ்சா, என் படிப்புக்கே மோசம் வந்துடும்.''

Vennila

கீர்த்தி அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான். அந்தக் கணத்தில் அவள் மனத்துக்குள் வேரூன்றியிருக்கும் தாழ்மையுணர்ச்சியை மெள்ள அகற்றி அவன் அருகில் போய் நின்று பரிவாய் ஏதாவது பேச வேண்டும் போல இருக்கும்.

''உன் படிப்பை நிறுத்த அவளுக்கு உரிமை கிடையாது பூரணி.''

''அது—அது எப்படி? நான் அவ அப்பா கொடுக்கிற கான்சியை நம்பித்தான் காலேஜ் வாசலை மிதிச்சிருக்கேன்?''

''நீ மட்டுமில்லே பூரணி. நானும் கூடத்தான். மாமா போடற சோத்துலதான் நான் இந்த அளவுக்கு அறிவாலேயும் உடம்பாலேயும் வளர்ந்திருக்கேன்.''

அவள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

''நான் மாத்திரமில்லே. என் வளர்ச்சிக்காக, எங்க அம்மாவும் என் தங்கை தம்பியும் கூட மாமாவுக்கு நன்றிக் கடன் பட்டிருக்காங்க.''

''அவன் இப்படிச் சொன்னதும், அவளின் பேச்சு, கீர்த்தியின் குடும்பத்துப் பக்கம் திரும்பும். அவனது குடும்பத்தைப் பற்றி, அவள் தெரிந்து கொள்ள ஆசைப் படுவது நியாயம்தானே? அந்த வீட்டு மருமகளாகப் போகிறவள் அல்லவா?''

இதில் வேடிக்கை என்னவெனில், 'கீர்த்தி அவன் தன்னை மணக்க இருப்பது அவளுக்குத் தெரியாது என்று நினைத்திருந்தான். அது போலவே, அவளும் இது விஷயம் அவனுக்கு இன்னமும் தெரியாது என்றே நினைத்திருந்தாள்.



இருவருமே ஒருவர் மனசை மற்றவர் அறிந்துகொள்ள விரும்பியும், நேரடியாய்க் கேட்காமல் சுற்றி வளைத்துப் பேசினார்கள்.

''ஆமா, உங்க அம்மாவை எப்ப அழைச்சிட்டு வந்து உங்ககூட வைச்சுக்கறதா உத்தேசம்?''

''ஏன் கேட்கிறே?''

''இல்லே. எத்தனை நாள்தான் அவங்க தனியா இருக்கறது?''

''நான் படிப்பை முடிச்சதும்தான் இது பத்தி யோசிக்கணும். இப்பத்தானே எம். பி. பி. எஸ். செகண்ட் இயர்! இன்னும் இருக்கே.''

''எம். பி. பி.எஸ். முடிச்சதும் மேல் எம். எஸ். இல்லே, எம். டி. க்குப் படிக்கணும்னு ஆசை வரும்.''

''பின்னே? இதோட மாமா விட்டுடுவாரா? எம். எஸ். படிக்கலாம்னு இருக்கேன்.''

''இப்படிப் படிச்சிட்டே இருந்தா, கல்யாணம் எப்போ?''

''என்னது?''

அவன் சட்டெனத் திரும்பி அவள் நிற்கும் திசையைப் பார்ப்பான்.

அவள் தன் முகத்தை அவன் பார்க்காதவாறு உட்பக்கம் இழுத்துக் கொள்வாள்.

அவளது குரல், மிக மெல்லியதாய், காற்றில் ஏறி தென்றலாய் மிதந்து வந்து அவனுடைய கன்னத்தை

Vennila

வருடும். பொங்கி வரும் சிரிப்பை மிகச் சிரமப்பட்டு அடக்கியபடி விட்டத்தை வெறிப்பான். அவனையும் மீறிக் கண்களில் சிரிப்பு தளும்பும்.

''பிள்ளை சம்பாதிச்சு, கொஞ்ச நாளாவது நானும் மத்தக் குழந்தைகளும் நிம்மதியாச் சாப்பிடணும்னு அம்மா மனசுல இருக்காதா? இத்தனை நாள்தான் என்னைப் பிரிஞ்சு தனியா இருந்தாச்சு.''

''கல்யாணமானா, உங்க அம்மாவையும் தங்கை தம்பி களையும் தன் கூட வந்து இருக்கக் கூடாதுன்னு, வரப் போற பொண்டாட்டி சொல்லுவான்னு நினைக்கிறீங் களா? அவ நல்லவளா இருக்கக் கூடாதா?''

''நல்லவளாத்தான் இருப்பான்னு என்ன நிச்சயம்? என் அதிருஷ்டம் சண்டைக்காரியா வந்தா?''

''ஏன் அப்படி நினைக்கறீங்க? சாதுவாகவும் வரலாம் இல்லையா?''

''எதுக்கு விஷப்பரிட்சை? படிச்சு முடிச்சு, கை நிறைய சம்பாதிக்க ஆரம்பிச்சு, தங்கைக்குக் கல்யாணத்தை முடிச்சுட்டு, அம்மாவுக்கும் தேவையான சிச்சுரவை பண்ணிட்டு அப்புறமாவே கல்யாணம் பண்ணிக்கறேன், போதுமா.''

''அதுக்குள்ளே தலை நரைச்சுப் போயிடும்.''

''ஆம்பிளைக்குத் தலை நரைக்கறது ஒரு குறையா என்ன? நரைச்ச தலையானாலும் எம். டி. மாப் பிள்ளைன்னு ஒவ்வொருத்தரும் தன் பெண்ணைத் தரப் போட்டி போடுவாங்க.''

''ஐயோ, நான் உங்க தலை நரைக்கறதைப் பத்திச் சொல்லலை. உங்களைக் கட்டிக்கப் போறவ தலை நரைச்சுப் போயிடும்னு சொன்னேன்.



''ப்பூ... இதானே? தலை நரைக்காத, சின்னப் பெண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கறேன்.''

பேச்சைத் தொடரத் தெரியாமல் அவள் மௌன மாவாள்.

''பூரணி.''

பதில் இருக்காது.

''பூரணி, எங்கே போயிட்டே?''

''எல்லாம் இங்கேதான் இருக்கேன்.''

''என்னடாது, நான் பேசிட்டே இருக்கேன். ஆளையே காணோமேன்னு பார்த்தேன். ஒண்ணு செய் வோமா பூரணி?''

''என்ன?''

''நான் படிச்சு முடிக்கறதுக்குள்ளே, எனக்கு எந்த பெண்ணா நீ பார்த்து செலக்ட் பண்ணிடு. நான் யோசிக் காம தாலியக் கட்டத் தயார்.''

அவள் கதவருகில் அப்படியே சரிந்து உட்கார்ந்து கொள்வாள். நீண்ட பின்னலை எடுத்து மார்பில் தவழ விட்டு, பின்னல் நுனியை அவிழ்த்து அவிழ்த்துப் பின்னு வாள். அவனது வார்த்தைகள் காரணமே இல்லாத ஒரு வித சஞ்சலத்தை மனசில் தோற்றுவிக்க, கண் இமைகளும் இதழும் ஒருசேரப் படபடக்கும்.

''உங்களுக்கு எந்த மாதிரிப் பெண்ணு வேணும்?''

என்னைப் பொறுத்தவரைக்கும் அவ சுமாரான அழகியா இருந்தாக்கூடப் பரவாயில்லே.''

Vennila

''பின்னே?''

''அவ என் குடும்பத்தை அனுசரிச்சுப் போகணும், பூரணி. என் அம்மா மனசு கோணாம நடந்துக்கணும். என் தங்கைகிட்ட இதமா நடந்துக்கணும்.''

''அம்மா, வாழ்க்கையில ரொம்ப அடிபட்டவ.''

''இன்னிக்கு நான் டாக்டர் வீட்டுல, பால்பாயசமும் பன்னீர் ரசமும் சாப்பிடறப்ப கூட அம்மாவையும் என் தங்கை தம்பியையும் நினைச்சுக்கிட்டேதான் சாப்பிடு வேன். அவர்களை நினைச்சுட்டா, சோறு உள்ளே இறங்காது.

''பாவம், இத்தனை வருஷத்துல ஒருநாள் கூட நல்ல சமையலை அம்மா, தன் குழந்தைகளுக்குப் பண்ணிப் போட்டதில்லே. இத்தனைக்கும் அம்மா கைச் சமையல் அமிர்தமா இருக்கும். வசதி இருந்தாத்தானே?''

''வரப்போறவ, சமையல்லே உங்க அம்மாவை மிஞ்சறவளா இருக்கப்போறா.''

''அது முடியாது பூரணி. அவ கைக்கு அலாதி ருசி உண்டு. அம்மா கைக்கு அப்புறம்தான் பெண்டாட்டி கை.

''சரி, விடுங்க. ஏதாவது தனக்குத் தெரியலைன்னா உங்க அம்மாவைக் கேட்டுச் செய்யறா.''

''அப்புறம் அம்மா கொஞ்சம் மடி, ஆசாரம் பார்க் கறவ. நானே அவளைப் பார்க்கப் போனால் ஏதோ தெய்வ சந்நிதானத்தில் நிக்கறாப்பல நிக்க வேண்டி இருக்கு. வரப்போறவ, அவ ஆசார அனுஷ்டானங் களுக்கு ஒத்துப்போறவளா இருக்கணும்.''

இதைச் சொன்னதும் பூரணியின் முகத்தில் கவலை படரும்.



''இது என்ன, இவர் இப்படிச் சொல்றார்! அத்தனை ஆசாரமா இருக்கற இவரோட அம்மா, என்னை... என்னை ...எப்படி எத்துக்கப் போறா?''

''இந்த அம்மாவும் அப்பாவும் தானாகட்டும். இதைப் பத்திக் கவலையே படாம இருக்காங்களே! கடைசியில, இவரோட அம்மாவுக்கு அந்தச் சம்பந்தம் பிடிக்காமப் போய், வேண்டாம்னு சொல்லிட்டா. ஐயோ, அப்புறம் என் கதி என்ன?''

அவள் தனக்குள் மூழ்கிப் போவாள். அவன் ஓரப் பார்வையால் அவளது தவிப்பை ரசிப்பான்.

,'என்ன, பேச்சு மூச்சைக் காணோம்? இவனுக்குப் பெண் தேடித் தர நம்மாலே முடியாதுங்கற முடிவுக்கு வந்துட்டியா?''

''சேச்சே, அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. இத்தனை ஆசாரமா இருக்கற உங்க அம்மா, வேற ஜாதியில பெண் எடுப்பாளான்னு யோசிக்கறேன்.''

''வேற ஜாதிப் பொண்ணா? என்ன சொல்றே நீ?''

அவள், உதட்டைக் கடித்துக் கொள்வாள்.

''என்னைப் போய் உங்களுக்குப் பெண் பார்க்கச் சொன்னா தான் இதுமாதிரித்தான் வேற ஜாதிப் பெண் எவளையாவது இழுத்துட்டு வந்து நிறுத்துவேன். அதுக்குப் பரவாயில்லைன்னா சொல்லுங்க.''

''இது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்தான்.''

அவன் முகவாயைச் சொறிய, அவளது விழிகளில் கண்ணீர் குளம் கட்டி விடும்.

Vennila

கொஞ்ச நேரம்தான். லேசாக மூக்கை உறிஞ்சும் சத்தம் கேட்டதுமே, கீர்த்தி அநியாயத்துக்குப் பதறிப் போய்விடுவான். ''அடடே! அழறியா என்ன?''

''நான் ஒண்ணும் அழல்லே. நான் எதுக்காக அழணும்? நானா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்? யாரோ, எவளோ, அவளுக்காக நான் ஏன் அழணும்? எனக்கு என்ன வந்தது?''

''பூரணி...''

''என்னோட ஒண்ணும் பேசவேண்டாம். உங்க அம்மாவுக்குத் தெரிஞ்சா, உசிரையே விட்டுடுவா. பையன், கல்யாணமாகிறதுக்கு முன்னாலேயே 'கண்டவளோட தொடர்பு வச்சிட்டிருக்கான்னு சொல்லுவா. என் கூடப் பேச வேண்டாம்.''

அவள் புடைவைத் தலைப்பினால் மூக்கை அழுந்தத் தேய்க்க, அவன் அவளது சிவந்து பளபளக்கும் நாசியை ரசித்தபடி, பரிவுடன் சொல்வான்.

''ஆசாரமும் அனுஷ்டானமும் மாத்திரம் ஒரு மனுஷனைச் சுத்தப்படுத்தாது பூரணி. எத்தனையோ மேல் குலத்திலே பொறந்தவன்கூடச் சில விஷயங்கள்லே லஜ்ஜை கெட்டுப் போறான். அதே மாதிரி 'கீழ்க் குலம்'னு பேசப்படற வம்சத்துல பொறந்தவன் கூட ஞானஸ்தனா இருக்கிறதுண்டு.''

''நீங்க சொல்லிட்டா ஆச்சா? உங்க அம்மா.''

''அம்மாவோட ஆசாரம் எது தெரியுமோ? 'துஷ்டரைக் கண்டா தூர விலகு;' 'உயிரே போனாலும் பொய் சொல்லாதே', 'நல்ல மனிதர்களுக்கு நாய் போல்



உழை'' இதுதான். நான் சும்மாவாவது உன்னைப் பயமுறுத்தினேன்.''

அவன் சிரிப்பான். அவளுமே, சட்டென முகம் மலர்வாள்.

''நான் எதுக்குப் பயப்படணும்? நானா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவ?''

''அதானே? பார்த்தியா மறந்து மறந்து போகுது. நீ தாராளமா எந்த ஜாதியிலே வேணுமானாலும் எனக்குப் பெண் தேடு.''

''ஆகட்டும்.''

ஒன்றுமேயில்லாத, நேருக்கு நேர் மனசு விட்டுப் பேசினால் ஐந்து நிமிஷங்களில் முடிந்து விடக் கூடிய பேச்சைச் சுற்றி வளைத்து, இல்லாத பொல்லாத அலங்காரங்களெல்லாம் செய்து...அப்பப்பா!

இந்தக் காதல் ரொம்பவுமே சக்தி வாய்ந்த ஒன்று தான். தன் கையில் அகப்பட்டவர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது!

## 5

கீர்த்தி—பூரணி கல்யாணத்தில் சங்கரன் எத்தனை உறுதியா இருந்தார், எவ்வளவு எதிர்பார்ப்போடு இருந்தார். இவர்களது திருமணத்துக்கு முன் உமாவின் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

உமாவை இதற்கு மேலும் வீட்டில் வைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போலத் தவித்துப் போனார்.

Vennila

ஆமாம். உமா, பூரணியைப் போல இல்லை. இவளது குணமும், நடத்தையும் அப்படியே அவள் தாயை உரித்து வைத்திருந்தது.

உமாவை அடக்க ஒரே வழி, அவளை எவன் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான்.

பாவம், இவளை மணக்கப் போகிற அந்த முகம் தெரியாத மனிதன் மீது, சங்கரனுக்கு அளவிட முடியாத பரிதாபம் எழுகிறதுதான். இருந்தாலும் அதையெல்லாம் பார்த்தால் முடியுமா?

இப்படிப்பட்ட பெண்ணை வீட்டில் வைத்திருப்பதைவிட அபாயம் வேறில்லை.

சங்கரன், இந்த விஷயத்தில் மிக உறுதியாக இருந்தார். மீனாட்சியின் அழுகையோ, உமாவின் பிடிவாதமோ அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

மகளுக்குக் கல்யாணம் செய்து முடித்துவிட வேண்டும் என இவர் நினைத்த மறுவினாடியே அவளது ஜாதகத்தைக்கையில் எடுத்து விட்டார்.

இது சங்கரனின் சுபாவம். ஒன்றை நினைத்தால், அதை முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.

உமாவின் திருமணம் முடிந்த கையோடு கீர்த்தி பூரணியின் திருமணம். அப்பொழுதுதான் அவரது ரகசிய வாழ்க்கை அம்பலத்துக்கு வரும்.

இதுவரையில் மீனாவுக்கே தனது கணவரைப் பங்கு போட்டுக் கொண்டிருப்பவள் யாரென்று தெரியாது.

புருஷனுக்கு வேறு பெண்ணொருத்தியின் சகவாசம் இருக்கிறது என்கிற அளவில் அவளுக்குத் தெரியும்,



ஆனால், அந்தப் பெண் யாரென்பதோ, அவளுக்குத் தன் கணவன் மூலமாய்ப் பிறந்த பெண் தம் மகளையொத்த வயசில் இருக்கிறாள் என்பதோ அவளுக்குத் தெரிய நியாயம் இல்லை.

ஆனால், நெஞ்சுக்குள் அந்தச் சந்தேகக் கனல் எப்பொழுதும் தண தணவென்று எரிந்து கொண்டே இருக்கும்.

சங்கரன் தன் காருக்குத் தனியாக டிரைவர் என எவரையும் நியமித்துக் கொள்ளாததால், அவரது வெளி உலக விவகாரம் எதுவுமே இவள் அறிய முடியாததாக இருந்தது.

பல சமயங்களில் கீர்த்தியின் வாயிலிருந்து, இந்த ரகசியத்தைப் பிடுங்க முயன்றிருக்கிறாள். நயமாகவும் பயமாகவும் எத்தனையோ பேசிப் பார்த்திருக்கிறாள். அவன், வாயைத் திறந்தால்தானே?

''கீர்த்தி!''

''என்ன மாமி?''

''உமாவுக்குக் காப்பி கலக்கச் சொல்லியிருக்கேன். உனக்கும் அரைத் தம்ளர் கொண்டுவரச் சொல்லட்டுமா?''

''எதுக்கு மாமி, வேண்டாம்.''

''ஏண்டா வேண்டாம்கறே. காலேஜ் விட்டு நேரே வீட்டுக்கு வராம, மாமாவோட எங்கேயோ சுத்திட்டு வர்ரே டயர்டா இருக்காதா? உங்க மாமாதான் தன் வயசை மறந்து நேரம் காலம் தெரியாம ஊரைச் சுத்தறார். வயசுப் பிள்ளை நீயும் இப்படி அவரோட சுத்தினா எப்படி? படிக்க வேண்டாமோ? வேளா

Vennila

வேளைக்குச் சாப்பிட்டு உடம்பைக் கவனிச்சுக்க வேண்டாமோ?''

அவன் மேல் திடீர் கரிசனத்துடன் பேசிக் கொண்டே வருபவள், சட்டெனக் குரலைத் தழைத்து அவனிடம் நெருங்கி ரகசியமாய்க் கேட்டாள்.

''ஆமா, நானும்தான் கேட்கறேன். ஒரு நாளைப் போல தினமும் உங்க மாமா, உன்னை அழைச்சிட்டு எங்கே போறார்?''

''ஒரு டாக்டரைப் பார்க்க.''

''இவரே ஒரு டாக்டர்! இவர் எதுக்கு இன்னொரு டாக்டரைப் பார்க்கப் போகணும்?''

''அது வந்து மாமி. என்னதான் பெரிய டாக்டரா இருந்தாலும் அவருக்கு உடம்பு சரியில்லைன்னா, வேற டாக்டரைத் தேடித்தானே போகணும்? தனக்குத் தானே வைத்தியம் செஞ்சுக்க முடியாதே.''

''அப்படி என்னடா உடம்பு அவருக்கு?''

''என்னைக் கேட்டா எனக்கு என்ன தெரியும்? ஏன், நீங்களேதான் மாமாவைக் கேளுங்களேன்.''

அவன் புன்னகை மாறாமல் சொல்ல, அவள் சட்டென முகத்தைக் கடுப்புடன் தொடிப்பாள்.

''நான் எதைக் கேட்டு அவர் ஒழுங்கா பதில் சொல்லியிருக்கார்? இந்தா. இங்கே பாரு, என்கிட்ட பொய் சொல்லிப் பிழைச்சவங்க கிடையாது. உண்மையைச் சொல்லு. மாமா தினமும் யாரைப் பார்க்கப் போறார்?''

''எனக்குத் தெரியாது மாமி.''



''பொய்யா சொல்றே? என் வீட்டுச் சோத்தைத் தின்னுட்டு வளைய வர்ற உனக்கு இத்தனை திமிரா? உன்னை...உன்னை...''

அவள், பத்ரகாளியாய்க் கையை ஓங்கியபடி விகவ ரூபம் எடுப்பாள். அவன், சிரித்தபடியே அவளது கையை ஒதுக்கிவிட்டு அங்கிருந்து நகருவான்.

முன்பு மீனாட்சியிடம் இருந்த பயம் இப்பொழுது கீர்த்திக்கு இல்லை. அவளது கோபமும், வெறுப்பும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்கிற தீர்மானத் துக்கு வந்து விட்டான்.

அனேகமாய், மீனாட்சி கேட்கிற கேள்விகளுக்கு நின்றே பதில் சொல்ல மாட்டான். உமாவுக்கோ, அவனைக் கண்டாலே ஆவதில்லை. ஏற்கனவே அவன் மேல் வெறுப்பு. போதாக் குறைக்கு, அவள் தனது ஆண் சிநேகிதர்களுடன் சுற்றும் பொழுது, சில இக்கட்டான சந்தர்ப்பங்களில் கீர்த்தியின் கண்களில் மாட்டியிருக் கிறாள். அவன் அதைக் கர்ம சிரத்தையுடன் கொண்டு வந்து தன் அப்பாவிடம் சொல்லியிருப்பானோ என்கிற பயம் வேறு.

அவன், தன் மீது பழியைச் சுமத்துவதற்குள், தான் அவனை முந்திக் கொள்ள வேண்டும் என்கிற வேகத்தில், இல்லாததும் பொல்லாததுமாய் சங்கரனிடம் வந்து கோள் சொல்லுவதுமுண்டு.

''அப்பா, நீங்க அந்தக் கீர்த்திக்கு ரொம்பத்தான் இடம் கொடுக்கறீங்க.''

''அப்படியா? ஏன் என்ன செஞ்சான்?''



Vennila

''நேத்து சாயந்திரம் அஞ்சு மணி சுமாருக்கு, உங்க காரை எடுத்துட்டு, மவுண்ட் ரோடுலிசுத்தினானா இல்லை யான்னு கேளுங்க.''

''மவுண்ட் ரோட்லேன்னா குறிப்பா எங்கே?''

''குறிப்பா, அலங்கார் தியேட்டர் வாசல்லே. ஐயா டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டிருக்காரு தனக்கும் தன் ஃபிரிண்ட்ஸுக்குமா.''

''அப்புறம்?''

''இம்பாலா ஹோட்டல்லே வெஜிடபிள் பிரியாணி, பார்சல் வேற. எவனுக்குக் கொடுக்கவோ.''

''ஆமா, நீ எங்கே அலங்கார் தியேட்டருக்குப் போனே?''

''என், என் ஃபிரண்ட்ஸ் கூடச் சினிமாவுக்குப் போயிட்டுத் திரும்பி வர்றப்ப.''

''இவனைப் பாத்தியாக்கும்? அப்படியே நீ, உன் ஃபிரண்ட்ஸ் கூட இம்பாலாவுக்குள்ளே நுழைஞ்சியா?''

''அது—அது—''

''அதுல ஒண்ணும் தப்பில்லேன்னா இதுலயும் ஒண்ணும் தப்பில்லே. சினிமாவுக்கு ரிசர்வ் பண்ணச் சொன்னது நான்தான். பிரியாணி வாங்கிட்டு வரச் சொன்னதும் நான்தான். சாயந்தர நேரத்துல வீட்டுக்கு வந்தா, உங்க அம்மாவோட பிடுங்கல் தாங்க முடியல்லே. அதான் வெளியிலேயே டிபனை முடிச்சுட்டு. ஊரைச் சுத்திட்டு வர்றோம். போதுமா?''

அவர், அப்படிச் சொல்கையில் மேற்கொண்டு என்ன பேசுவது என்றே தெரியாமல் உமா விழிப்பாள். இதை,



உள்ளிருந்தபடியே கேட்கும் மீனாட்சி மட்டும், பத்து விரல்களையும் சேர்த்துப் படபடவென முறிப்பாள்.

''எனக்குப் பயந்து வெளியிலே சுத்தறாராமா? யார் கிட்ட கதை விடறார்? அடியே உமா, அப்பா சொல்றதை நீ நம்பறயா?''

''நான் நம்பலைம்மா.''

''நம்பாதே. மனுஷனுக்கு வாயில வர்றதெல்லாம் பொய். அவர் ரொம்ப நாளாவே வேற ஒருத்திய வச்சுட் டிருக்கார்.''

''நிஜமாவா?''

''சத்தியம் தாண்டி பெண்ணே. வேலிக்கு ஓணான் சாட்சிங்கறாப்பல, இவர் செய்யற எல்லா அநியாயத்துக் கும் இந்தப் பிள்ளை உடந்தை. அடியே, இவன் லேசுப் பட்டவன் இல்லேடி. என்னிக்கு இவன் நம்ம வீட்டுக் குள்ளே அடியெடுத்து வச்சானோ, அன்னிக்கே எனக்குக் கேடுகாலம் பொறந்துட்டது. துக்கிரி....''

அம்மாவின் வார்த்தைகளை அப்படியே நம்பாமல் போனாலும், உமாவின் மனசில் ஏற்கனவே கீர்த்தியின் மீதிருந்த கசப்பை இன்னமும் இந்த வார்த்தைகள் அதி கரிக்கச் செய்ததென்னவோ நிஜம்.

''ஊர் பேர் தெரியாத எவனோ ஒருத்தனுக்காக, இந்த அப்பா ஏன் இத்தனை செலவழிக்க வேண்டும்?''

அவள் எரிச்சலுக்கு இது மட்டுமல்ல காரணம். அவள் யாருக்கும் தெரியாதென மறைத்து வைத்திருக்கும் பல விஷயங்கள் அவனுக்குத் தெரியும்.

ஒரு நாள், கீர்த்தி வேகமாய் மாடியேற, இவன் அதை விடவும் வேகமாய் மாடியினின்று கீழிறங்க, ஒருவர் மேல்

Vennila

ஒருவர் மோதிய அதிர்ச்சியை வீடவும் பெரிய அதிர்ச்சி அவன் கையிலிருந்த அலங்காரப் பை, படிகளில் உருண்டு, வாய் பிளந்து, தன்னுள் அடக்கப் படுத்தியிருந்த பொருட் களை நாலா பக்கமும் வாரியிறைத்த போது கீர்த்திக்கு ஏற்பட்டது.

''அது என்ன, சின்னச் சின்னதாய்ப் பளபளக்கும் பிளாஸ்டிக் மேலுறையில்? மாத்திரைகளா...''

அவன் குனிந்து நிதானமாய் அவைகளைப் பொறுக்கி நிமிர்ந்தான்.

அதற்குள் அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட உமா வெடுக் கென அவன் கையிலிருந்த மாத்திரை அட்டையைப் பிடுங்க, அந்த இமைப் பொழுதில் மாத்திரையின் பெயரைப் படித்துவிட்ட கீர்த்தி வாயடைத்துப் போனான்.

''ஐயோ, இது கருத்தடை மாத்திரைகள் இல்லையோ...''

எம். எஸ். படித்துக் கொண்டிருந்த கீர்த்திக்கு, இந்த மாத்திரைகளின் உபயோகம் பற்றிச் சொல்லியா தர வேண்டும்?

அவன் இமைகள் விரிய, வாய் சற்றே பிளக்க, அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்க, அவள் தன் முகத்தில் பெருகும் வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றியபடி, கீழே கிடக்கும் மற்றப் பொருட்களைத் திரட்டித் தன் கைப் பையில் திணித்துக் கொண்டு அவனைப் பார்த்துப் புலியாய்ச் சீறினாள்.

''எதிர்த்தாப்பல ஒரு மனுஷி வர்றது தெரியல்லே? எருமை மாடு மாதிரி இப்படியா வந்து மோதறது? ஸ்டுபிட்...''



அவள் விர்ரெனப் படிகளில் இறங்கிப் போயே போய் விட்டாள். அவன் நட்டு வைத்த மரமாய் அங்கேயே வெகு நேரம் நின்று விட்டான்.

அன்று முழுவதும்—ஏன், அதற்குப் பின் வெகு நாட்கள் வரையிலும் இந்தச் சம்பவத்தின் அதிர்ச்சி அவனை விட்டுப் போகவில்லை.

எத்தனை இரவுகள் தூக்கம் வராமல் தவித்திருப்பான் அவன்?

அவன் இதற்குப் பின் நாலைந்து நாட்கள் விடாமல் இவளது கைப்பையை மிக ரகசியமாகச் சோதனை போட—

திங்கள்—செவ்வாய்—புதன்... கிழமை வாரியாகப் பொத்தலாக்கப் பட்டிருந்த மாத்திரை அட்டை, தனது பல்லில்லாத பொக்கை வாயால், இவனைப் பார்த்து எகத்தாளமாய்ச் சிரிப்பது போலச் சிரிக்கத் துடித்துப் போய் விட்டான் அவன்.

சங்கரனிடமிருந்து மறைக்கக் கூடிய சமாச்சாரம் இல்லை இது. சொல்லிவிட வேண்டும்தான். ஆனால், எப்படிச் சொல்வது? அதுவும் அவர், மகளுக்கு வரன் தேடு வதில் முனைப்பாய் இருக்கும் சமயத்தில்?

''மாமா...''

''என்னடா?''

''ஒண்ணுமில்லே...''

''இல்லை என்னமோ சொல்ல வர்றே. சொல்லு.''

''த்சு. அது ஒண்ணும் பெரிய விஷயமில்லே மாமா.''

''நீ மென்று முழுங்கறதுலேருந்தே ஏதோ விஷயம் இருக்கறதாப்படறது எனக்கு. சொல்லுடா. நான் வேற

Vennila

உனக்கு நிறைய நியூஸ் வச்சிருக்கறேன்.''

''அப்போ, நீங்க சொல்ல வந்ததை முதல்லே சொல்லுங்க மாமா. என்னோட நியூஸ்லே இன்ட்டிரஸ்டிங்கா எதுவுமே இல்லே.''

''நீ சொன்னாத்தான் நான் சொல்வேன்.''

''நோ மாமா. இந்த ஒரு தடவை, நீங்க முதல்லே சொல்லுங்க. அப்புறம் நான்.''

''சரி. போ, இந்தத் தடவை நானே விட்டுக் கொடுக்கறேன்.''

அவர், தன் கழுத்தில் மாட்டியிருந்த ஸ்டெதஸ் கோப்பைக் கழற்றி ஒரு பக்கமாய் வைத்துவிட்டு, கண்களில் தோன்றிய வெற்றி மதர்ப்பை மறைக்கும் வழி தெரியாமல், மந்தகாசமாய் இவனைப் பார்த்தும் பாராமல் ஒரு சிரிப்புச் சிரித்தார்.

''என்ன மாமா?''

''நம்ம உமாவுக்கு எத்த வரனா. நான் தேடிப் பிடிச்சுட்டேண்டா கீர்த்தி.''

''நிஜமாவா?''

''பின்னே பொய்யா? மாப்பிள்ளை திருச்சியிலே டாக்டரா பிராக்டிஸ் பண்ணிட்டிருக்கான். நல்ல குடும்பம். அவன்தான் வீட்டுக்கு மூத்த பிள்ளை. கை நிறையச் சம்பாதிக்கிறான். ராசியான டாக்டர்னு பேர் எடுத்துட்டான். வயசுதான் — இவளுக்கும் அவனுக்கும் நடுவுல ஏழெட்டு வருஷம் வித்தியாசம்.''

''சொல்லுங்க.''



''ஆனா, அதெல்லாம் ஒரு பிரமாதமான விஷயம் இல்லேன்னு வச்சுக்கோ. என்னைக் கேட்டா, உமா மாதிரி பிடிவாதமும் தான்தான் உசத்திங்கற அகம்பாவமும் இருக்கிற பெண்ணுக்கு இந்த மாதிரி, கொஞ்சம் அதிகமா வயசு வித்தியாசம் இருக்கிற இடங்களைத்தான் பார்க்கணும். அப்பத்தான் இவளோட லகான் எப்பவும் அவன் கையில் இருக்கும். இல்லைன்னா, இவ புருஷன் தலையில மிளகா அரைச்சிட்டுப் போயிடுவா.''

அவன் பேசவில்லை.

''பையனை நேர்லே பார்த்தா அசந்து போயிடுவே. நல்ல பெர்ஸனாலிடி. எப்பவுமே சிரிச்ச முகம். பெரியவர்கள் கிட்ட அவன் பழகற விதத்தைப் பார்த்ததுமே எனக்கு அவனைப் பிடிச்சுப் போச்சு.''

அவன் மௌனம் சாதித்தான்.

''வாயில என்னடா கூழிங்கம்மா?''

அவர் அதட்டியதும்தான் சுய உணர்வு பெற்றான் கீர்த்தி.

''ஸாரி மாமா.... நான் எங்கேயோ கவனமா இருந்துட்டேன்.''

''நீ எங்கே கவனமா இருப்பேன்னு எனக்குத் தெரியும்டா. அது விஷயமாகவும் சில யோசனைகள் பண்ணித்தான் வச்சிருக்கேன்.''

''மாமா....''

''கொஞ்சம் பொறு மருமகனே. உமா கல்யாணத்துக்கு உன் அம்மா, தங்கை, தம்பீ எல்லாரையும் வரவழைக்கப் போறேன். உமா கல்யாணம், கோலாகலமா

Vennila

ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துலே நடக்கப் போகுது. என்னோட ஆபிஸ் கணக்கான என் ஃபிரண்ட்ஸ், பேஷண்ட்ஸ், இப்படி எத்தனையோ பேர் வருவாங்க. லட்சுமியையும் பூரணியையும் கூடக் கல்யாணத்துக்குக் கண்டிப்பா வரணும்னு சொல்லியிருக்கேன்.

கல்யாண மண்டபத்துல பூரணி உட்கார்ந்திருக்கறப் பவே, 'இவதான் உங்க வருங்கால மருமகள். பார்த்துக் குங்க'ன்னு உன் அம்மா கிட்டே சொல்லப் போறேன். உமா கல்யாணம் முடிஞ்ச பதினைஞ்சாம் நாள் உங்க கல்யாணம்.''

சங்கரன், மிக உற்சாகமாகச் சொன்னார். அவர் அத்தனை உல்லாசமாய்ப் பேசும் சமயத்தில் இந்த மாத் திரைகளைப் பற்றிப் பேசி, அவரது நிம்மதியைக் குலைக்க விரும்பவில்லை அவன்.

தொண்டை வரையில் வந்துவிட்ட வார்த்தைகளை மென்று விழுங்கியபடி நின்று விட்டான்.

''சரி, நான் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி முடிச்சாச்சு. நீ என்ன சொல்ல வந்தே? சொல்லு.''

இப்படி அவர் கேட்டதும் பதறிப் போய்விட்டான்.

''அது வந்து... ஒண்ணுமில்லே மாமா... எனக்கும் பூரணிக்கும் உமா கல்யாணத்துல நடக்கற அத்தனை கோலாகலமும் நடக்குமா? நீங்க முன் நின்று நடத்துவீங் களா, இல்லே...''

''ப்பூ... இதுதானா? ஏண்டா கீர்த்தி, பூரணி மட்டும் என் பெண் இல்லையா? அவ கல்யாணத்தை அந்த மாதிரி ரகசியமாப் பண்ணினா என் மனசாட்சியே என்னை உறுத்தாதோ? நீ வேணா பார்த்துட்டேயிரு.



இதே ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்துலதான் அவ கல் யாணமும்— ஸாரி, உங்க கல்யாணமும் நடக்கப் போகுது. நான் தான் என் பெண்ணை உனக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கப் போறேன்.''

''மாமா, அம்மாமி கிட்ட எப்படி இந்த விஷயத்தை...''

''ஷ்... அம்மாமி, அவ பெண் கல்யாணம் முடியற மட்டும் நிம்மதியா இருக்கட்டும். அதுக்கு அப்புறம்தான் நான் விஷயத்தையே,சொல்லப் போறேன்.''

''அடேய் கீர்த்தி, இந்த வயசுக்கு மேல, ரெண்டாவதா ஒருத்தியை வீட்டுல கொண்டு வந்து வச்சுட்டுக் கூத்தடிக் கப் போறதில்லே. ஏதோ லட்சுமியை நான் தொட்ட தோஷத்துக்கு, அவளுக்கு இந்தச் சந்தோஷத்தையாவது நான் கொடுக்க வேண்டாமா?''

அவரது வார்த்தைகளில் கரைந்து போய் நின்று விட்டான் கீர்த்தி.

இந்த மனிதருக்குத்தான் எத்தனை நல்ல மனசு? தான் செய்த ஒரு தவறுக்காக, காலம் முழுக்க மனசுக்குள் வெதும்பி வெதும்பிப் போகிறார்!

அடடா! இப்படியொரு மனிதரிடம் தன்னை இழக் கவும் லட்சுமி கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இந்த நல்லவருக்குப் போய், உமா எப்படி மகளாகப் பிறந்தாள்? இவரின் தூய்மைக்கும், அவளின் களங்கப்பட்ட மனசுக்கும், நிலவில் தென்படும் கறை போல.

கீர்த்தியால் உமாவின் நடத்தையைப் பற்றிச் சங்கர னிடம் வாயைத் திறக்கவே முடியவில்லை. ஒவ்வொரு முறையும் அவன் இது பற்றிப் பேச முனையும்

Vennila

போதெல்லாம், அவர் மகளின் திருமணத்தைப் பற்றி உற்சாகமாய்ப் பேசத் தொடங்குவார்.

''இப்பொழுது வேண்டாம். பிறகு சொல்லிக் கொள் ளலாம்.''

அவன், தான் சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமல், மனதக்குள் வைத்து மறுகித் தவித்தான்.

இதற்குள், அவனைப் பற்றிய விவரங்கள் பல, அவன் தேடிப் போகாமலேயே தெரிய வந்தது.

கல்லூரி மாணவிகளின் சகோதரர்கள் சிலர் கீர்த்திக்கும் சினேகிதர்களாதலால் அவர்கள் அவனிடம் உமாவைப் பற்றிய சகலமான விவரங்களையும் சொன்னார்கள்.

''நீ வேணாப் பார்த்துட்டே இரு கீர்த்தி. அந்த உமாவை ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் காலேஜை விட்டே துரத்தப் போறாங்க.''

''அடப்போடா, நீ ஒண்ணு. அவ அதுக்கெல்லாம் மசியற ரகம் இல்லே. காலேஜை விட்டு நின்னாலும் பரவாயில்லையே! இவ என்னைக்கு டாக்டர் சங்கரன் தலையிலே பெரிய கல்லாத் தூக்கிப் போடப் போறாளோ!''

''அவளுக்கு இருக்கற ஃபிரண்ட்ஸ் எல்லாம் நம்பர் ஒன் ரோக்ஸ்டா. இதுல ஷ்யாம்னு ஒரு பையன் பக்கா ஹிப்பி. எப்பவும் அவனோடதான் இவ சுத்திக்கிட்டே இருப்பா.''

''டேய் கீர்த்தி, ஒரு வாரம் முந்தி, நன் கிளாஸ் மேட்ஸ் சிலரோட எக்ஸ்கர்ஷன் போறதா உங்க உமா வீட்டுல சொல்லிட்டுப் போனாளா? எங்கே ஊட்டி, கொடைக்கானல் போறதாத்தானே சொல்லிட்டுப் போனா? அவ அங்கேயெல்லாம் போகல்லே. ஷ்யாம்கூட கோவா போயிட்டு வந்திருக்கா.''



அவளது பெயர் வெளிவட்டாரத்தில் மிக மோசமான முறையில் அடிபட்டது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தபின் கல்லூரி முதல்வர் டாக்டர் சங்கரனைத் தொலைபேசி மூலம் அழைத்து, உமாவைப் பற்றி, மிகச் சுருக்கமாக அவரது மனது புண்படக் கூடாது என்கிற ஜாக்கிரதை உணர்வுடன் தயங்கித் தயங்கித் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

''டாக்டர், நான் சொல்றதைத் தயவு செஞ்சுத் தப்பா எடுத்துக்கக் கூடாது.''

''சொல்லுங்க மேடம்.''

''நீங்க எவ்வளவோ பெரிய டாக்டர். பல நோயாளிகளைத் தினசரி கவனித்து, வைத்தியம் செய்ய வேண்டிய பெரிய பொறுப்பு உங்களுடையது. இதெல்லாம் எனக்கும் தெரியும். ஆனா, அதுக்காகப் பெத்த மகளைச் சரிவரக் கவனிக்காம விடக் கூடாது இல்லையா?''

''நீங்க என்ன சொல்றீங்க?''

உங்க மகள் உமாவை நீங்கக் கண்டிச்சு வளர்க்கலைன்னு நினைக்கறேன். காலேஜுக்குப் பாதி நாள் வர்றதேயில்லை. வந்தாலும் மத்த ஸ்டூடன்ட்ஸ் கிட்டே பேசத் தகாத வார்த்தைகளையெல்லாம் பேசறா. அவளுக்கு அட்வைஸ் பண்ணற லெக்சரர்ஸ், புரபஸர்ஸை மகா மட்டமா திட்டறா...''

அதிர்ச்சியில் பேச்சிழந்தார் சங்கரன்.

Vennila

''டாக்டர், என் வார்த்தைகள் உங்களை ரொம்பவும் பாதிச்சிடுத்தும் போல இருக்கு. ஸாரி... எக்ஸ்ட்ரீம்லி ஸாரி... நானே ரொம்ப நாளா யோசிச்சு, கடைசியிலே வேற வழியில்லாம இப்ப உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்.''

''பரவாயில்லே. அந்தமட்டும் இப்பவாவது இது பத்தி என் கிட்டே சொன்னீங்களே! என் மக சரியா படிக்கிறது இல்லேங்கறது மட்டும்தான் எனக்குத் தெரியும். அவளை வளர்க்கற பொறுப்பு முழுக்க என் மனைவி கிட்டே விட்டுட்டேன். மடையன் நான்.''

''ஐய்யய்யோ, அப்படியெல்லாம் சொல்லாதீங்க டாக்டர். நான் எதுக்கும் விஷயத்தை உங்க காதுலே போட்டு வைக்கலா மேங்கறதுக்காகத்தான் சொன்னேன். அப்புறம் ஒரு விஷயம். இப்ப நான் சொல்றதை—ஜஸ்ட் உங்க வெல்விஷரோட சஜஷனா எடுத்துக்கறதா இருந்தா...''

''எதுவானாலும் தயங்காமச் சொல்லுங்க.''

''உமாவுக்குப் படிப்பு வரல்லே. என்னதான் நீங்க, இனிமே அவளைக் கண்டிப்பும் கறாருமா நடத்தினாலும் அவ அதுக்கெல்லாம் பணியற ரகமில்லே. இள மூங்கிலை வளைக்கலாம், முத்தின மூங்கிலை அசைக்க முடியுமா? வீணா உங்களுக்கும் எதுக்கு டென்ஷன்? பேசாம,அவ கல்யாணத்தை முடிச்சுடுங்க. வர்ற புருஷனுக்காவது அடங்குவா இல்லையா.''

''நானும் இதுபத்தி யோசிச்சிட்டுத்தான் இருக்கேன். இப்பக் கூட நல்ல வரன் ஒண்ணு வந்திருக்கு. இதையே முடிச்சுடலாம்னு இருக்கேன்.''

''வெரிகுட். அப்ப இன்னும் ஒரு மாசத்திலே அவ கல்யாணத்தை எதிர்பார்க்கலாம்னு சொல்லுங்க? நானாக



அவளைக் காலேஜை விட்டு வெளியேற்ற விரும்பலை. ஆனா, காலேஜோட நன்மையைக் கருதி, இவளை எப்படியாவது எந்த ஒரு பழியும் இல்லாம வெளிலே அனுப்பணுமேன்னு நினைச்சேன். நீங்களே அவ கல்யாண விஷயத்தைக் காதுல போட்டுட்டீங்க. இனிமேல் கவலை இல்லை.''

''ஒரு மாசம் எப்படியாவது நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். அதுக்குள்ளே நீங்க கல்யாண ஏற்பாடு எல்லாத்தையும் பண்ணிட்டு நீங்களே இவளைக் காலேஜ் படிப்பு போதும்னு நிறுத்திடுங்க. பாவம் உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேன். போனை வச்சுடட்டுமா? தப்பா ஒண்ணும் நினைக்காதீங்க. தாங்க்ஸ்.''

தொலைபேசியின் மறுமுனை இணைப்பு துண்டிக்கப் பட்டும், சங்கரன் வெகுநேரம் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தார்.

கீர்த்தி அவரையே பார்த்துக்கொண்டு நின்றான். உமாவைப் பற்றிய புகார் என்றதுமே அவன் நடுங்கிப் போய்விட்டான்.

''கீர்த்தி...''

''என்ன மாமா?''

''புறப்படுடா. திருச்சிக்குப் போய் இந்தச் சம்பந்தத்தை முடிச்சுட்டு வந்துடலாம்.''

''மாமி கிட்ட சொல்ல வேண்டாமா மாமா? உமா, ஏதாவது ஆட்சேபணை கிளப்பினா...''

''இதப்பாரு, இவங்களை இத்தனை தூரம் தறிகெட்டு ஓட விட்டதே தப்பு. நீ புறப்படு. உமாவோட போட்டோ ஒண்ணு எடுத்துக்கோ. கிளம்பு.''

Vennila

அவர் மளமளவென்று கிளம்பி விட்டார்.

வீட்டுக்குப் போனதும், மீனாட்சியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை அவர். காரிலேறும்போது அவன்தான் கேட்டான்.

"திடீர்னு கிளம்பறீங்களே வெளியூருக்கா?"

"ஆமா. திருச்சி."

"என்ன விஷயம்?"

"வந்து சொல்றேன். நான் ஊர்லேருந்து திரும்பற வரைக்கும் உன் பெண்ணை வீட்டிலேயே இருக்கச் சொல்லு. காலேஜுக்குக் கூடப் போக வேண்டாம். இவ படிச்சுக் கிழிச்சது போதும்."

அவர், கீர்த்தியுடன் விர்ரெனக் கிளம்பிவிட்டார். மீனாட்சி அவர் போவதையே வெறித்தபடி நின்றாள்.

## 6

மின்னல் வேகத்தில் காரியத்தை நடத்தி முடித்தார் சங்கரன். புகைப்படத்தைப் பார்த்த மட்டில் திருச்சி மாப்பிள்ளைக்கு உமாவை மிகவும் பிடித்துப் போய் விட்டது.

சென்ற இடத்திலேயே சம்பந்தம் பேசி, திருமணத் துக்கு முகூர்த்தம் குறித்துக் கொண்டும் விட்டார் சங்கரன்.

கீர்த்தியோ பேச்சே எழுப்பாமல் பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்து விட்டான்.



தனக்குத் தெரியாமல் தன் பெண்ணின் திருமணம் நிச்சயிக்கப்பட்டதை அறிந்தவுடன், மீனாட்சி வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தாள்.

"ஏன், பெத்தவ கல் குண்டாட்டம் நான் ஒருத்தி இல்லே? என்னைக் கேக்காமே என் பொண்ணுக்குக் கல்யாணம் பேசினா...என்ன அர்த்தம்? மாப்பிள்ளை யாரு, அவர் சுபாவம் என்ன, குலம் கோத்திரம் என்ன, சம்பத்திமார் எப்படி, என் குழந்தையைக் கண்கலங்காம வச்சுக்குவாங்களா இதெல்லாம் நீர விசாரிக்காம..."

"இந்தா, கொஞ்சம் விட்டா மேலமேலே போறியே! எல்லாத்தையும் நீர விசாரிச்சுத்தான் நிச்சயம் பண்ணி இருக்கேன். உன் குழந்தை கண் கலங்க மாட்டா. அங்கே இருக்கிறவர்களைத்தான் இவ கதறக் கதற அடிப்பா. வாயை மூடு..."

சங்கரன் அவளுக்கு மேல் கத்தினார்.

"என்ன இருந்தாலும் ஒரு பொம்மனாட்டி போனாத் தான் பொண்ணைக் கொடுக்கப் போற இடம் எப்படி, மாமியார் நாத்தனார் குணம் எப்படி எல்லாம் தெரிஞ்சுக்க முடியும். நிச்சயதார்த்தமே நான் இல்லாம நடந்ததுன்னா பிள்ளையப் பெத்தவ என்னை எப்படி மதிப்பா?

"அங்கே உன்னை அழைச்சிட்டுப் போயிருந்தா, அதுக்கப்புறம் என்னை ஒரு பொருட்டா யாரும் மதிக்க மாட்டாங்க. இங்கே பாரு, இந்தக் கல்யாணம் நான் நினைச்ச மாதிரி நடந்தாகணும். அம்மாவும் பொண்ணும் வாயை மூடிட்டு இருந்தா இருங்கோ. இல்லே முடியாதுன்னா..."

"என்ன செய்வீங்க? எங்களை வீட்டை விட்டுத் துரத்துவீங்க! இத்தனை வயசுக்கு மேலே நாங்க உங்களை

விட்டுப் பிரிஞ்சு வாழ்த்தா, உங்களுக்குத்தான் அது அவமானமே தவிர, எங்களுக்கில்லே. அம்மா, நீ கிளம்பு. நாம போகலாம்.''

மகள் தாயின் கையைப் பிடித்து இழுத்தாள். மீனாட்சி மகளுடன் போக முடியாமல் பிரமித்து நின்றாள்.

''இதோ பாரு உமா, இந்த நிமிஷமே வேணுமானா ஓம் அம்மாவும் பொண்ணும் கிளம்புங்க. ஆனா ஒண்ணு மாத்திரம் நினைவுல வச்சுக்குங்க. இந்தச் சொத்தெல்லாம் நான் சம்பாதிச்சது. எங்க அப்பா சொத்து அவர் தலை முறையோட போயாச்சு. இத்தனையையும் நான் யாருக்கு வேணுமானாலும் எழுதி வைப்பேன். இதோ, இங்கே நிக்கற கீர்த்திக்கு வேணுமானாலும் எழுதி வைப்பேன், உனக்கோ, உங்க அம்மாவுக்கோ ஒரு பைசா தர மாட்டேன். உம், கிளம்புங்க.''

சங்கரனின் வார்த்தைகளை உடல் விறைக்கக் கேட்டுக் கொண்டிருந்த உமா, அவர் பேசி முடித்ததும் ஹோவென அழுதபடி, தனது அறைக்குள் போய்ப் புகுந்து கொண்டாள்.

கணவனின் கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டதையும், இனி எகிறிப் பலன் இல்லையென்பதையும் உணர்ந்து கொண்ட மீனாட்சி அடங்கிப் போனாள்.

கல்யாண ஏற்பாடுகள் எல்லாமே துரித கதியில் நடந்தன. உமாவுக்குத் தேவையான புடைவை, நகை, பாத்திரம் அத்தனையையும் தன்னுடன் கீர்த்தியை மட்டும் அழைத்துக் கொண்டு போய்த் தானே வாங்கினார். மீனாட்சியின் புலம்பலையோ உமாவின் அழுகையையோ எதையுமே லட்சியம் செய்யவில்லை அவர்.



கல்யாணத்துக்கு நாலு நாட்கள் இருக்கும் பொழுதே சங்கரன், மனைவியையும் மகளையும் அழைத்துவைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார். அவர்களது அந்தரங்கப் பிரச்சனைகளில் தலையிடத் தனக்குத் தகுதியில்லை என்பது போல, கீர்த்தி அவ்விடத்தைவிட்டு மெல்ல நகர்ந்தான்.

''எங்கேடா போறே? நீயும் இரு.''

சங்கரன் அவனை இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்ள, உமா கடுப்புடன் விருட்டென எழுந்தாள்.

''இவன் முன்னாலே என் சொந்த விஷயங்களைப் பேச நான் விரும்பலை. இந்தக் குடும்பத்து விவகாரங்களிலே கலந்துக்கற யோக்யதையும் இவனுக்கு இல்லை.''

''உமா!''

''பின்னே என்னப்பா? உங்களுக்கு வேணுமானா அவன் ஒசந்தியா இருக்கலாம். நானும் இவனை என் தலை மேலே தூக்கி வச்சிட்டுக் கொண்டாடணும்னு அவசியம் இல்லே.''

''ஷ்... உமா, அவனுக்கு அந்த உரிமை உண்டு. அவன் என்னோட ரெண்டாவது மாப்பிள்ளையாகப் போறவன்.''

''என்னது?''

மீனாட்சி அலையக் குலைய எழுந்தாள். முகத்தில் ஜிவுஜிவெனச் சிவப்புப் படர்ந்தது.

''ஐ மீன், என் ரெண்டாவது மகளோட கணவன் இதோ இந்தக் கீர்த்திதான்.''



Vennila

''ரெண்டாவது மகளா? எனக்குத் தெரியாம...ஐயோ, இதை நான் எங்கே போய்ச் சொல்லி அழுவேன்.''

''அழறதுக்காக எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே உட்கார்ந்து அழலாம்.''

''மீனாட்சி, நான் சொல்றதைக் கேட்டுட்டு, அப்புறம் நிம்மதியா அழ ஆரம்பி. உன்னைக் கல்யாணம் பண்ணிட்ட காலத்துல, நான் வேற ஒருத்தியைக் கண்ணாலப் பார்த்ததுகூட இல்லே. என் சொத்து, சுகம், இன்பம், துன்பம்—ஏன், என்னையே உன்கிட்ட ஒப்படைச்சுட்டு, கவலையே இல்லாம ஆனந்தமா இருக்கணும்னு ஆசைப்பட்டேன். முடியல்லே.''

''நீ என் அந்தஸ்தை விரும்பின அளவுக்கு என் நெஞ்சைத் தொட்டுப் பேச விரும்பலை. என் சுகங்களை மட்டுமே பகிர்ந்துக்க விரும்பின நீ, நான் துக்கப் பட்டப்போ, கவலைப்பட்டப்போ மாத்திரம் தூரப் போய், உனக்குச் சம்பந்தம் இல்லாத விஷயம் மாதிரி 'நடந்துட்டே.''

''என் மனசுக்கு ஆறுதலைத் தேடித்தான் நான் அவ வீட்டுக்குப் போனேன். அவளோட ஒன்றிப் போனேன். அப்பா கிட்ட அடி வாங்கின குழந்தை, ஆதரவு தேடி அம்மா கிட்ட ஓடறதில்லையா, அது மாதிரி.

''யார் அவ?''

''அதுதான் கல்யாணத்துல வரப் போறாளே, அப்போ, அறிமுகப்படுத்தி வைக்கறேன். உமா கல்யாணம் ஆன பதினைஞ்சாவது நாள் என்ரெண்டாவது பொண்ணுக்கும் கீர்த்திக்கும் கல்யாணம். நானே இருந்து தாரை வார்த்துத் தரப் போறேன்.''

''ஐயோ!''



மீனாட்சி தன் நெஞ்சை ஒரு கையால் பிடித்துக் கொண்டாள். சங்கரன், அவளைத் திரும்பியே பார்க்காமல் உமாவைப் பார்த்துச் சொன்னார்:

''இந்தச் செய்தியை இத்தனை நாள் கழிச்சு இப்ப ஏன் சொல்றேன்னா, அதுவும் உன்னைப் பக்கத்துல வச்சிட்டு ஏன் சொல்றேன்னா—இதெல்லாம் உனக்கு ஒரு பாடம் உமா.

''பல ஆம்பிளைகள் மேலுக்குப் பார்க்க முரடன் மாதிரித் தோணினாலும், உள்ளூரக் குழந்தை மனசாத்தான் இருப்பாங்க. ஒரு ஆம்பிளை, தனக்கு வியாபாரத்தில நஷ்டம் வந்தா தாங்கிக்குவான். தொழில்லே நஷ்டம் வந்தா தாங்கிக்குவான். ஆனா, பெண்டாட்டி அனுசரணையா இல்லாமப் போய், வாழ்க்கையே நஷ்டமடைஞ்சா தாங்கிக்க மாட்டான்.''

''தன் கூடப் பிறந்த நல்ல குணத்தையெல்லாம் காத்துல பறக்க விட்டுட்டு எப்படி வேணுமானாலும் எது மூலமாக வேணுமானாலும் தனக்கு அமைதியைத் தேடிக்கத் துணிஞ்சிடுவான். அவனுக்குப் பலத்தைத் தர்றதும், பலவீனத்தைத் தர்றதும் பெண்கள் தான். உங்க அம்மா செஞ்ச தப்பை நீயும் செய்யாதே.''

''காலேஜை விட்டுப் பிரின்ஸ்பால் உன்னை வெளியில துரத்தினா. அதை ஒரே மடக்கா முழுங்கிட்டு வளைய வர்ற நான், புக்ககத்தை விட்டு உன் புருஷன் வெளியில் துரத்தும்படியான நிலைமை ஏற்பட்டா, நிச்சயமாத் தாங்க மாட்டேன். அந்தச் சக்தி எனக்கில்லே.''

இவரது வார்த்தைகள் ஊட்டிய அதிர்ச்சியினாலோ, அல்லது உண்மையிலேயே அவர்களது மனசாட்சி உறுத்தியதாலோ அம்மாவும் பெண்ணும் அதற்கு மேல் பேசவே இல்லை.

Vennila

கீர்த்தி ஓரிடத்தில் நிற்காமல் ஓடி ஓடி வேலை செய்தான். திருமணத்துக்கு முதல் தினம் வந்திருந்த தன் தாயையும், சகோதரர்களையும் நிறுத்தி வைத்துப் பேசக் கூட அவனுக்கு நேரமில்லை.

ஒரு புன்சிரிப்பு. சின்னத் தலையாட்டல். அவ்வளவு தான்.

அவன் தாயும் நிலைமையைப் புரிந்து கொண்டு, பக்குவமாய் ஒதுங்கி, வந்திருந்த ஜன சமுத்திரத்தில் தங்களைக் கலந்து கொண்டாள். எப்பொழுதாவது அவன் பேச முன் வந்தாலும், அவன் அதிகம் அவனைப் பேச விடாமல் துரத்தினான்.

''அம்மா.... கோமு....எல்லாரும் டிபன் காப்பி சாப்பிட்டீங்களா?''

''எங்களைப் பத்தி என்னடா கவலை? நீ போய், சம்பந்தி வீட்டாரை உபசாரம் பண்ணு போ....''

மகன் அசட்டுச் சிரிப்புடன், தயங்கித் தயங்கி ஓடுவதைத் தலை கொள்ளாத பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

மீனாட்சியோ, உமாவோ இவர்களைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. இயல்பிலேயே உள்ளச் செருக்குடன், தற்சமய சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் வேறு சேர்ந்து கொண்டதால், சிரிப்பென்பதையே மறந்தாற் போல வளைய வந்தார்கள் இருவரும்.

மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் பிரமாதமாகத்தான் நடந்தது. பூரணி, தன் தாய் லட்சுமியுடன் வந்திருந்தாள். சங்கரன், எல்லாரையும் வரவேற்றது போலவே அவர்களையும் 'வாங்கோ' வென வாய்நிறைய அழைத்தாரே தவிர, தனிப்பட்ட முறையில் கவனிக்கவில்லை.



கீர்த்திதான் முகமெல்லாம் சிரிப்பாக அவர்களை வரவேற்றுத் தன் தாய்க்கும், தங்கைக்கும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தான்.

''அம்மா, இவங்க....இவங்க ரெண்டு பேரும்....''

''அவன் மென்று விழுங்கிய போது, லட்சுமிதான் புன்னகையுடன் சமாளித்தாள். நாங்க ரெண்டு பேரும் அம்மா —பொண். டாக்டருக்கு வேண்டியவங்க.''

கீர்த்தியின் தாய் பூரணியின் கைகளை வாஞ்சையுடன் பிடித்துக் கொண்டாள். என்ன தோன்றியதோ, சட்டெனத் தன் மகனின் முகத்தையும் நிமிர்ந்து பார்த்தாள். அதில் தெரிந்த கனிவு....

அவள் புன்னகை மேலும் விகசிக்க, பூரணியை ஒரு கையால் அணைத்தபடி, லட்சுமியிடம் பேச்சுக் கொடுத்தாள் ''உங்களவர் வரவில்லையா?''

''உம்....வந்திருக்கார். அவர் இந்தக் கல்யாணத்துல நிறையப் பொறுப்பைச் சுமந்திருக்கிறதால ஒரு இடத்துல நிக்காம அலைஞ்சிட்டு இருப்பார். உமா கழுத்தில் தாலி ஏறினதுக்கு அப்புறம்தான் அவர் நிம்மதியா மூச்சு விடுவார்.''

''அதுதான் நல்ல சினேகிதத்துக்கு அடையாளம்.''

கீர்த்தியின் அம்மா, பூரணியின் மீது நிலைத்திருந்த தனது பார்வையை எடுக்காமலேயே சொல்ல, கீர்த்தி, அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாத அவஸ்தையில் மெல்ல நழுவினான்.

மீனா, கல்யாண மும்முரத்தில் இருந்தாலும், இன்னமும் கணவர் சொன்ன செய்திகளின் அதிர்ச்சி நீங்காததாலும், வெறும் ரப்பர் பொம்மையாய்ச் சுற்றிக் கொண்

Vennila

டிருந்தாள். அதனால் அவள் லட்சுமியையும், பூரணியையும் கீர்த்தியின் தாய் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததையும் கவனிக்கவே இல்லை.

அன்றிரவு பூரணியும் லட்சுமியும் சாப்பாடு முடிந்து வீட்டுக்குக் கிளம்பியவர்கள் மறுநாள் விடிகாலை முகூர்த்தமாதலால் பொழுது ஒரு பக்கம் புலரும் முன்பே வந்து விட்டார்கள்.

வந்தவுடன் கல்யாணக் கூடத்தில் எதிர்ப்பட்டது கீர்த்தியின் தாய்தான்.

லட்சுமி வந்த வேகத்தில், அந்த அம்மாளின் முகத்தில் படர்ந்திருந்த கலவரத்தைக் கவனிக்கவில்லைதான்.

''நல்லவேளை, இன்னும் காசி யாத்திரை கிளம்பலையே?''

''இன்னும் இல்லை. மாப்பிள்ளை இருக்கிற இருப்பைப் பார்த்தா, காசி யாத்திரைக்குக் கிளம்புவார் போலத் தோணலை. நேரே, திருச்சிக்கே மூட்டை முடிச்சைக் கட்டிட்டுக் கிளம்பிடுவார் போல இருக்கு!''

திக்கென்றாகி விட்டது லட்சுமிக்கு. விழிகளில் அச்சம் படர, அந்த அம்மாளையே வெறித்துப் பார்த்தாள். பூரணியோ, ஒன்றும் புரியாதவளாய் அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க?''

லட்சுமியின் குரல் கம்மியே போய் விட்டது. உடம்பு காற்றில் ஆடும் கொடி போல, முன்னும் பின்னுமாய் லேசாய் ஆட, தன் தாய் கீழே விழுந்து விடாதவாறு பூரணி அவளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.



''அது என்னமோ, உள்ளே நடக்கற சண்டை என்ன எதுக்குன்னு எனக்கு ஒண்ணுமே புரியல்லேடிம்மா. ராத்திரி ரெண்டு மணியிருக்கும். மாப்பிள்ளையைத் தேடிட்டு யாரோ ஒருத்தன் வந்தான், கீர்த்தி அவனை ஏகமாக உபசாரம் பண்ணி, மாப்பிள்ளை தங்கியிருந்த இடத்துக்குக் கொண்டு போய் விட்டுட்டுச் சமையல் கட்டுல எல்லாம் வேலைய ஆரம்பிச்சுட்டாங்களான்னு பார்க்கப் போனான்.''

''இவன் உள்ளே போய் அஞ்சு நிமிஷம்கூட ஆகியிருக்காது. வந்தவன் விர்ருனு என்னைத் தாண்டி, வாசலுக்குப் போயிட்டான். அதுக்கு அப்புறம், கையில் ஒரு லெட்டரோட மாப்பிள்ளை ?திடுதிடுன்னு இங்கே வந்துட்டார்.''

''கீர்த்தியைக் கூப்பிட்டு, ''நான் உடனே டாக்டர் சங்கரனைப் பார்க்கணும்''னார்.''

''இவன், அலறிப் புடைச்சிட்டு ஓடிப் போய் அவரை அழைச்சிட்டு வந்தான். அதிலேருந்து இன்னமும் உள்ளே தகராறு நடந்துட்டிருக்கு. ஆச்சு, இப்பவே மணி அஞ்சாகப் போகுது.''

அவன் சொல்லி வாய் மூடவில்லை, மாப்பிள்ளையும், அவரைச் சேர்ந்தவர்களும், எந்த ஒரு சத்தமும் இன்றி, மௌனமாய் அவரவர்களது பெட்டி படுக்கைகளுடன் வெளியே....

பித்துப் பிடித்தவர் போல அவர்களின் காலைப் பிடித்துக் கெஞ்சாத குறையாக, சங்கரன், அவர்களுடனேயே வாசல் வரை ஓட....

மீனாட்சி மட்டும் நட்டு வைத்த கல்லாய்ப் பாதி வழியிலேயே நிற்க, லட்சுமி பூரணியின் பிடியிலிருந்து, தன் கைகளை 'வெடுக்'கெனப் பிடுங்கிக் கொண்டு சங்கரனுடன் பின்னாலேயே ஓடினாள்.

Vennila

அவர் துக்கம் தாளாமல் தரையில் விழுந்து புரண்ட போது பாய்ந்து வந்து அவரைப் பிடித்துக் கொண்டதும் லட்சுமிதான். கீர்த்தி, சங்கரனைத் தன் மார்பின் மீது சாத்திக் கொள்ள....

சமையற்காரரிலிருந்து மேளக்காரர் வரையில் அத்தனை பேரும் இவர்களைச் சுற்றி வட்டம் போட....

''இதோ பாருங்க. என்ன நடந்தது? ஐயோ, இப்படி தலையில அடிச்சிட்டா எனக்குப் பயமாயிருக்கே?''

லட்சுமியின் குரல் அழுகையில் சிதற...

''மாமா.... மாமா....இதுக்காக, நீங்க உங்க உடம்பை அலட்டிக்காதீங்க. ப்ளீஸ், மாமா, காம் டௌன்....''

கீர்த்தி, துயரத்தில் முகம் சிவக்கக் கூற—

''எப்படி, எப்படிடா இத்தனை பெரிய அவமானத்தைச் சுமந்துட்டு, அலட்டிக்காம இருக்க முடியும்? ஆச்சு, முகூர்த்தத்துக்காக எல்லாரும் வர ஆரம்பிச்சுட்டாங்களே! கல்யாணம் நின்னு போச்சுன்னு, நான் எந்த மூஞ்சியை வச்சிட்டு சொல்லுவேன்? ஏன்னு கேட்பாங்களே? நான் என்ன பதிலைச் சொல்லுவேன்?''

''இந்த முகூர்த்தம் போனாப் போகுது விடுங்க மாமா. அடுத்த முகூர்த்தத்துக்குள்ளே வேற நல்ல மாப்பிள்ளையாத் தேடிடலாம்.''

''எந்த மாப்பிள்ளைடா இனிமே இவ கழுத்தில் தாலி கட்ட வருவான்? எவன் வருவான்?''

''உஷ். நீங்களே அப்படியெல்லாம் சொல்லக் கூடாது.''

''வேற எப்படிடா சொல்றது? பாவி... என் கௌரவத்தையே நாசமாக்கறதுக்காகப் பிறந்த பிசாசு. அந்த மாப்



பிள்ளையைக் கோவில்லே வச்சு, சுத்தி வந்து நமஸ்காரம் பண்ணனும்டா.''

''இந்த லெட்டரை நிதானமாப் படிச்சுப் பார்க்கனும் நீங்க. இப்ப கொடுத்தா உங்க பிரஷர் ஏறிடும். நான் போற வழியில, உங்க அட்ரஸுக்குப் போஸ்ட் பண்ணிடறேன். உங்க பெண் கழுத்திலே தாலி கட்ட முடியாத நிலைமையில நான் இருக்கேன்''னு சொல்லிட்டுக் கிளம்பிட்டானே!''

பெத்தவங்களும் மத்தவங்களும் என்ன நடந்துதுன்னு கேட்கக் கேட்க, பதிலே சொல்லாம...''அடேய் கீர்த்தி, இதைவிட நல்ல மாப்பிள்ளை கிடைப்பானாடா எனக்கு?''

அவர் மூச்சிறைக்க விழி பிதுங்கச் சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு, உமாவின் பக்கம் காட்டாற்று வெள்ளமாய்ப் பாய, மீனாட்சி அலறிக் கொண்டு மூர்ச்சித்து விட்டாள்.

''உன்னால என் மானம் போச்சு...எங்கேயாவது போய்ச் செத்துத்—''

அவரை, அதற்கு மேலே பேசவிடாமல் வாயைப் பொத்தி, அவரது பிடியிலிருந்து உமாவை விடுவித்த லட்சுமி, அவரைத் தள்ள மாட்டாத குறையாகத் தள்ளிக் கொண்டு ஒதுக்குப்புறமாய் விரைந்தாள்.

''விடு...விடு என்னை'' அவர் திமிறினார்.

''கொஞ்ச நேரம் சும்மா இருக்க மாட்டீங்களா? பூரணி, உள்ளே போய் ஜில்லுனு ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டா....''

லட்சுமி, மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற கூச்சமின்றி, சங்கரனது தலையைத் தனது பக்கம் இழுத்து மடிமேல் சாய்த்துக் கொண்டாள்.

Vennila

''இதோ பாருங்க. இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போகலை. இதே முகூர்த்தத்திலே உமா கல்யாணம் நடக்கும்.''

இப்படிச் சொன்னவள், சுற்றி நின்ற கும்பலைப் பார்த்து, கெஞ்சுகிற தோரணையில் சொன்னாள் :

''இத பாருங்கோ...எல்லாரும் போய் அவங்க அவங்க காரியத்தைக் கவனியுங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில், குறிச்ச முகூர்த்தத்துல கல்யாணம் நடக்கும். காலம்பற காப்பி டிபன் எல்லாம் போடணுமே. ரெடியான்னு பாருங்க.''

அவனது வார்த்தைகளில் இருந்த பணிவும் குழைவும் மற்றவர்களை ஜரூர் படுத்தியது.

தலைமைப் பரிசாரகர் இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்றவராய்த் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சமையற்கட்டை நோக்கிக் கூவினார் :

''அடேய்...இட்லிப் பானையை அடுப்பிலே ஏத்துங்க. கேசரிக்கு ரவை சலிச்சு வச்சாச்சா? டேய் சுப்புணி, மசமசன்னு நிக்காதே. வந்து தேங்காயைத் துருவு. சட்னி அரை...''

கீர்த்தியும், ஸ்டோர் ரூமிலிருந்து சாமான் எடுத்துத் தருவதற்காகச் சமையற்காரர் பின்னாலேயே வேகமாகக் கிளம்ப, முதல் முறையாக லட்சுமி, அவனது பெயரைச் சொல்லி அழைத்தாள்.

''கீர்த்தி, சாவியைப் பூரணி கிட்ட ஒப்படைச்சுட்டு, மங்கள ஸ்நானம் பண்ணக் கிளம்புங்க.''

''என்னது?''

அவன் அதிர்ந்து நின்றுவிட்டான். ஏன், பூரணி கூடத்தான்.



''அம்மாவுக்குப் பைத்தியமா?'' லட்சுமி, சிறிதும் தாமதிக்காமல், கீர்த்தியின் தாயின் காலடியில் விழுந்து வணங்கினாள்.

''அம்மா...இவர் கண் கலங்கினா என்னாலத் தாங்க முடியாது. எத்தனையோ பேருடைய கண்ணீரை, இவர் கை துடைச்சிருக்கு. இன்னிக்குத் தன் கண்ணீரைத் துடைக்க ஒரு ஆதரவான கை இல்லாம இருக்கார். உங்க பிள்ளைய சட்டுனு ஸ்நானம் பண்ணிட்டு, காசியாத் திரைக்குக் கிளம்பச் சொல்லுங்கோ...''

''லட்சுமீ...அவன்...அவன்...என் பூரணிக்காக...''

இதற்கு மேல் பேசவே முடியாமல், சங்கரன் விக்கி அழ, லட்சுமி, சிறு குழந்தையைத் தேற்றுவது போல அவரைத் தேற்றத் தொடங்கினாள்.

''முதல்லே, உமாவோட கல்யாணத்தை முடியுங்க. நீங்க இப்படி, இறக்கை அறுபட்ட ஜடாயு மாதிரி தரையில் கிடக்கறதைப் பார்க்கச் சகிக்கலே. எழுந்திருங்க. முகூர்த்தம் முடியறதுக்குள்ள, கல்யாணத்தை முடிக்கப் பாருங்க...''

அவள் சொல்லச் சொல்ல, சங்கரன் கீர்த்தியையும் பூரணியையும் வைத்த விழி வாங்காமல் பார்த்தார்.

''அப்பா கீர்த்தி, உன்கிட்ட என்ன பேசறது, எப்படி யாசிக்கறதுங்கறது கூட எனக்குத் தெரியல்லேப்பா. இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நடத்திக் கொடுக்கப் பெரிய மனசு பண்ணு.''

''அம்மா பூரணி, நீ என்னை ஏழேழு ஜென்மத்துக்கும் மன்னிக்கமாட்டே. அது எனக்கு நல்லாவே தெரியும்.''

அவர் குலுங்கிக் குலுங்கி அழ, பூரணி வெடிக்கும் அழுகையை உதட்டுக்குள் அடக்க முடியாமல் திணற,

Vennila

லட்சுமி, மகளின் கையை அழுத்திப் பிடித்து, அப்பால் நகர்த்திக் கொண்டு போனாள்.

''பூரணி...''

பூரணி விக்கி அழுதாள்.

''இந்த நிமிஷத்துல நான் உன்னை என் பொண்ணா நினைக்கல்லே. என்னைப் பெத்தத் தாயா நினைச்சு கையெடுத்து வணங்கறேன். அவர் இருக்கற நிலைமையைப் பார்த்தா, இந்த அதிர்ச்சி தாளாமலேயே ஏதாவது ஆயிடுமோன்னு பயமாயிருக்கு. இவர் இல்லாம என்னால ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதுடீ... உன் துக்கத்தையெல்லாம் தயவு செஞ்சு, பெத்த தாய்க்காகத் தொண்டைக்குள்ளேயே புதைச்சுடு.''

பூரணி பதிலே சொல்லவில்லை. அழக்கூடத் திராணியற்றவளாய்ச் சுவரோடு சாய்ந்து அமர்ந்து விட்டாள்.

கீர்த்தி இவளிருந்த பக்கம் தலையை நிமிர்த்திப் பார்க்கக் கூட முடியாதவனாய் மளமளவெனக் காரியத்தில் இறங்கினான்.

கீர்த்தியைப் பெற்றவள், திக்பிரமை பிடித்தவள் போல, மகனின் திடீர் கல்யாணக் கோலத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இத்தனை அமர்க்களத்துக்கும் காரணமான உமா, முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாவிட்டாலும், உள்ளுக்குள் எரிமலையாய்ப் பொங்கிக் கொண்டிருந்தாள்.

அந்தக் கணமே கழுத்தில் போட்டிருந்த மாலையைப் பிய்த்தெறிந்து விட்டு ஓட வேண்டும் போலத் துடியாய்த் துடித்தாள். என்ன செய்வது? எதுவும் செய்ய முடியாத



படி காலையில் நடந்த சம்பவம், அவளைச் செயலிழக்கச் செய்து விட்டதே!

ஷியாம் இப்படிச் செய்வான் என்று அவள் எதிர் பார்க்கவே இல்லை.

அவன்தான் காலையில் அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்து மாப்பிள்ளைப் பையனிடம் கொடுத்தது. அவனால்தான் தனக்கு இத்தகைய அவமானம் நேரிட்டது. அவனால்தான் இன்று தனக்குப் பரம வைரியான கீர்த்தியின் கழுத்தில் தான் மாலை போட நேர்ந்தது.

அவள், நெஞ்சுக்குள்ளேயே பொருமித் தீர்த்தாள். கீர்த்தியை நிமிர்ந்து பார்க்கவும் பிடிக்காமல், தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள்.

'அது என்ன, ஒருத்தன் என்னை வேண்டாம்னு ஒதுக்கிட்டுப் போயிட்டா, தெருவிலே போகிற சொறி நாயைக் கூப்பிட்டு, மணையில் என் பக்கத்தில் உட்கார வச்சடறதா? எனக்குன்னு ஒரு அபிப்ராயம் கிடையாதா? என்னை இத்தனை அலட்சியம் பண்ற இந்த அப்பாவை அழ அழ வைக்கலே, என் பேர் உமா இல்லே.'

உமா, தனக்குள் கறுவிக் கொண்டாள்.

மீனாட்சி மட்டும், தன் எரிக்கும் பார்வையால் லட்சுமியையும் பூரணியையும் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

''ஓ... இவங்கதானா?''

கீர்த்தியைத் தனது மாப்பிள்ளை ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க விரும்பாத மீனாட்சி, ஒரு விஷயத்தில் மட்டும் பூரணத் திருப்தியுற்றாள்.

Vennila

''கீர்த்தியைத்தான் இங்கே மணையில உட்கார்த்தி வச்சிட்டீங்க. இனிமே உங்க ரெண்டாவது பொண்ணுக்கு எங்கே போய் மாப்பிள்ளை தேடப் போறீங்க?''

இந்த நினைப்பே அவளுக்குள் சின்னத் திருப்தியைத் தோற்றுவித்தது.

எப்படியோ, அவர்கள் கைக்குப் போய்ச் சேர வேண்டிய அவர்களின் பொக்கிஷத்தைத் தட்டிப் பறித்து விட்டோம் என்கிற நிம்மதி ஒரு பக்கம் இருந்தாலும் அவர்களுக்குப் பொக்கிஷமாய் இருப்பது, மீனாட்சியைப் பொறுத்த அளவில் வெறும் குப்பைதான்!

இருந்தால் என்ன? நான் அவளைப் பழி வாங்க வேண்டுமென்று நினைக்கவில்லை. கடவுளாகப் பார்த்து இந்தத் தண்டனையை லட்சுமிக்கு அளித்திருக்கிறார்.

'அவளுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்....'

மீனாட்சி மிருகத்தனமாய்ச் சபித்தாள்.

## 7

திருமணம் முடிந்த இரண்டாம் நாள், திருச்சி டாக்டர் சொல்லி விட்டுப் போன மாதிரி ஷியாமின் கடிதத்தைச் சங்கரனின் விலாசத்துக்குத் தபாலில் அனுப்பி விட்டான்.

அதை அந்தப் பிள்ளை அனுப்பாமலே இருந்திருக்கலாம். ஆனால், அவன் கண்டானா, தனக்கும் உமாவுக்கும் குறித்த அதே முகூர்த்தத்திலேயே கீர்த்திக்கும் உமாவுக்கும் திருமணம் நடந்து முடிந்து விட்டதென்று? தெரிந்திருந்தால் இக் கடிதத்தை அவன் அனுப்பியே இருந்திருக்க மாட்டானோ என்னவோ?



ஷியாமின் கடிதம், குற்றுயிராய் நடமாடிக் கொண்டிருந்த சங்கரனைப் படுத்த படுக்கையாக்கி விட்டது.

அவர், அந்தக் கடிதத்தைக் கீர்த்தியிடமிருந்து மறைக்க விரும்பவில்லை. அது அவனுக்குச் செய்யும் மகத்தான துரோகம் எனக் கருதினார்.

அவனை அழைத்து அக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, மௌனமாய் விட்டத்தை வெறித்தார்.

அவனும் கடிதத்தை ஒரு முறை படித்தானே தவிர, வேறெதுவும் சொல்லவில்லை. கடிதத்தை நாலாக மடித்து, சங்கரனிடமே கொடுத்தான்.

''கீர்த்தி... ஆட்டுக் குட்டிக்கு நாற்பது நாளும் வயிறு முட்டத் தீனி போட்டு, தழையூட்டின கையாலேயே அரிவாளாலே வெட்டுவான் கசாப்புக்காரன். அதைப் போல நான் உன்னை வளர்த்து, ஆளாக்கி, என் கையாலேயே உன் வாழ்க்கையைக் குழிதோண்டிப் புதைச்சிட்டண்டா.''

அவர், அதற்கு மேல் எதுவுமே பேசவில்லை. சாகிற வரையில் மௌன விரதம் அனுஷ்டித்துவிட்டு—இல்லை இல்லை, உயிர் பிரிவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன், கீர்த்தியின் கைகளைத் தனது நடுங்கும் விரல்களால் அழுந்தப் பற்றிக் கொண்டார்.

''கீர்த்தி... பூரணி....''

''பூரணி... என்ன மாமா, அவங்களை இங்கே வரவழைக்கட்டுமா?''

''ஊம்கும்... பூரணி... பார்த்துக்கோ, நீ பார்த்துக்....''

அவ்வளவுதான். மூச்சு நின்றுவிட்டது. எல்லாமே ஸ்தம்பித்து விட்டாற் போலத் தோன்றியது கீர்த்திக்கு.

Vennila

சங்கரனின் இறுதி மூச்சுக் காலத்தில்தான் மீனாட்சிக்கு எத்தனை கல் நெஞ்சு என்பதைப் புரிந்து கொண்டான் அவன். மீனாட்சியையும் தூக்கிச் சாப்பிடும் விதத்தில் நடந்து கொண்டாள் உமா.

சங்கரனின் சடலத்தருகே கூட லட்சுமியை நெருங்க விடவில்லையே அவர்கள்! கூட்டத்தோடு கூட்டமாய்த் தாயும் மகளும் அழுது கொண்டு நின்ற கோலம். இன்று நினைத்தாலும் நெஞ்சைப் பிசைவது போலத் துடிப்பான் கீர்த்தி.

சங்கரன் கண்ணை மூடியதற்குப் பிறகுதான் மீனாட்சிக்குப் பிறந்தகத்து மனிதர்கள் எனச் சொல்லிக் கொள்ள எத்தனை பேர் இருக்கிறார்கள் என்கிற விஷயமே கீர்த்திக்குத் தெரியும்.

அத்தை என்றும் சித்தப்பா என்றும் எத்தனை ஜனங்கள்! இத்தனை பேரையும் இது நாள் வரையில் எப்படி நெருங்க விடாமல் தடுத்தார் அந்த மனிதர்!

எல்லாம் கொஞ்ச நாள்தான்.

சங்கரன் சொன்னது போலச் செய்துவிட்டார். சொத்துக்களை அனுபவிக்கும் உரிமை மட்டுமே மீனாட்சிக்கும், உமாவுக்கும் உண்டே தவிர, அவைகளை விற்கவோ, மற்றவர்களுக்குக் கொடுக்கவோ அவர்களுக்கு உரிமையில்லை.

இந்த உயில் எல்லாரையுமே ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

பூரணி, லட்சுமியின் பெயரில் எற்கெனவே வேண்டிய சொத்தை எழுதி வைத்திருந்தார் சங்கரன். இருந்தாலும் ஒருவர் மீது கசப்பு அதிகரிக்கும் சமயத்தில், வாயில் வந்த



தைப் பேசுவது இயல்புதானே! அதுவும் மீனாட்சிக்குச் சொல்லியா தர வேண்டும்?

''எங்க வாழ்க்கையையே குட்டிச் சுவராக்கிட்டுப் போயிட்டார்டி. எங்கிருந்தோ வந்தவனுக்கு எல்லா பாத்தியதையையும் எழுதி வச்சிட்டு... என்னையும் என் பெண்ணையும் இவன் கையை எதிர்பார்த்து பிச்சைக்கார வாழ்வு வாழ வச்சுட்டு. அந்தத்... யாளுக்கும், அவ பொண்ணுக்கும் எழுதி வச்ச அளவுக்குக் கூட எங்களுக்கு இல்லேடி.

கீர்த்திக்குப் பிள்ளை பிறந்தா, அவனுக்கு இந்தச் சொத்து முழுக்கப் போய்ச் சேரணுமாம். அதுவும் எப்படி? இந்த ராட்சசனுக்குப் பிறகு! எப்படி இருக்கு கதை?''

''அடியம்மா. இப்படி அவர் மயங்க, என்ன சொக்குப் பொடி போட்டானோ தெரியல்லையே? அந்தத் திருவாரூர்க்காரியும்தான் என்ன மருந்து வச்சானோ தெரியல்லியேடி.''

''பிள்ளை பிறந்தா அதுக்குச் சேரணும்னு எழுதி வச்சிட்டுப் போயிட்டாரே! பிள்ளை எப்படிப் பிறக்கும்? இன்னும்தான் சாந்தி கல்யாணமே ஆகல்லியே!''

''அதுலேயும் இந்த மனுஷனுக்கு எத்தனைபொல்லாத்தனம் பாரு. 'கீர்த்தியோட பிள்ளைக்குன்னு எழுதி வச்சிருக்காரே தவிர.... எவ மூலமாப் பொறந்ததுன்னு எழுதல்லேடி. அந்த மினுக்கி ஒரு பெண்ணைப் பெத்து வச்சிருக்காளே. அவ முந்திக்கிட்டா, இவனுக்குச் சட்டி பானை கூட'மிஞ்சாதேடி....''

கீர்த்தி, இவர்களின் வாய்க்குப் பயந்து வீட்டிலேயே இருக்கமாட்டான். அம்மாவையும் தங்கை தம்பியையும்



Vennila

அழைத்து வந்து, தனி வீடு பார்த்து வைத்துவிட்டான். ஒரு நாளின் பெரும்பொழுது சங்கரன் விட்டுப் போன நர்ஸிங் ஹோமில்; மீதி நேரத்தில் தாய், கோமு இவர்களுடன்.

சங்கரனின் இறுதிக் காரியங்கள் முடிந்ததும், கீர்த்தி லட்சுமியின் வீட்டுக்குத்தான் முதன் முதலில் போனான்.

லட்சுமி, ஒரு மூலையில் சுருண்டு கிடந்தாள். பூரணி சமையலறையில் கஞ்சி வைத்துக் கொண்டிருந்தாள்.

''பூரணி....''

அவனது வார்த்தைகள் கூடக்காதில் விழாத நிலையில் கிடந்தாள் லட்சுமி. பூரணி மட்டும் இதயத்தை யாரோ சுண்டியிழுத்தது போலத் திரும்பிப் பார்த்தாள்.

சமையலறையின் நிலைக் கதவைப் பிடித்தபடி நின்றவனைக் கண்டதும், இதுநாள்வரையில் அடக்கி வைக்கப் பட்டிருந்த துக்கம் பீறிட்டுக் கிளம்ப, அங்கேயே சரிந்து உட்கார்ந்து 'ஒ'வென அழுதாள் அவள்.

என்ன சொல்லுவான் அவன். அருகில் போய், கண்களைத் துடைக்க வேண்டும் போல கைகள் பரபரத்தாலும் முடியவில்லையே!

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா பூரணி?''

மௌனம்தான் பதில்.

''எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்ப மாட்டியா? மாமா போயிட்டா, அதோட எல்லாம் போயிட்டதா?'' நினைச்சிட்டியா



''நீங்க ஏன் இங்கே வந்தீங்க?''

''என்னது?''

''நீங்க எதுக்காக இங்கே வந்தீங்கன்னு கேட்கிறேன்.''

''ஏன், வரக்கூடாதா பூரணி?''

''இல்லை.... ஏற்கெனவே அங்கே உமாவுக்கும் அவளைச் சேர்ந்தவங்களுக்கும் உங்களைக் கண்டா பிடிக்கல்லே. இன்னும், இங்கே வர்றது வேற தெரிஞ்சா....''

''ஒண்ணும் செய்ய முடியாது. என்னு கேட்டா, இதுக்கு மேல ஒருத்தன் கிட்ட வெறுப்பைக் கொட்ட முடியாது. அவங்களுக்கு இருக்கிற கோபத்திலே, என் கழுத்தை நெரிச்சுக் கொலை கூடச் செய்யலாம். ஆனா, அதனாலே அவங்களுக்கு நஷ்டம்தானே தவிர லாபம் எதுவுமில்லையே.''

அவன் இதைச் சொல்லிக் கொண்டே லட்சுமிக்கு சிகிச்சை செய்ய, அதன் பின் லட்சுமிக்கு வைத்தியம் செய்வதற்காகவே தினசரி அவன் அங்கு வர, அடிபட்ட இதயங்கள் மருந்துதேடி அலையும் வேளையில், இதயமில்லாதவர்கள் மேலும் மேலும் அடித்து ரணத்தை ரத்தக் களரியாக்கிவிட்டார்கள்.

சற்றுக் குணமாகி எழுந்த லட்சுமி, அன்று கீர்த்தியிடம் வாய் விட்டு அழுதேவிட்டாள்.

''கொஞ்ச நாளைக்கு இங்கே வராதீங்க.''

சவுக்கால் இழுத்தாற் போல் துள்ளி நிமிர்ந்தான் அவன். ''ஏன்.... ஏம்மா?''

Vennila

''என் பெண்—அவளுக்கு உங்ககூட வாழற பாக்கியம் கிடைக்கலைன்னாலும் வேற சுமாரான இடமாப்பார்த்து, கல்யாணத்தைப் பண்ணி வச்சுடலாமுன்னு இருக்கேன். இது ரொம்பக் கஷ்டமான காரியம்தான்.

''அவர் இருந்தார். என்னை ஒரு பெண்ணா மதிச்சு, எனக்குக் கௌரவமான வாழ்க்கையைத் தந்தார். ஆனா, இவ கதி என்னன்னு சொல்லுங்க.

''என் வீட்டிலே ஒரு கன்னிகழியாதபெண் இருக்காங்கறப்பவே... என் வீட்டு வாசல் கதவைக் கண்டவனும் கண்ட நேரத்திலேயும் தட்டுவான்கறதையும், நான் எதிர் பார்த்துத்தான் ஆகணும். அந்த மாதிரி யாராவது கேட்டுட்டு வந்தா, இந்தப் பிராணன், என் உடம்பிலே நிற்காது...''

அவள் சொல்லும் பொழுதே உள்ளேயிருந்து விசும்பல் ஒலி கேட்டது.

கீர்த்தி பரிவுடன் லட்சுமியைப் பார்த்தான்.

''உங்க ஆதங்கம் எனக்குப் புரிகிறது. நான் எந்தவித தவறான நோக்கத்தோடேயும் இந்த வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைக்கலே. இத்தனை வருஷமா. இந்த வீட்டுக்கு வந்து போறதை ஒரு பழக்கமா ஏற்படுத்திக் கொடுத்துட்டார் மாமா. எந்த ஒரு பழக்கத்தையும் சட்டுனு நிறுத்த முடியாது இல்லையா? என்ன பண்றது? மெள்ள மெள்ள நிறுத்திக்கறேன். ஆனா ஒண்ணு, என்னால என் பூரணிக்கு எந்த இடைஞ்சலும் வராது. அவ நல்லா வாழணுங்கறதுதான் என் ஆசை.''

கீர்த்தி கிளம்பிவிட்டான். பூரணியிடம் எத்தனையோ வருத்தங்களைச் சொல்லிப் பகிர்ந்து கொள்ள வேண்டு



மென்று வந்தவன் எதையும் வாய் விட்டுச் சொல்ல முடியாமல் கிளம்பி விட்டான்.

ஆனால் லட்சுமி நினைத்தாற்போல, இவர்களது சினேகத்தை அத்தனை சுலபமாய் முறிக்க முடியவில்லை.

ஒரு மாதம்... இரண்டு மாதம்... கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரையில் பூரணி, கீர்த்தியைப் பார்க்கவே இல்லை.

தாயிடம் தன் ஏக்கத்தை வாய் விட்டுச் சொல்லாவிட்டாலும் அவளின் முகமும், நாளுக்குநாள் இளைத்து வரும் தேகமும் லட்சுமியின் நெஞ்சில் கல்லைத் தூக்கிப் போட்டாற்போலிருந்தது.

எல்லா அம்மாக்களையும் போல, ''பழகியவனை மற'' என்று சொல்ல லட்சுமியால் முடியவில்லை.

எப்படி முடியும்? பூரணி அவள் மகள் அல்லவா? அவளால் சங்கரனை மறக்க முடிந்ததா? அப்படியிருக்கையில் மகளை மட்டும் வற்புறுத்துவது எந்த விதத்தில் நியாயமாகும்?

ஒரு நாள் பூரணி, தன் தாயின் கையில் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''என்னதும்மா இது?''

''நான் ஒரு வேலைக்கு மனுப் போட்டிருந்தேன். வேலையில் சேரச் சொல்லி ஆர்டர் வந்திருக்கு.''

''உனக்கு எதுக்கு இப்ப வேலை பூரணி? நல்ல இடமாப் பார்த்து நான்...''

Vennila

அவன் சட்டென அம்மாவை நிமிர்ந்து பார்த்து, விரக்தியாய்ச் சிரித்தான்.

"நீ சொல்ற மாதிரி நல்ல இடம் எனக்குக் கிடைக்கும்னு எனக்குத் தோணலைம்மா. அப்படியே வந்தாலும் என் மனசு ஒண்ணும் குழந்தைகள் உபயோகிக்கிற சிலேட்டுப் பலகை இல்லே, எழுதினதை அழிச்சிட்டுத் திரும்ப எழுத. நான் வேலைக்குப் போறேன். பழைய நினைவுகளிலேயே மூழ்கிக் கிடக்கிறதுக்கு, புதுசா ஏதாவது உத்தியோகம் பார்க்கிறது எத்தனையோ மேல்.

"நான் பணத்துக்காக வேலைக்குப் போகல்லே. ஒரு மாறுதலை வேண்டிப் போறேன்."

லெட்சுமி ஒன்றுமே மறுத்துப் பேசவில்லை. தலை குனிந்து கண்ணீர் மல்க உட்கார்ந்திருந்தாள்.

பூரணி வேலைக்குப் போகத் தொடங்கிய பின்தான், கீர்த்தியின் தற்போதைய நிலைமை புரியத் தொடங்கியது. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த போது, வெளியில் நடக்கும் செய்திகள் எதுவுமே தெரியாமல் இருந்தது. இப்பொழுது அவளைத் தேடி விவரங்கள். வந்தன.

பூரணி வேலை செய்யும் பாங்கில், கேஷியர் மற்றொரு ஊழியரிடம் பேசிக் கொண்டிருந்த போதுக் கிடைத்த தகவல் இது:

"என்ன கேஷியர் சார். அம்மாவுக்கு உடம்புத் தேவலையா?"

"தேவலையாவது! கல்கண்டு மாதிரி எழுந்து உட்கார்ந்து விட்டாள்."

"நிஜமாவா! கேன்சர்னு சொன்னீங்க?"



"ஆமா, கேன்சர்தான், ஆனா ஆயுசு கெட்டியா இருக்கே. இல்லையின்னா டாக்டர் கீர்த்திவாசனைப் போய்ப் பார்த்திருக்க முடியுமா? மனுஷன் கையில கத்திய எடுத்தா, எமன் அந்தத் திசையிலேயே தலை வச்சுப் படுக்க மாட்டான்,"

பூரணி, தன் கைக் காரியத்தை அப்படியே நிறுத்தி விட்டு அந்த வார்த்தைகளில் மூழ்கிப் போனாள். என்ன தான் மறைக்க முயன்றும் புன்னகை உதட்டோரத்தில் நர்த்தனமிட்டது.

"என் கீர்த்தி...என் கீர்த்தி...உங்களுக்கு எத்தனை பெரிய பாராட்டு இது! ஐயோ, இந்த வார்த்தைகளை நீங்க கேட்கவில்லையே!"

இதற்கு அடுத்து ஒருநாள், பூரணி தன்னை அடக்க முடியாமல் நேரே சங்கரனின் நர்ஸிங் ஹோமுக்குப் போனாள். நெஞ்சுக்குள் இனம் தெரியாத அச்சம் புறாக்களைப் போலப் படபடவெனச் சிறகடித்தது.

வெளி வராந்தாவில் எக்கச்சக்கக் கும்பல். எல்லாம் நோயில் வாடிய முகங்கள். அவர்களைத் தாண்டிக் கொண்டு உள்ளே செல்ல அவள் விரும்பவில்லை.

கீர்த்திக்கு அவள் வெளியே காத்திருப்பது மட்டும் தெரிந்திருந்தால் அவனே எழுந்து ஓடி வந்திருப்பான்.

அவள் அன்றுதான் முதல் தடவையாக அந்த நர்ஸிங் ஹோமிற்கு வந்திருக்கிறாள். ஆதலால் மெல்ல எழுந்து அந்தப் பெரிய கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தாள். வெளிப்புறச் சுவரில் பளபளக்கும் பித்தளை எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்த அந்தப் பெயர்—

'பூரணி கிளினிக்!'

Vennila

விழிகளில் குப்பென ஈரம் படர்ந்தது. யாரும் பார்க்காத வண்ணம், புடைவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

அவள் கண்ணெதிரே சங்கரனின் உருவம் தெரிவது போலிருந்தது. அதுவும் எப்படி? கல்யாண மண்டபத்தில் லட்சுமியின் மடியில் தலையை வைத்துப் படுத்து, சிறகு ஒடிந்த பறவை போல அவர் தவித்த தோற்றம்.......... கீர்த்தியைப் பூரணியிடமிருந்து பிரிக்கப் போகிற துக்கம் தாளாமல், மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவளை அவர் பார்த்த பார்வை....

உண்மையில் அதுதான் அவர் அவளைப் பார்த்தக் கடைசிப் பார்வை. அப்பொழுதுமே அந்தக் கண்கள் அரைச் செருகலாய் மூடித்தான் இருந்ததே!தவிர, மலரவே இல்லை.

அவள் கவனித்திருந்தால், பூரணி அந்த உண்மையை அறிந்திருக்கவே முடியாது.

உள்ளே கூட்டம் நெறித்ததால், அழும் குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு வெளியே உலாத்திக் கொண்டு இருந்தவன், சற்றுப் பொறுமையிழந்து வாட்ச்மேனிடம் கேட்டான்:

''எம்பா, உள்ளே டாக்டர் பேஷண்ட்டைத்தான் பார்க்கறாரா, இல்லே பெர்ண்டாட்டி கூடக் கொஞ்சிட்டு இருக்காரா? நானும் அப்பால இருந்து பார்க்கறேன். கும்பல் அப்படியே நிக்குது?''

''எங்க, உங்கக் குழந்தைக்கு என்ன உடம்புக்கு? தலைவலியா, காய்ச்சலா, வவுத்து நோவா?''

''அப்படி ஏதாவது இருந்தா நான் ஏன்யா இங்கே வரேன். கண்ணுல கட்டிய்யா. பார்த்த டாக்டருங்க



எல்லாரும் இந்த டாக்டர் பக்கம் கையைக் காட்டி விட்டுட்டாங்க.''

வாட்ச்மேன். தன் கையிலிருந்த பீடியைக் காலடியில் போட்டு நசுக்கியபடி சிரித்தான்.

''தெரியுதுல்லே. இந்த வியாதியோடக் கொடுமை? ஒவ்வொரு பேஷண்ட்டும் என்ன அவதியிலே வர்றாங்களோ. மிச்சரையும் மாத்திரையையும் கொடுத்து அனுப்பிடறக் கேசுங்க இல்லே இது. ஒவ்வொரு கேஸையும் நல்லா கவனிச்சு, ஆபரேஷன் செய்ய முடியுமா? முடியாதான்னு பார்த்துத்தான் அனுப்பணும். பொண்டாட்டிக் கூடக் குலாவுற ரகமில்லையா அவரு. பார்க்கப் போனா, தாலிகட்டினவ இவர் கூடவே இல்லே.''

''அப்படியா?''

''இந்த மனுஷனோட அருமை தெரியாதவய்யா அவ. அம்மா பேச்சைக் கேட்டுட்டு உட்கார்ந்திருக்கா.''

''அடப் பாவமே!''

''டாக்டர், எத்தனை நேரமானாலும் எல்லாக் கேஸையும் பார்த்துட்டு. அப்புறம்தான் வீட்டுக்குப் போவாரு. அதுவும், பெண்டாட்டி வீட்டுக்கு இல்லே, தன் வீட்டுக்கு. அம்மாவையும் தங்கையையும் தம்பியையும் தன் கூடக் கொண்டு வந்து வச்சிட்டிருக்காரு. ராவு எத்தினி நேரமானாலும் அங்கேதான் போவாரு.''

''த்சொ த்சோ....''

பூரணி, செடியோடு செடியாய், மரமோடு மரமாய் நின்று விட்டாள். நெஞ்சுக்குள் துக்கம் பந்தாய் எழும்பி அடைத்தது.

''நிஜமாவா! உமாகூட இவர் வாழவே இல்லையா?''

Vennila

அன்று எத்தனை நேரமானாலும் கீர்த்தியைப் பார்த்து விட்டுப் போக வேண்டும் என்கிற வீம்பில் அவள் காத்திருந்தாள்.

கடைசி நோயாளியைக் கவனித்துட்டு, கீர்த்தி வெளியே வரும்பொழுது இரவு மணி பத்து.

''யாரு?''

அவன் இருட்டில் நிற்பவளை உற்று நோக்க—

''நான்தான்...'' பூரணி, வெளிச்சத்துக்கு வந்தாள்.

''பூரணி, நீயா... நீ எங்கே?''

பதறி விட்டான் அவன். அவளை எதிர்பாராதவிதமாக அங்கே சந்தித்ததில் ஏற்பட்ட ஆனந்தத்தை அவனால் மறைக்க முடியவில்லை. ஓர் இனிய சிநேகிதியைப் பல நாட்களுக்குப் பிறகு சந்தித்த பரவசம்.

''வாட்ச்மேன் கிட்ட சொல்லிட்டு உள்ளே வரக் கூடாதா பூரணி?''

''உங்களோட வேலைக்கு என்னால ஒத்தாசைதான் செய்ய முடியலியே. தொந்தரவாவது தராம இருக்கலாம் இல்லையா?''

''தொந்தரவா? உன்னாலேயா?''

''உங்களை மாதிரி சமூகப் பணியையே மூச்சாகக் கொண்டிருக்கிறவங்களுக்கு அன்பு கூடத் தொந்தரவு தான்.''

''அவன், வேகமாய் முன்னால் சென்று, கார் கதவைத் திறந்து விட்டான்.

''ஏறிக்கோ பூரணி.''

''இருங்க, இப்ப நேரே எங்கே போறீங்க?''



அவன், சற்றுத் தயங்கினான். பின்பு, அவளை உற்றுப் பார்த்து விட்டு, மெதுவாகச் சொன்னான். ''என் வீட்டுக்கு.''

''உங்க வீடுன்னா... உமா எங்கே இருக்கா?''

''அவ, அவ அம்மா கூட இருக்கா. நீ வண்டியிலே ஏறு. போகிறபோது சொல்றேன்.''

அவள் மறுக்காமல் வண்டியில் ஏறினாள்.

''நீங்க செய்யறது சரியில்லை. இந்த மாதிரி உமாவைத் தனியா விட்டுட்டு, நீங்க தனியா வாழறது... இதுக்காகவா அவ கழுத்திலே தாலியைக் கட்டினீங்க? இதுக்கு, அப்பவே அப்பா கிட்ட என்னால இவ கூட வாழ 'முடியாதுன்னு சொல்லியிருக்கலாமே!''

''என்னதான் உமா, என் கையிலிருந்த வாழ்க்கையைத் தட்டிப் பறிச்சிட்டாலும் அவ என்கூடப்பொறந்தவ. அவளை நீங்க இது மாதிரி ஒதுக்கி வச்சா, நான் சும்மாயிருக்க மாட்டேன். நீங்க எங்க அப்பாவுக்குப் பெரிய துரோகம் பண்ணிட்டீங்க.''

அவள், கண்களில் கனல் தெறிக்கப் பேச, அவன் பேசட்டும் என்று விட்ட கீர்த்தி, அவள் பேசி முடித்ததும் நிதானமாக ஆரம்பித்தான்.

''பூரணி, எப்பவும் ரெண்டு பக்கத்து நியாயங்களையும் கேட்டுட்டு அப்புறமாய்த் தீர்ப்பு வழங்கறதுதான் நல்லது. உமாவை, மாமாவோட ஆத்ம திருப்திக்காக அவளோட நடத்தையை எல்லாம் மறந்து, அவள் கூட வாழ நான் தயார். ஆனா, அவ அதுக்குத் தயாரா இல்லே. நான் அங்கே போனா...''

Vennila

அவன், தனக்கும் உமாவுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளை ஒன்று விடாமல் சொன்னான். பூரணி அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

ஆரம்ப காலத்தில், தனது கடிதத்தினால் அவளது கல்யாணத்தையே நிறுத்திய ஷியாமிடம், உமாவுக்கு மிதமிஞ்சிய கோபம்தான். ஆனால், சங்கரனின் இறப்புக்குப் பிறகு, அவன் அவளைச் சந்தித்து தனது உண்மையான காதலே தன்னை அப்படிச் செய்யத் தூண்டியது என்றும் இப்பொழுது அவளை மறக்க முடியாமல் தான் தவிப்பதாகவும் பேசிப் பேசி அவளைக் கரைத்து விட்டான்.

அவள் மறுபடியும் அவனுடன் சுற்றத் தொடங்கி விட்டாள். முன்பாவது, தந்தை என்ன சொல்லுவாரோ என்கிற பயம் இருந்தது. இப்பொழுது அதுவும் இல்லை. மீனாட்சிக்கு எப்படியோ மகள் சந்தோஷமாக இருந்தால் போதும் என்கிற எண்ணம்.

''ஷியாமும் அவனைச் சேர்ந்த சினேகிதர்களும் நேரம் காலம் இல்லாமல் உமாவைத் தேடி வருவதும், அவர்களுக்குப் பார்ட்டி என்றும் டின்னர் என்றும் உமா ஏற்பாடு செய்வதும் அப்படி இவர்களை உபசரிப்பதே பெரிய கௌரவமாக மீனாட்சி நினைப்பதுமாய் இருக்கிறாள்.

எப்பொழுதாவது கீர்த்தி அந்த வீட்டிற்குப் போனாலும், அங்கு நடக்கும் விஷயங்கள் அவனைக் கலங்க அடிக்கும்.

'மொட்டை மாடியில் டிஸ்கோ சங்கீதமும்' ஒவென்ற சிரிப்பும் தாராசமாய்க் கேட்கும்.

''உமா... உமா இல்லே?''

''மாடியில் இருக்கா. என்ன வேணும்?''



''இல்லே... அவளைப் பார்த்துட்டுப் போகலாம்னு...''

''அவளை இப்ப பார்க்க முடியாது. அவ ஃபிரண்ட்ஸ் எல்லோரும் வந்திருக்காங்க. என்ன சொல்லணுமோ, என் கிட்டச் சொல்லிட்டுப் போகலாம்.''

மீனாட்சி அகங்காரமாய்ச் சொல்லுவாள். அந்தக் கணமே, அந்த வீட்டிலே இருக்கப் பிடிக்காமல் வீட்டை விட்டுக் கிளம்பி விடத் துடிப்பான் அவன்.

அவன் கிளம்பும் சமயத்தில், உள்ளேயிருந்து அதிர் வெடி வெடிப்பது போல, மீனாட்சியின் குரல் கேட்கும்.

''செக்கிலே கையெழுத்துப் போட்டுட்டுப் போ...''

''இப்பத்தானே ரெண்டு நாள் முன்னாலே ஒரு செக், ஐயாயிரம் ரூபாய்க்குப் போட்டுத் தந்தேன்? அதுக்குள்ளே...''

''இதப் பாரு. எனக்கும் என் பொண்ணுக்கும் ஆயிரம் செலவு இருக்கும். அதையெல்லாம் கேட்க, தேத்து வந்தவனுக்கு உரிமையில்லே.''

''நிஜம்தான். என்னதான் எனக்கு உரிமை இல்லைன்னு சொன்னாலும் மனசு கேட்கலை. மாமாவோட குடும்பம் சீரழியறதைப் பார்த்துட்டுப் பேசாம இருக்க என்னாலே முடியாது.''

''அடாடா...ஆடு நனைகிறதேன்னு ஓநாய் அழுததாம்.''

இதற்குள் மாடியிலிருந்து உமா இறங்கி வருவாள். அவள் பின்னாலேயே ஒரு பட்டாளம் இறங்கி வரும்.

Vennila

வியாம், வேண்டுமென்றே கீர்த்தியைப் பார்த்துப் போலிப் பணிவுடன் உடம்பை ஆமாம் கோணலாய் வளைத்து, கைகுலுக்கக் கரத்தை நீட்டுவான்.

"ஹலோ டாக்டர்!"

அவன் நீட்டிய கரத்தை அப்படியே பிடித்து முறுக்க வேண்டும் போல இருக்கும் கீர்த்திக்கு. பல்லைக் கடித்துச் சகித்துக் கொள்வான்.

"என்ன, அதிசயமா இங்கே வந்திருக்கார் டாக்டர்?"

மகள், நாவை [illegible].

"திருவாரூர்காரி வீட்டுக்கும் போயிருப்பார். அங்கே அவ இருந்திருக்க மாட்டா. சரின்னு இங்கே வந்திருப்பார்."

[illegible] இடக்காகவே பதிலளிப்பாள்.

அடுத்த நிமிஷம் கொல்லென்ற சிரிப்பொலி எழும்.

"என்னை என்ன வேணுமானாலும் சொல்லுங்க. மாயா கிட்டே பட்ட கடனுக்கு எல்லாத்தையும் கேட்டுக்க நான் தயாரா இருக்கேன். ஆனா, அநாவசியமா அந்தப் பெண்ணையும் அவ அம்மாவையும் நம்ம சண்டையிலே இழுக்க வேண்டாம்."

அவன் எரிந்து விழுந்துவிட்டுப் புறப்பட்டுவிடுவான்.

பூரணிக்கு, இவனது நிலைமையைப் பார்க்கப் பார்க்க நெஞ்சை என்னவோ செய்தது.

இவருக்கு என்ன தலையெழுத்து?

பாதி நாட்கள் நர்ஸிங் ஹோமிலேயே தங்கி, அங்கிருந்தபடியே வீட்டிலிருந்து எதையாவது வரவழைத்துச் சாப்பிட்டு...



அன்று அவள் லட்சுமியிடம் தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

"அம்மா, உன்னை மாதிரியே நானும் வாழத் துணிஞ்சிட்டேன்."

"என்ன சொல்றே."

"உனக்கே தெரியும். ஒரு மனுஷரோட ஆத்மார்த்தமாய் பழகிட்டா, அவர் கிட்டேயிருந்து பதிலுக்கு அன்பைத் தவிர, பாசத்தைத் தவிர, வேறே எதையுமே எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லையம்மா."

"நீ... நீ... டாக்டர் சங்கருக்குத் தாலி கட்டாத பெண்டாட்டியா இருந்தே. உன் மனசறிய அவருக்கு ஒரு துரோகமும் செய்யலே. ஆனா ஊரும், உலகமும் உன்னை அவரோட வைப்பாட்டின்னுதான் சொன்னதே தவிர, பொண்டாட்டின்னு ஒரு நாளும் சொல்லலே. அதுக்காக நீ வருத்தமும் படலே. இப்ப உன் மகளா நானும் அது மாதிரியே இருக்கிறதா முடிவு செஞ்சுட்டேன்."

"மேளமும், தாலியும் வேண்டாம், என்னாலே அவருக்குத் துணையாவது நிம்மதி கிடைக்குமானா, எனக்கு அதைவிடப் பெரிய சந்தோஷம் வேற என்ன இருக்கு?"

லட்சுமி திகைத்துப் போய் நின்று விட்டாள்.

என்ன சொல்லுவாள் அவள்... என்ன சொல்ல முடியும், அவளால்?

கீர்த்தியும் தன் மகளும் சேர்ந்தாற் போல் காரிலேறிப் போவதும் கூடத்து ஊஞ்சலில் தம்பூராவை வைத்துக் கொண்டு மகள் இனிமைய இசையைப் பாட, அவன் கண்களை மூடி அதை ரசிப்பதும், 'அவருக்கு இது பிடிக்கும் அதுன்னா ரொம்ப உசிர்'—இப்படிச் சொல்லிக்கொண்டே

Vennila

மகன் ஆசை ஆசையாய்ச் சமைப்பதும், அவன் ஒரு குழந்தை போல் குதூகலத்தோடு அவைகளை ருசி பார்ப்பதும்...

சின்னக் குழந்தைகளின் அப்பா அம்மா விளையாட்டு போல, சிறுமிகளின் ஆரம்ப வாழ்க்கை போல வெகு சுத்தமாகவும், நிஷ்களங்கமாகவும் அவர்களின் சிநேகிதம் இருந்ததே தவிர, அதில் எந்த ஒரு விகல்பமும் இல்லவே இல்லை.

அது லட்சுமிக்குத் தெரிந்திருந்தது. மற்றவர்களுக்குத் தெரிய நியாயமே இல்லையே!

சங்கரன் விட்டுப் போன தொடர்பை, அவரது மருமகன் புதுப்பித்துக் கொண்டிருக்கிறான் என்று ஊரே பேசத்தான் பேசியது.

ஊரார் பேச்சு கீர்த்தியின் காதில் மட்டுமல்ல, அவனைப் பெற்றவளின் காதிலும் விழத்தான் செய்தது.

அவளுக்குத் தெரியும் மகனைப் பற்றி, பூரணியைப் பற்றி நாள் முழுக்க, உயிர்களுடன் மல்லுக்கு நின்று, அப்பாடா என அவன் ஓய்வெடுக்க நினைக்கையில், பூரணியை நினைப்பதில் என்ன தவறென்று அவளும் நினைக்காமல் இல்லை.

அதே சமயத்தில் மகன், உமாவைப் பார்த்து விட்டு வரும் பொழுதெல்லாம் எத்தனை உடைந்து போய், தூளான இதயத்துடன் வருகிறான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

அது மட்டுமல்ல, இவர்கள் எல்லோரும் சொல்வது போல சங்கரன் சொத்தில், சொந்த உபயோகத்துக்காக என்று கீர்த்தி எடுத்துக்கொண்டதெல்லாம் அந்த நர்ஸிங் ஹோமே தவிர, வேறில்லை என்பதும் அவளுக்குத் தெரியும்.



அவள், பூரணி வீட்டிலிருந்து திரும்பும் மகனை எதுவுமே கேட்பதில்லை.

''சாப்பிட்டாச்சா கீர்த்தி?''

''உம்...''

அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவுமே கேட்டதில்லை.

ஏதோ, இத்தனை பேச்சுக்களுக்கும் நடுவிலே கீர்த்திக்குப் பூரணியின் அன்பு ஓரளவுக்கு ஆறுதலளிப்பது என்னவோ உண்மை.

அதிலேயும் சில நாட்களாக ஒரு இக்கட்டு.

உமாவைப் பற்றிய அந்தச் செய்தி, மிகத் தலைகுனிவாக, மிக அவமானமாகவே இருந்தது.

சின்னச் சின்னக் கஷ்டங்களையும் பூரணியிடம் பகிர்ந்து கொள்ளும் அவனால், இதை அத்தனை எளிதாகச் சொல்ல முடியவில்லை.

அவனது முகவாட்டத்திலேயிருந்தே, பூரணி ஏதோ சங்கடம் இருப்பதை உணர்ந்து கொண்டாள்.

''என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லே பூரணி.''

''இல்லே, ஏதோ விஷயம் இருக்கு.''

அவன் வெகுநேரம் வரையில் மௌனமாக இருந்தான். சொல்லலாமா, வேண்டாமா என்பது போலத் தனக்குள்ளேயே சீட்டுக் குலுக்கிப் பார்ப்பது முகத்தில் தெரிந்தது.



Vennila

அவள் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

''உமா, வெளிநாடுகளுக்குப் போயிட்டு வந்ததுக்கு அப்புறம் நிறைய மாறிட்டா பூரணி.''

''புரியலியே...''

''இந்த ஆறு மாசத்தில் ரெண்டு நடவை அவ அபார்ஷன் பண்ணிக்கறதுக்காக லேடி டாக்டர் சரோஜா வீட்டுக்குப் போயிருக்கா பூரணி. நேத்து ராத்திரி டாக்டர் சரோஜா எனக்குப் போன் பண்ணிக் கேட்கறா, 'நீ நோ சரோஜா, என் கூட எம். பி. பி. எஸ் படிச்சா. அவளுக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியும். ஆனா உமாவைப் பத்தி ஒண்ணும் தெரியாதில்லையா? இவ, இது மாதிரி வர்றது அவளுக்குப் பெரிய ஷாக்.''

அவனது வார்த்தைகள் பூரணிக்கு மின்சாரக் கம்பியைத் தொட்டாற்போலத்தான் இருந்தது.

''ஐயோ, இருக்கிற அவமானம் போதாதுன்னு இது வேறயா?''

அவள் அவனையே வெறித்தபடி நின்றாள்.

## 8

டாக்டர் சரோஜாவின் பேச்சைக் கேட்டது முதல் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலத் தோன்றி விட்டது கீர்த்திக்கு.

ஒரு மனிதனின் தலை குனிவுக்கு இதைவிட வேறு என்ன செய்தி வேண்டும்? ஆனால், நல்லவேளை, சரோஜாவுக்குக் கீர்த்தியின் மீதுதான் கோபமே தவிர,



உமாவின் மீதல்ல. ஏனென்றால், உமா தான் செய்த தவறுகளையெல்லாம் கீர்த்தியின் தலை மீது தூக்கிப் போட்டு விட்டாள்.

முதல் முறை அவள் கருக் கலைப்புக்காக, டாக்டர் சரோஜாவின் நர்ஸிங் ஹோமுக்குப் போனபோதே, வியப்பில் புருவத்தை உயர்த்தினாள் சரோஜா.

''நீங்க... டாக்டர் கீர்த்தியோட ஒய்ஃப் இல்லே?''

''எஸ்''

''உங்க கல்யாணத்துக்கு நான் வந்திருந்தேன். ஆனா, அப்ப என் கிளாஸ் மேட் கீர்த்திதான் உங்க கழுத்தில் தாலி கட்டப் போறார்னு தெரியாது. முகூர்த்தத் துக்கு முன்னாடி, இந்தக் கல்யாணம் வேண்டாம்னு உதறிட்டுப் போனாரே திருச்சி டாக்டர் முரளிதான், அவர் எங்கப் பெரியப்பா பிள்ளை.''

''ஓ.''

''அவன் கல்யாணத்துக்காக வந்தவ, என் கிளாஸ் மேட் கீர்த்தி கல்யாணத்தைப் பார்த்துட்டு, மூக்கைப் பிடிக்க விருந்து சாப்பிட்டுட்டுப் போனேன். அடடா, நான் பாட்டுக்கு பேசிட்டே இருக்கேனே, நீங்க வந்த விஷயத் தைப் பத்தி விசாரிக்காம!''

''வந்து...''

உமா, எப்படிச் சொல்வது என்று தயங்க, அவளது தயக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட சரோஜா, புன்னகைத்து,

''எத்தனை மாசம்னு கரெக்டா கன்ஃபர்ம் பண்ணிக்க வந்திருக்கீங்க. ஆம் ஐ கரெக்ட்?'' என்றாள்.

''ரெண்டு மாசமாகுதுன்னு நினைக்கிறேன்.''

Vennila

''[illegible] இப்ப நான் [illegible] சொல்லிக்கிறேன், [illegible] வேண்டாம். என் [illegible] இல்லாத [illegible] நான் [illegible]. [illegible] தெரியமா, நானே சொல்லிட்டுறேன்?''

சரோஜா பார்த்துப் போனாள். கீர்த்திக்கு இந்தச் சந்தோஷமான விஷயத்தைத் தெரிவிப்பதற்காக, டெலி போன் ரிஸீவரைக் கையிலெடுத்தாள்.

''ஒன் மினிட், டாக்டர்.''—உமா தடுத்தாள்.

''என்னம்மா?''

''எனக்கு இப்ப குழந்தை வேண்டாம் டாக்டர், நான் உங்க கிட்ட வந்திருக்கறதுக்குக் காரணமே இதைக் க்ளீன் பண்ணத்தான்.''

ஆச்சரியம் தாங்காமல் உமாவின் முகத்தையே உற்றுப் பார்த்தாள் டாக்டர் சரோஜா.

''உங்களுக்குக் கல்யாணமாகி கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சு இல்லே?''

''ஏன், இப்ப வரப்போற பிப்ரவரிக்கு மூணு வருஷமே முடியப் போகுது.''

''அப்புறம் என்ன? காலா காலத்தில பெத்துக்க வேண்டியதுதானே? அதுவும் முதல் குழந்தைய அழிக்கக் கூடாதும்மா.''

''இல்லே. இப்ப நான் ஒரு குழந்தைக்குத் தாயா கறதை அவர் விரும்ப மாட்டார், அவருக்கும் எனக்கு கொஞ்ச நாளா அபிப்பிராய பேதம் ஏற்பட்டுப் போச்சு.''

''பிரச்னை எத்தனை இருந்தாலும், ஒரு குழந்தை யோட வரவை, [illegible] இருக்கிற [illegible] நீக்கிடும், [illegible].''

''உங்களுக்குப் புரியாது டாக்டர். எங்களோட பிரச்னையே இப்போதைக்கு இந்தக் குழந்தைதான். இதைவிட, வெளிப்படையா என் குடும்பப் பிரச்சனைகளை உங்ககிட்ட விளக்க முடியாத நிலையிலே இருக்கேன். ஸாரி.''

இதற்கு மேல் என்ன பேசுவாள் சரோஜா? இந்தக் கருக் கலைப்பைத் தன்னால் செய்ய முடியாது என ஒரே வார்த்தையில் அவளால் சொல்லிவிட முடியும். இருந் தாலும், கீர்த்தியின் சிநேகத்தை நினைத்து அப்படிச் சொல்லவில்லை.

''டாக்டர். நான் இங்கே வந்ததோ, நீங்க எனக்குச் செஞ்ச கருக்கலைப்பையோ அவர் கிட்ட சொல்ல வேண் டாம். தெரிஞ்சா என்னைத் திட்டுவார்.''

''அவள், தனது கைப் பையைத் திறக்க, சரோஜா அவளது கையைப் பிடித்துத் தடுத்தாள்.''

ஃபீஸ் எதுவும் வேண்டாம். அடுத்த தடவையாவது என் தம்பியோட குழந்தையை முழுசாக கையில எடுத்துக் கொஞ்சற சந்தர்ப்பத்தை எனக்குத் தாங்க. அது போதும்.''

சரோஜாவின் வார்த்தைகளைத் தலை குனிந்தபடி கேட்டவள், மௌனமாக விடை பெற்றாள்.

ஆனால் அடுத்த சில மாதங்களில் இரண்டாவது முறை யாக அவள் வந்தபோதோ சற்று கடுமையாகவே பேசி விட்டாள் டாக்டர் சரோஜா.

Vennila

''இது மாதிரி அடிக்கடி செஞ்சுக்கக் கூடாது. ஒரு டாக்டரோட மனைவியா இருந்தும் உனக்கு இது பத்தித் தெரியாதது ரொம்ப ஆச்சரியமா இருக்கு. இதுக்குப் பதிலா, பேசாம மாத்திரை ஏதாவது யூஸ் பண்ணியிருக்கலாமே?''

மாத்திரைகளைத் தவறாமல் உபயோகிப்பவள்தான் தான் என்றும், கடந்த இரண்டு தடவைகளாக ஏதோ குழப்பத்தில் மறந்து விட்டதாகவும் அவள் சொன்னாள்.

''கல்யாணமாகி மூணு வருஷமாகிறது. மூணு வருஷமா விடாம மாத்திரை சாப்பிடறியா?'' சரோஜா அதிர்ந்து போய்க் கேட்டாள்.

அவள், பதிலளிக்காமல் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். மூன்று வருடங்கள் அல்ல. திருமணத்துக்கு முன்பிருந்தே மாத்திரைகளை உபயோகித்து வருவதை அவள் எப்படிச் சொல்வாள்?

''இதுபோல மூணு நாலு வருஷம் விடாம கருத்தடை மாத்திரை சாப்பிடறது எத்தனை பெரிய ஆபத்துல கொண்டு விடும் தெரியுமா? யார் சொல்லி இப்படிச் சாப்பிடறே?''

''என், என் ஹஸ்பெண்ட் சொல்லித்தான்.''

''வாட்?''

அதட்டிய சரோஜாவை, மெள்ள நிமிர்ந்து பார்த்த உமா, திடீரென விம்மி அழத் தொடங்கினாள்.

''அவருக்கு ஒரு குழந்தைக்கு அப்பா ஆகறது பிடிக்கலே. அதுவும், என் குழந்தைக்கு அப்பாவா வளைய வரப் பிடிக்கலே இல்லே. ஏதோ என் சொத்துக்காக ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டார். நாளைக்கு



எனக்குக் குழந்தை பிறந்தா, சொத்துக்கு வாரிசு வந்திடுமேன்னு பயப்படறார்.

''மேலும், அவருக்கு ஒரு சிஸ் இருக்கா. அது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். எங்க அப்பா, எங்க அம்மாவுக்குத் துரோகம் பண்ணிட்டுத் திருவாரூர் தேவதாசியை வச்சிருந்தார். அவளுக்குப் பிறந்த பெண்ணைத்தான் இவர்

''முதல்லே எனக்கும் திருச்சி டாக்டருக்கும் கல்யாணமானதும், அதுக்கு அடுத்த முகூர்த்தத்தில் இவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம்னு முகூர்த்தம் குறிச்சிருந்தார் அப்பா. என் கல்யாணம் திடீர்னு நின்னு போனதாலே, அந்த நேரத்தில் நிலைமையைச் சமாளிக்க இவரை இழுத்து வந்து மணையில் உட்கார்த்தி வச்சார் அப்பா.

''என்னதான் பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அந்த நிமிஷம் கட்டுப்பட்டாலும், அவராலே அந்தத் தாசிப் பெண்ணை மறக்கவே முடியலே. அவளுக்குத்தான் முதல்லே குழந்தை பொறக்கணும்னு எதிர்பார்க்கிறார். சொத்தெல்லாம் அவ குழந்தைக்குத்தான் போகணும்னு...''

''வாட் நான்சென்ஸ், கீர்த்தியா இப்படி... என்னாலே நம்பவே முடியலையே...''

சரோஜா மாய்ந்து போனாள். அந்தக் கணமே கீர்த்தியைப் பார்த்து, நாலு வார்த்தை, நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போலக் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது.

''இருக்கட்டும், நீ போ. நான் அவன் கிட்ட நேரே பேசிக்கிறேன்.''

உமா, அவளின் வார்த்தையில் திடுக்கிட்டுப் போனாள்.

Vennila

'இது என்ன? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் வருகிறது.'

என்னதான் மீனாட்சி ராட்சஸியாக இருந்தாலும், தன் பெண்ணின் வயிற்றில் முறை கேடாக ஒரு பிள்ளை வளர்வதைச் சகித்துக் கொள்வாள் என்று உமாவுக்குத் தோன்றவில்லை.

இதைத் தாயிடம் சொல்லவே கூச்சமாக இருந்தது. விஷயம் வெளியே தெரிந்தால் எத்தனை அவமானம்! ஊர், உலகத்துக்கே, கீர்த்தியும் இவளும் பிரிந்து இருப்பது தெரிந்த விஷயமாயிற்றே!

இதெல்லாவற்றையுமாவது எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். ஷியாமின் பிள்ளையைச் சுமப்பதை அவளே விரும்பவில்லைதான். ஷியாமைப் போன்ற ஒருவன் பழகுவதற்கு உல்லாசமான சிநேகிதனாக இருக்கலாம். ஆனால், நல்ல மகனாக, நல்ல கணவனாக நிச்சயம் இருக்க முடியாது. அது அவளுக்கே தெரிந்த விஷயம்தான்.

எத்தனை தில்லுமுல்லுகளைச் செய்திருக்கிறான் இந்த ஷியாம்? அத்தனையையும் அவனது சாகசச் செயல்களாக அவள் எடுத்துக் கொண்டாலும், ஒரு தாய் ஸ்தானத்தில், ஒரு மனைவியின் கண்ணோட்டத்தில், அவனது நடத்தை எத்தனை கேவலமானது என்பதுகூட அவளுக்குப் புரியாதா?

இதற்காகவே அவள், அக்கம் பக்கத்திலுள்ள டாக்டர்களையெல்லாம் விட்டு விலகி, ஊரை விட்டுத் தள்ளி நர்ஸிங்ஹோம் வைத்துள்ள சரோஜாவிடம் வந்தாள்.

முதல் தடவையே சரோஜா, கீர்த்திக்கு நன்கு பழக்கமானவள் என்று தெரிந்ததும் உஷாரானாள்.



இனி, இவளிடம் வரக்கூடாது என்று மனதுக்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.

ஆனால், இவள் நினைத்தபடியே எல்லாம் நடந்து விட்டால், அப்புறம் கடவுளுக்கும் விதிக்கும் என்னதான் வேலை?

இம் முறை அவள், கருத்தடை மாத்திரையை மிக ஜாக்கிரதையாக உபயோகித்ததாகத்தான் ஞாபகம். அது என்னவோ! சில நாட்களாகவே அவளுக்கு மறதியும் உடம்பில் படபடப்பும் அதிகமாகிவிட்டது. அளவுக்கு மிஞ்சிய போதை மருந்துகளினால் ஏற்பட்ட அவலம் இது என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை.

இருந்தாலும், புரிந்ததை ஏற்றுக் கொண்டு, பழக்கத்தை மாற்றிக் கொள்ள அவளது சுபாவம் இடம் தரவில்லை.

'ஆ... என்ன நடந்துவிடும்? ரொம்ப டென்ஷனா இருக்கறப்ப ஷியாம் கொடுத்த மாத்திரையில ஒண்ணைப் போட்டுட்டா எல்லாம் சரியாகி விடும்.'

மனதுக்குள் அசட்டுத்தனமான பிடிவாதம். கீர்த்தி, அவள் வீடு தேடி வரும் போதெல்லாம், அவன் கண்ணெதிரே தனது சந்தோஷ வாழ்க்கையைக் காட்ட வேண்டும் என்கிற வெறி.

'எங்க அப்பா எனக்குத் தண்டனை கொடுக்கறதா நினைச்சுத் தன்னையே ஏமாத்திக்கிட்டார். இப்ப அவர் கொடுத்த தண்டனை, உனக்குத்தானே தவிர எனக்கில்லே; நான் ஜாலியாகத்தான் இருக்கேன்' என்று காட்டிக் கொள்ள ஒரு வீம்பு.

இத்தனையையும் மீறி, உள்ளூர ஒரு குரல்.

Vennila

'எல்லாம் சரிதான். ஆனா, நீ முன் போல இருக்கியோ? ஷியாம் கூடப் போட்டி போட்டுக் கொண்டு டிஸ்கோ டான்ஸ் ஆடுவியே, அவன் கூட கார் ரேஸ் போவியே! இப்ப அதெல்லாம் முடியலையே என்?"

'இத்தனைக்கும் காரணம் என் வயித்துல திரும்பவும் அந்தச் சனியன் ஜனிச்சதுதான். அதை எடுத்துட்டா, நான் பழையபடி ஆயிடுவேன். மாத்திரை ஒழுங்காகப் போட்டும், ஷியாம் கூட வரம்பு மீறிப் பழகாம இருந்தும் இப்படி- இது எப்படி சாத்தியம்?'

அவள் திகைத்தாள். உண்மையில் பார்க்கப் போனால் சில மாதங்களாக, அவள் ஷியாமுடன் எங்கே சுற்றக் கிளம்பினாலும் மேஜிக்கு ஒரு பொய்யான திருப்தியைத் தான் தனக்குத்தானே மாட்டிக் கொண்டாளே தவிர, முன்பிருந்த சந்தோஷம் இல்லை. அவனுடன் நெருக்கமாய்ப் பழகுவதைத் தவிர்த்தாள். அடிக்கடி சோர்ந்து போனாள்.

"என்ன ஆச்சு உமா?"

"நத்திங். கொஞ்சம் டயர்டா இருக்கு."

"ஷட்டப்பிட். இந்த வயசில கிழவி மாதிரி இது என்ன அலுப்பு! உடம்; மாத்திரை வேணுமா?"

"கொடு."

உமா, அவள் தரும் போதை மாத்திரையை மாத்திரம் மறுக்காமல் வாங்கிக் கொள்வாள். அதை அவளால் தடுக்க முடியவில்லை.

ஆனால், நாலு மாதங்களாகியும், தனது வயிற்றுச் சுமையை இறக்க வழி தெரியாத உமா, கடைசியில் மறுபடியும் டாக்டர் சரோஜாவிடமே வரவேண்டியதாயிற்று.



"பிடிக்காத பெண்டாட்டிய டைவர்ஸ் பண்ணிட்டுப் போகாம இது என்ன சித்ரவதை? அவனுக்கு அந்தத் தாசிப் பெண்ணும் வேணும். நீயும் வேணுமா? கீர்த்தி இத்தனை தரங்கெட்டுப் போவான்னு நான் நினைக்கவே இல்லே; நீ பேசாம வீட்டுக்கு போம்மா, நான் அவன் கிட்ட பேசிக்கிறேன்."

"இல்லே டாக்டர். இந்த ஒரு தடவை மாத்திரம். வீணா அவர் கிட்டே எதுவும் பேச்சு வச்சுக்காதீங்க. அப்புறம், என் மேல இருக்கற கொஞ்சம் நஞ்சம் பிரியமும் போயிடும்."

அடடா... சமயமென்று வரும் பொழுது, உமாவைப் போன்ற பெண்களுக்குக் கண்களும் குரலும் என்னமாய்த் தான் நடிக்கின்றன!

இத்தனை நடித்தும் என்ன பயன்? சரோஜா உமாவை மறுநாள் வரச் சொல்லி விட்டாள்.

"நாளைக்கு வாம்மா. எனக்கு இன்னிக்குக் கொஞ்சம் வேலையிருக்கு."

அதற்கு மேல் என்ன சொல்ல முடியும்? உமா விருட்டென அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அவள் போன பிறகுதான் சரோஜா, கீர்த்திக்குப் போன் செய்தாள்.

"ஹலோ..."

"நான்தான் சரோஜா. உன் கிளாஸ் மேட் சரோஜா பேசறேன்..."

"ஹாய்... எப்படி இருக்கே? நிறைய பிரசவக் கேஸ் வருதா? உனக்கென்னம்மா, ரொம்ப நல்ல சப்ஜெக்ட்

Vennila

எடுத்துப் படிச்சிருக்கே. நம்ம நாடு இருக்கற நிலைமைக்கு தெருவுக்கு ஒரு மெடர்னிடி ஹாஸ்பிடல் கட்டினாலும் போதாது.''

அவனது யதார்த்தமான பேச்சு அவளைக் குழப்பியது. சிலிவரைக் கையிலெடுத்த போது இருந்த ஆவேசம் சற்றுத் தணிந்தாற் போல, ''கீர்த்தி ...நான் உன்னை ஒரு விஷயம் கேட்கணுமே?'' என்றாள்.

''கேளேன். தாராளமாய்க் கேளு.''

''பிடிக்காத பெண்டாட்டி கூட எப்படி படுக்கையைப் பகிர்ந்துக்கறே நீ?''

''ஏய்...என்ன உளர்றே?''

''நான் உளறல்லே. உன் கல்யாணத்தைப் பத்தியும் உன்னை வளர்த்து ஆளாக்கினவருக்காக நீ செஞ்ச தியாகத்தைப் பத்தியும் வாய் ஓயாமப் பேசிட்டிருக்கறவ தான். ஆனா இப்பத்தான் புரியுது. நீ எதுக்காக, டாக்டர் சங்கரன் பெண் உமாவைக் கல்யாணம் பண்ணிட்டேன்னு. அந்தப் பெண் இங்கே வந்து அழுதப்போ ரொம்பப் பரிதாபமா இருந்தது.''

''என்னது, உமா அங்கே வந்தாளா? எதுக்கு?''

''என்கிட்ட எதுக்கு வருவா? முந்தியே ஆறேழு மாசங்களுக்கு முன்னாலே ஒரு தடவை வந்தா. அப்ப ரெண்டு மாசம். எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம். என் வயித்திலே இந்தக்குழந்தை வளர்றது என் புருஷனுக் குத் தெரிஞ்சா என்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட் டார்ன்னு அழுதா. ஏன், என்ன காரணம்னு கேட்டதுக் குச் சொல்ல மாட்டேன்னு மறுத்துட்டா.

''இப்ப நாலு மாசப் பிள்ளையோட—யூ நோ, நாலாம் மாசத்துல ஒரு பெண்ணோட கருவைக் கலைக்கறது



எத்தனை பெரிய ஆபத்துலக் கொண்டு போய் விடும்னு உனக்குத் தெரியாதா?''

''சொல்லு.''

''நீ பெரிய டாக்டர். உனக்கு நான் சொல்ல வேண்டி யதில்லே. ஒருத்தி கல்யாணமானதிலேருந்து இது வரை கிட்டத்தட்ட மூணு வருஷமா கருத்தடை மாத்திரை சாப் பிட்டா அவ உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

கீர்த்தி எச்சிலைக் கூட்டி விழுங்கினான். சரோஜா சொன்ன விஷயங்கள் அவனைக் கூசிக் குன்றச் செய்தன.

இவளிடம், தன் மீது எந்தத் தவறும் இல்லையென் பதை எப்படிச் சொல்வது?

சொன்னால் உமாவின் குணம் கெட்ட தனத்தைத் தன் வாயாலேயே ஒத்துக் கொண்டதாக ஆகாதோ?

அது, தனக்கும் தனது மதிப்பிற்குரிய மாமாவின் குடும்பத்துக்கும் தீராத களங்கத்தை உண்டு பண்ணாதோ?

என்ன செய்வது?

அவன் புரியாமல் குழம்பி நிற்க, சரோஜா மிக உரிமை யுடன், அவனுக்கு உபதேசம் செய்வதாக நினைத்து, சடசடவெனப் பொரிந்தாள்.

''நீ இந்த மாதிரி நடந்துக்குவேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கல்லே கீர்த்தி. எப்ப உனக்கு அவளைப் பிடிக்கலையோ, பேசாம டைவர்ஸ் பண்ணிட வேண்டியது தானே? அவளாவது நிம்மதியா இருந்திருப்பாஇல்லையா? உனக்கு அவ அப்பாவோட சொத்து வந்து ஆக வேண்டியது என்ன?''

Vennila

அவள், உமா தன்னிடம் சொல்லிப் புலம்பியதையெல்லாம் ஒன்று விடாமல் சொல்ல, கீர்த்தி திகைத்துப் போனான்.

இனிமேலும் சொல்லாமல் இருப்பது தன் பெயருக்கே இழுக்கு. இந்த முடிவுக்கு வந்தவன், சரோஜாவை நேரே சந்தித்துப் பேச வேண்டுமென நினைத்தான்.

அதற்கு முன் பூரணியைப் பார்த்து, தன் நெஞ்சிலுள்ள ஆற்றாமையைக் கொட்ட வேண்டும்.

அவள்தான் அவனது நெஞ்சக் குமுறல்களுக்கெல்லாம் வடிகால். அவள்தான் அவனது துயரச் சுமையைத் தாங்கிக் கொள்ளும் சுமைதாங்கி. அவள்தான் அவனது கதறலைச் செவிமடுத்து, அவனுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய ஒரே ஜீவன்.

இதோ! அவளைத் தேடி வந்தும் விட்டான். எப்படிச் சொல்வது எனத் தயங்கியவன், ஏதோ ஒரு மாதிரியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு விஷயத்தைச் சொல்லியும் விட்டான்.

பூரணி, தூணோடு சாய்ந்தபடி நின்றாள். விழிகள் வெள்ளமாய்ப் பெருக, உதடு நடுங்க,

''இப்ப என்ன செய்யப் போறீங்க?'' என்றாள்.

''சாயந்திரமா டாக்டர் சரோஜாவைப் போய் பார்த்து விட்டு வரலாம்னு இருக்கேன்.''

''அப்போ, நானும் உங்ககூட வர்றேன்.''

''நீயா? நீ எதுக்கு?''

''சும்மாத்தான். உங்களைப் பத்தின அவதூறுல எனக்கும் பங்கு உண்டு.''



அவன் பேசவில்லை. தனக்குள் உறைந்து போனான்.

அன்று மாலை நர்ஸிங் ஹோமிலிருந்து பூரணியுடன் கீர்த்தி டாக்டர் சரோஜாவைப் போய்ப் பார்க்கக் கிளம்பிய அதே நேரத்தில், உமா அவசர சிகிச்சைக்காக டாக்டர் சரோஜாவின் நர்ஸிங் ஹோமிற்கு கொண்டுக் செல்லப் பட்டாள். அவளுடன் கூடவே வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு மீனாவும் வந்தாள்.

சரோஜா இவள் இருந்த நிலைமையைக் கண்டதும் பதறிப் போனாள். ''என்னம்மா?''

''ஒன்றுமில்லே டாக்டர். உங்களுக்குச் சிரமமில்லாமலேயே அபார்ஷன் ஆயிட்டது. ப்ளீஸ்... எனக்கு மேல நடக்கவேண்டிய ட்ரீட்மெண்டைப் பாருங்க.''

சரோஜா அந்த அவசரத்திலும் கீர்த்திக்குப் போன் செய்தாள்.

நர்ஸிங்ஹோமைப் பூட்டியவன், போன் அலறுவதைக் கேட்டதும், திரும்பவும் கதவைத்திறந்துகொண்டு உள்ளே போய் ரிஸீவரை எடுத்தான்.

''கீர்த்தியா?''

''எஸ்.''

''நான் சரோஜா.''

''சொல்லு. இப்பத்தான் அங்கே கிளம்பிட்டிருக்கேன்.

''அப்படியா? உடனே வா. இங்கே உமா அட்மிட் ஆயிருக்கா... அவ... அவ... நீ உடனே வாயேன்.''

திகைத்து நின்றவன், அடுத்த கணமே பரபரப்புடன் கிளம்பினான்.

Vennila

''பூரணி.''

''உம்''...

''நேரே வீட்டுக்குப் போ. நான் அவசரமாப் போக வேண்டியிருக்கு.''

''என்ன, ஏதாவது பேஷண்ட் கிட்டயிருந்து போன் காலா?''

''இல்லே.''—அவன் சரோஜா சொன்னதைப் பரபரப்புடன் சொன்னான்.

''ஓ...நீங்க எவ்வளவு சீக்கிரமா அங்கே போக முடியுமோ போங்க. ஒண்ணும் கவலைப்படும்படியா இருக்காது. நான் ஆண்டவனை வேண்டிக்கிறேன்.''

''பூரணி...'' —அவன் அழுதே விட்டான்.

இவளுக்குத்தான் எத்தனை நல்ல மனசு!

அவன் அதற்கு மேல் ஒரு நிமிடமும் காத்திராமல், காரிலேறிச் சிட்டாய்ப் பறந்தான்.

டாக்டர் சரோஜா, கீர்த்தியின் வரவை நோக்கி, வாசலிலேயே காத்திருந்தாள்.

அவள் முகத்தில் திரை போட்டாற்போல் ஒரு வித எரிச்சல்; அந்த எரிச்சலுக்குக் காரணம் தெரியாமலில்லை கீர்த்திக்கு.

இன்னமும் இவளிடம் உமாவின் நடத்தையைப் பற்றி உண்மையைச் சொல்லவில்லையே அவன்! சொல்வதற்கு இது சரியான சந்தர்ப்பமும் இல்லையே!

''இன்னமும் மயக்கம் தெளியல்லே.''



''ஓ... குறைப் பிரசவம்தானா?''

''உள்ளே வா பேசலாம்.''

அவள், அவனைத் தன் அறைக்கு அழைத்துப் போனாள். தனக்கு எதிரே போடப்பட்டுள்ள நாற்காலியைச் சுட்டிக் காட்டினாள்.

''என்ன சரோ, ஒண்ணும் பயப்படற மாதிரி இல்லையே?''

''அவள் அவனையே உற்றுப் பார்த்தாள்.

''தொடர்ந்து கருத்தடை மாத்திரைகளைத் தின்னா, என்னென்ன வியாதி வரும் கீர்த்தி?''

''ஏன் கேட்கறே? கர்ப்பப் பை சம்பந்தமான எந்த வியாதி வேணுமானாலும் வரலாம்.''

''உம்... ஐ திங்க்... உமாவோட யூட்ரஸ்லே கட்டி இருக்கும்னு... என்னு கேட்டா, இதுவரைக்கும் இத்தனை ரத்தப் போக்கு ஆனதுக்கு, அவ வயித்துல நாலு மாசத்துக்கான கருவே இல்லை. இருந்தாலும் யூட்ரஸ் வீங்கியிருக்கு. அப்படியே டியூமரா இருந்தா நான் பார்த்துக்குவேன். டியூமர் இல்லாம நீ படிச்சதுக்குச் சம்பந்தப்பட்ட கேஸா இருந்தா?''

''சரோ...'' கீர்த்தி அலறியே விட்டான்.

என்ன சொல்கிறாள் இவள்? உமாவுக்குக் கேன்ஸராக இருக்குமோவென்று சந்தேகப்படுகிறாளா?

''சரோ... சரோ...''

''கீர்த்தி, என்ன நீ சின்னக் குழந்தை மாதிரி...அப்படி இருந்தா உன்னைவிட இதுல கெட்டிக்கார டாக்டர்



Vennila

[illegible]

அவன், வெட்கமும் வேதனையுமாய் உமாவின் சுபாவத்தையும், அவளது திருமணம் நின்றதன் காரணத்தையும், சங்கர் எதனால் அவள் பெயரில் சொத்து எதுவும் எழுதி வைக்கவில்லை என்பதையும் சொல்லச் சொல்லக் கன்னத்தில் கையூன்றியபடி அத்தனையையும் கேட்டுத் திகைத்தாள் சரோஜா.

''நீ சொல்றதெல்லாம் நிஜமா கீர்த்தி? அப்ப, அந்தத் தேவ...''

''இத்தனை சொன்னதுக்கு அப்புறம் நான் எதையுமே மறைக்க விரும்பலை சரோ. நான் அவ வீட்டுக்குப் போயிட்டு வர்றது உண்மை. அவளோட இல்லைன்னா இன்னைக்கு நடமாடற பெஷினா மாதிரிருப்பேன். அவ எனக்கு மூச்சு... அவளோடு இருக்கிற சில நிமிஷங்கள் தான் என்னைப் புது மனுஷனா ஆக்கற மருந்து. எத்தனை



[illegible]

அவனது வார்த்தைகள்— [illegible] சரோஜாவின் [illegible] நேரம் [illegible] அப்படியே அமர்ந்திருந்தான் அவன்.

''கீர்த்தி... நான் நான் புரிஞ்சுக்காமல் பேசிட்டேன். ஸாரி...''

''பரவாயில்லை, உன் சந்தேகத்தை நீ நேரே என் கிட்டே கேட்டுட்டே; சொல்லிட்டேன். இன்னும் எத்தனையோ பேர் என்னைப் பத்தின பொய்யான செய்திகளை மனசுக்குள்ளே போட்டுக் குழப்பிட்டு இருக்காங்க. அவங்க கிட்ட, இது மாதிரி நடந்த விஷயத்தை வாய் விட்டுச் சொல்லவும் என்னாலே முடியாது.

''இப்போ உமாவோட உடம்பைக் கவனிக்கணும், கீர்த்தி. அவளுக்கு வந்திருக்கறது வெறும் டியூமர்தானா, இல்லே''

Vennila

''நீ டி அண்ட் சி ஆப்ரேஷன் ஒண்ணு பண்ணி, அந்த லாப்பிலே என் கிட்ட கொடுத்திரோ. என்னோட நர்ஸிங் ஹோம் லேப்லே பார்த்துச் சொல்லிடறேன். அது வரைக்கும் இதைப் பத்தின பேச்சே வேண்டாம். ஆண்டவன் கருணையில் எல்லாமே நல்லபடியா நடக்கணும்.''

அவன் எழுந்து விட்டான். சரோஜா அவனை அழைத்துக்கொண்டு உமா படுத்திருந்த படுக்கைக்குச் சென்றாள்.

மகளின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த மீனாட்சி இவனைக் கண்டதும் 'ஓ'' வென ஒப்பாரி வைத்தாள்.

''பார்த்தியாடா என் தங்கத்தை; அவளுக்கு ஒண்ணுமே தெரியாதுடா. குழந்தை மாதிரி. எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகமாட்டாளே! உனக்குத் தெரியாதா? உன் கூடவே தானே வளர்ந்தா? எங்கேயோ போய், எவன் கிட்டயோ மானத்தை இழந்துட்டு வந்து நிக்கறாளே. இவ வயித்துல நாலு மாசம் உண்டாகியிருக்கறது கூட எனக்குத் தெரியாதே!''

''மாமி, உமா கெட்டுப் போயிட்டான்னு யாரு சொன்னது?''

''அவ வயிறு சொல்லுதேடா. இதைவிட வேற யார் சொல்லணும்?''

''அதெல்லாம் இல்லே. அவளுக்கு வயித்துல கட்டியிருக்குமோன்னு லேடி டாக்டர் சந்தேகப் படறார்.''

''ஐயோ, என் குழந்தை வயித்துல கட்டியா? இன்னும் குடும்பம், வாழ்க்கை இதெல்லாம் என்னன்னே தெரியாதே! அதுக்குள்ள கட்டியா? சின்ன வயசுல இதெல்லாம் வருமோ? கடவுளே. இதென்ன சோதனை! இந்த நிமிஷம் உங்க மாமா மாத்திரம் உசிரோட இருந்தா



இந்த மெட்ராஸ்லே இருக்கிற அத்தனை டாக்டரையும் வரவழைச்சிருப்பாரே! என்னை இப்படி அனாதையா விட்டுட்டுப் போயிட்டாரே...''

மீனாவின் புலம்பலை அடக்குவதற்குள் திணறிப் போனான் கீர்த்தி.

அன்றிரவு—

தன்னந் தனியே நர்ஸிங்ஹோமிற்குத் திரும்பி வந்தவன் இரவு முழுக்கத் தூங்காமல் அலைந்து கொண்டிருந்தான். அந்த நிமிஷமே, உமாவிற்குப் பயப்படும்படி எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும் போலப் பரபரப்பு.

காரை எடுத்துப் போய், லாப் டெக்னீஷியனையும் அவனது உதவியாளனையும் அழைத்து வந்தான்.

''என்னங்க இந்த நேரத்துல.''

''ரொம்ப அவசரம்பா. ஒரு ஸாம்பிளை டெஸ்ட் பண்ணி...''

''எப்படியும் ஒருநாள் ஆகுங்களே?''

''அதான், அதனாலேதான். இப்பவே டெஸ்ட் பண்ண ஆரம்பி. எனக்குச் சீக்கிரம் ரிஸல்ட் வந்தாகணும்.''

மறுநாள் முழுக்க, ஆஸ்பத்திரி நோயாளிகளை மறந்து, பரிசோதனைச் சாலையிலேயே இருந்தான் கீர்த்தி.

அன்று மாலை, கோவிலுக்குப் போய்விட்டு, அப்படியே அவனது நர்ஸிங் ஹோமிற்குள் நுழைந்த பூரணி, அவன் இருந்த நிலையைக் கண்டு திகைத்தாள்.

Vennila

9

செய்தியைக் கேட்டதும் பதறிவிட்டாள் பூரணி. கையிலிருந்த பூக்கூடை நழுவியதுகூடத் தெரியவில்லை.

"இப்போ என்ன செய்யப் போறீங்க?"

"அதான் எனக்கும் தெரியலியே பூரணி."

"வியாதி ரொம்ப முத்திடுச்சா?"

"நல்ல வேளை, அப்படியெல்லாம் இல்லே. இருந்தாலும் இது இருக்கிற நிலைமையிலே யாருமே ஆபரேஷன் செய்யத் துணிய மாட்டாங்க பூரணி. நிறைய ரத்தம் வீணாயிருக்கும்."

"ரத்தம் எத்தறது ஒரு விஷயமா? என் பிளட் குரூப் சரியாயிருந்தா, வேண்டியதை எடுத்துக்குங்க. இதுக்குக் கூட இல்லாம, வேற என்னத்துக்குத்தான் நான் இருக்கேன்?"

அவள் கண்ணீர் ததும்பச் சொல்ல, அவன் சட்டென அவளது தோளில் முகம் புதைத்து அழுதான்.

"எனக்கு உமா மேல கிஞ்சித்தும் காதல் இல்லே பூரணி. என்னமோ மாமாவோட வற்புறுத்தலுக்காக அவ கழுத்திலே தாலி கட்டினேன். ஆனா, அதுகூட இத்தனை வருஷமா வளர்ந்த பாசம். அவளுக்குப் பிடிச்சோ, பிடிக்காமலோ அவ வீட்டுச் சோத்தைத் தின்ன நன்றி—இது கூட இல்லைன்னா நான் மனுஷனே இல்லே பூரணி."

"நீசொ. நீங்களே இப்படி அழுதா உங்க அம்மாவையும் அவ அம்மாவையும் தேற்ற யார் இருக்காங்க? கண்ணைத் துடைச்சிட்டு மளமளவென்று மேல ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. சாப்பிட்டீங்களா?"



"இல்லே பூரணி. பசிக்கல்லே."

"முதல்லே ஏதாவது சாப்பிடுங்க. நானும் உங்க கூட வர்றேன்."

கீர்த்தி முதலில் தயங்கினான். பிறகு அவள் சொன்னபடி கேட்டான்.

டாக்டர் சரோஜாவின் நர்ஸிங் ஹோமிற்குள் அவர்கள் நுழைந்தபோது உமா, மயக்கம் தெளிந்த நிலையில் படுத்திருந்தாள். கீர்த்தியுடன் பூரணியும் வருவதைக் கண்டவள், முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

மீனாட்சி மட்டும் கீர்த்தியின் காது பட அடித் தொண்டையில் உறுமினாள்.

"என் பெண் இன்னும் சாகல்லே. உசிரோடத்தான் இருக்கா. அதுக்குள்ளே இன்னொருத்தியை அழைச்சிட்டு வந்து என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கணுமா?"

"மாமி......"

கீர்த்தி அவளை அதட்ட, அவனது கரத்தை ரகசியமாய்ப் பிடித்து அழுத்தினாள் பூரணி.

அதற்கு மேல் அவளுடன் பேசாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அவன் ஏற்கெனவே டாக்டர் சரோஜாவிடம் தொலைபேசி மூலம் விஷயத்தைத் தெரிவித்து விட்டதால் அவள் கவலையுடன் அவனது வரவுக்காகக் காத்திருந்தாள்.

"வா! காலைலதான் உமா கொஞ்சம் புரண்டு கொடுத்தாள். இப்ப நல்ல நினைவே வந்தாச்சு. இவங்க..."

சரோஜா பூரணியைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

Vennila

"இவதான் பூரணி, நான் சொன்னேனே."

"ஓ உட்காருங்க."

சரோஜா புன்னகைக்க, அவள் காட்டிக் காட்டிய இடத்தில் பொம்மை போல உட்கார்ந்தாள் பூரணி. நெஞ்சம் முழுவதும் உமாவைப் பற்றிய கவலைதான்.

"கடவுளே, அவளுக்கு ஒன்றும் நேரக் கூடாது."

சரோஜாவும் கீர்த்தியும் பேசிய வார்த்தைகளில் பாதிக்கு மேல் இவளுக்குப் புரியவில்லை.

உமாவுக்கு அவசரமாக ரத்தம் ஏற்ற வேண்டும் என்பது மட்டும் புரிந்தது. யாரோ ஒரு நர்ஸ் அவளை அழைத்துப் போய், அவளது ரத்தத்தில் ஒரு துளியை எடுத்துக் கொண்டாள். அடுத்துச் சில மணி நேரத்தில் அதே நர்ஸ் சரோஜாவிடம் வந்து ஏதோ சொன்னாள்.

"தாங்க் காட், இவ ரத்தமும் உமா ரத்தமும் ஒரே குரூப்தான். எம்மா ரத்தம் கொடுக்க உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?"

அவள் பூரணியைக் கேட்க, கீர்த்தியை நிமிர்ந்து பார்த்து விட்டுப் பூரணி சொன்னாள்.

"அவ அப்பாதான் எனக்கு உசிரையே கொடுத்தார். அவளுக்கு நான் கேவலம் இதைக் கூடத் தரமாட்டேனா?"

அவளை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள் சரோஜா.

அன்று இரவிலிருந்து மறுநாள் பகல் வரையில் இரண்டு பாட்டில் ரத்தம் உமாவின் உடம்பிற்குள் செல்ல



அடுத்த இரண்டு நாட்களில் அவள் தெம்புடன் எழுந்து உட்கார்ந்தாள்.

உமாவிடமோ, மீனாட்சியிடமோ வரப் போகும் ஆபத்தைப் பற்றிச் சொல்லவேயில்லை கீர்த்தி.

சரோஜா மட்டும் உமாவின் வயிற்றில் ஒரு கட்டி இருப்பதாகவும், இன்னும் சில நாட்களில் அதை அறுத்துப் பறித்து விடலாம் என்றும் சொல்லி வைத்தாள்.

உண்மையிலேயே மேல் பார்வைக்கு உமா தெம்புடன் காட்சியளித்தாலும் அவளுக்குள் ஏகப்பட்ட சிக்கல்கள், போதை மருந்துகளை உபயோகித்து உபயோகித்து இப்பொழுது சில நாட்களாக அதையெல்லாம் நிறுத்தியிருப்பதால் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கை கால்களில் அவ்வப்பொழுது மெல்லிய நடுக்கம், தனக்குத் தேவையானது கிடைக்காததால் காட்டுக் கத்தலும், வாய்க்கு வந்த ஏச்சுக்களும் கடைசியில் எதுவும் சரிப்பட்டு வராததால் தன் கையாலாகாத்தனத்தை நினைத்துப் பெரிதாய் அழுவதும், அடிக்கடி தலைவலியும் ஜுரமும் வருவதும்—

இந்த நிலைமையில், கத்தியைக் கையில் எடுக்கவே பயந்தார்கள் அவர்கள்.

"கேன்ஸர்லே இது ஆரம்ப நிலைதான். முதல்லே இவளுக்குத் தேவையான மருந்து ஆகாரங்கள் எல்லாம் கொடுத்து, உடம்பைக் கொஞ்சம் பலமா ஆக்கணும். அப்போதான் அவளுக்கு ஆபரேஷனைத் தாங்கற சக்தியே வரும்."

கீர்த்தி பல டாக்டர்களுடன் ஒன்று கூடிப் பேசி, இந்த முடிவுக்கு வந்தான்.

Vennila

உமாவோ, அந்த நேரத்துக்குத் தனது உடம்பு குணமாகிவிட்ட காரணத்தினால் ஆஸ்பத்திரியைவிட்டுத் தன் வீட்டுக்குப் போகவே விரும்பினாள். இதற்காகத் தன் தாயிடம் அடம் பிடித்தாள்.

"ஆபரேஷன் முடியாம எங்கேடி போறது?"

"அம்மா, எனக்கு ஒண்ணுமேயில்லை, அந்த மனுஷன் சொன்னா, அதையும் நீ நம்பிடறதா?"

"வயித்திலே கட்டி இருக்காமேடி?"

"சரி, இருக்கட்டும். இப்ப உடனே ஆபரேஷன் பண்ணப் போறாங்களா? இல்லையே! நான், கொஞ்ச நாள் வீட்டிலே இருந்து ரெஸ்ட் எடுத்துக்கறேன். 'இங்கே படுக்கவே எனக்குப் பிடிக்கல்லே. வீட்டிலே எனக்குக் கிடைக்காத வசதிதான் இங்கே கிடைச்சிடப் போகுதா? மேலும், இங்கே படுத்துக் கிடந்தா என்னமோ சாகப் போறவளை வந்து பார்க்கிற மாதிரி எல்லாரும் வந்து பார்க்கறாங்க. எனக்கு இதெல்லாம் பிடிக்கலே இல்லை."

அவளது பிடிவாதமும் எசலும் டாக்டர் சரோஜாவையே ஒரு நிமிடம் அசரச் செய்ய, "என்ன கீர்த்தி, இவ இந்தக் கத்து கத்தறாளே? பேசாம ஆபரேஷனுக்குத் தேதி ஃபிக்ஸ் பண்றவரைக்கும் தினமும் பெட்டில் இஞ்செக்ஷன் ஏதாவது கொடுத்துடலாமா?" என்று கேட்டாள்.

"அவளைப் பற்றி உனக்குத் தெரியாது சரோ. நிறைய போதை மாத்திரைகளும், ஏன் பெத்தடின் கூடப் போட்டிருக்கா. அந்த அளவுக்கு மாத்தும் போயிருக்கு.

"மேலும், இப்ப அவளுக்கு உன் மேலேயும் என் மேலேயும் நம்பிக்கையே இல்லை. நாம ரெண்டு பேரும் சேர்ந்து அவளைத் தீர்த்துடுவோம்னு நம்பறா. இந்த நேரத்திலே, நாம அவ மேலே ஸ்டெதாஸ்கோப்பை வச்சுப்



பார்த்தாக்கூடச் செத்திடுவா. எங்க மாமா சொல்லுவாங்க,

"டாக்டரோட திறமை மட்டும் ஒரு நோயாளியைப் பிழைக்க வைக்க முடியாது. அந்த நோயாளிக்கு டாக்டர் மேலே நம்பிக்கையும் இருந்தாத்தான் அவன் பிழைப்பான்'ன்னு."

"இப்ப என்ன செய்யலாம்?"

"எப்படியும் இன்னும் ஒரு மாசத்துக்கு இவளை அப்படியே விட்டு வைக்க வேண்டியதுதான். வியாதி ஆரம்ப நிலையிலே இருக்கறதாலே, குறைஞ்சது ஆறு மாசத்துக்குக் கவலையில்லே. ஆனா இவ திரும்பி போதைப் பொருள் பக்கம் போனா, கடவுளாலே கூட இவளைக் காப்பாத்த முடியாது."

"அப்போ..."

"அவ ஆசைப்படி விட்டுப் பிடிக்க வேண்டியதுதான். பேசாம டிஸ்ஜார்ஜ் பண்ணு. வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன். இந்த ஒரு மாசமும் இவ கூடவே இருந்து, இவ மனசுலே நம்பிக்கையை ஊட்ட முயற்சிக்கிறேன். எது எப்படிப் போனாலும், இவ பழையபடி மாத்திரைகளைத் தேடி அலையாமல் பார்த்துக்க வேண்டியது என் கடமை."

"உன்னாலே முடியுமா கீர்த்தி? வேணுமானா துணைக்கு ஒரு நர்ஸை..."

"அதெல்லாம் வேண்டாம். என்னையே இவ நம்பாதப்போ, நான் வைக்கிற நர்ஸை மாத்திரம் நம்புவாளா? நீ இவளை என்னோட அனுப்பு."

கீர்த்தி அழுத்தந்திருத்தமாய்ச் சொன்னாள். பூரணிக்கும் கூட, அவளது இந்த முயற்சி, நல்லபடியா வெற்றி

Vennila

தேடித் தர வேண்டும் என்கிற பயம் அது நெஞ்சில் நெருப்பாய்த் தகித்தது.

''ஜாக்கிரதை. வெளியில் இருக்கிற சமயத்திலே அவளுக்கு என்ன நேர்ந்தாலும், அதுக்கு நாமதான் பதில் சொல்லியாக வேண்டும். ஒரு டாக்டர், தன் பெண்டாட்டியோட வியாதியைச் சரியாகக் கவனிக்காம சாகடிச்சிட்டாங்கிற பழி வாராமல் பார்த்துக்கோ.''

உண்மையில் கீர்த்திக்கு உமாவைப் பாதுகாப்பது என்பது அவனுக்கு விட்ட ஒரு சவாலாகத்தான் இருந்தது.

அம்மம்மா... என்ன பாடு படுத்திவிட்டாள் அவள்!

நர்ஸிங் ஹோமை விட்டுக் கிளம்பும் பொழுதே தகராறு ஆரம்பமாகி விட்டது.

இவள் ஏறுவதற்காகக் கார் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு கீர்த்தி தயாராகக் காத்திருக்க, அவள் அவனைத் திரும்பியே பார்க்காமல் தனது காரில் ஏறி டிரைவரைக் கூட இறங்கிக் கொள்ளச் சொல்லிவிட்டு, தான் நல்ல நிலையில் இருப்பதாகக் காட்டிக் கொள்ள அத்தனை வெறி.

''இந்த வண்டியிலே ஏறு உமா.''

''நோ தாங்க்ஸ். நான் என் வண்டியிலேயே போய்க்கிறேன்.''

''டிரைவர், நீ வண்டியை எடு. உமா, நீ உன் வண்டியிலேயே போறதை நான் தடுக்கலை. ஆனா டிரைவர் ஓட்டட்டும். இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ டிரைவ் பண்ணக் கூடாது.''

''என் உடம்பைப் பத்தி எனக்குத் தெரியும். டிரைவர், நகரு. அம்மா நீ என்னோட வா.''



அவள் சடாரென வண்டியிலேறி, டிரைவரின் ஆசனத்தில் அமர்ந்து வண்டியைக் கிளப்பியும் விட்டாள். கீர்த்தியும், மற்றவர்களும் என்ன தடுத்தும் கேட்கவில்லை.

கடைசியில் அவள் கார் முன்னால் செல்ல, அதைத் தொடர்ந்து கீர்த்தி, மற்றவர்களுடன் தனது காரில் செல்ல, இவன் தன் பின்னாலேயே தொடர்வது பிடிக்காமல் அவள் காரைக் காற்றாகப் பறக்கவைக்க, அவளது வேகத்தைக் கண்டு பொறி கலங்கிப் போன கீர்த்தி வியர்த்து விறுவிறுத்துப் போனான்.

வேண்டுமென்றே மவுண்ட் ரோடில் பத்துப் பிரதட்சிணம் வந்து விட்டு, பிறகுதான் வீட்டுப் பக்கமே காரைத் திருப்பினாள் அவள்.

ஆனால் வீட்டிற்கு வந்த பின்பும், கீர்த்தி மற்றவர்களை அனுப்பிவிட்டு, தன்னுடனேயே தங்கியது எரிச்சலை இன்னும் அதிகப்படுத்தியது.

''எனக்காக யாரும் இங்கே இருக்க வேண்டியதில்லே. என் வீட்டிலே என் இஷ்டப்படி நான் இருந்துப்பேன்.''

அவள் கீர்த்தியைப் பார்த்து எரிந்துவிழ, அத்தனையையும் சகித்துக்கொண்டு வாய் பேசாமலேயே அவன் அவளை வளைய வந்தான்.

எத்தனை நாள்தான் அவன் தனது நர்ஸிங்ஹோமையும், நோயாளிகளையும் தவிக்க விட்டுவிட்டு இருக்க முடியும்?

என்னதான் உதவி டாக்டர்கள் இருந்தாலும், அவன் நேரில் பார்த்துச் சிகிச்சையளிக்க வேண்டிய நோயாளிகள் எத்தனை பேர் இருந்தார்கள்.

உமாவைத் தனியே விட்டு விட்டுப் போகவும் முடியாமல், நர்ஸிங் ஹோமிற்குப் போகாதிருக்கவும் முடியாமல்

Vennila

அவன் தவித்தான். அவள், நர்ஸின் நேரமிருக்கும் போதும் பொழுதெல்லாம், உடனே வீட்டு வேலைக்காரனிடம் சொல்லி விட்டுப் போவான்.

''இந்தாப்பா, அம்மாளை எங்கேயும் வெளியிலே விடாதே. அப்படி அவங்க உன்னையும் மீறிக் கிளம்பினா உடனே எனக்குப் போன் பண்ணு. அவங்க எங்கே போறாங்கன்னு விசாரிச்சு வச்சுக்கோ.''

கீர்த்தி, அவனிடம் நூறு ரூபாய் நோட்டை அழுத்தி, தனியே அழைத்துப் போய் ரகசியமாகச் சொன்ன போது, 'சரி சரி' என்று தலையாட்டிய வேலைக்காரன், உமா அவனைக் கூப்பிட்டு இரு நூறு ரூபாயைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டபோது வாயடைத்துப் போய் நின்றான்.

''பாரு வேலு. இக்கணை நான் நான் எங்கே போறேன், எதுக்குப் போறேன்னு யாராவது எதிர்த்துக் கேட்டிருக்காங்களா?''

''இல்லீங்கம்மா. இப்ப உங்களுக்கு உடம்பு சொகம் இல்லீங்களே! அதனாலேதான் கீர்த்தி ஐயா உங்களைக் கவனிக்கச் சொல்லியிருக்காரு.''

''இப்படிச் சொல்லியே அவர் எல்லாரையும் ஏமாத்தறார். நீயே பார்க்கிறியே, நான் நல்லாத்தானே இருக்கேன்?''

''ஆமாங்க. முன்னைவிடக் கொஞ்சம் இளைச்சிருக்காப் போலத் தெரியுதே தவிர, நல்லாத்தான் இருக்கீங்க.''

''இளைச்சது எல்லாம் இந்த மனுஷரோட சந்தேகத் தாலேதான். உன்கிட்ட அவர் என்ன சொல்லிட்டுப் போயிருப்பார்ன்னு எனக்குத் தெரியும். நான் வெளியில கிளம்பினா போகக் கூடாதுன்னு தடுக்கச் சொல்லியிருப் பார். அப்படியும் பிடிவாதமாகக் கிளம்பினா, எங்கே



போறேன்னு ரகசியமா விசாரிச்சு, தனக்குப் போன் பண்ணச் சொல்லியிருப்பார். வெளியே பேசிய மனுஷரை உதவிணைத்தான் என்ன? மனுஷனோ. கீழ்த்தரமான புத்தியைப் பாரு. இந்தா வேலு, இந்தப் பணத்தை வச்சுக்கோ.''

''ஐயோ! எதுக்குங்க? ஐயா திட்டுவாருங்க.''

''அவர் என்ன உன்னைத் திட்டறது? அவரா உன்னை வேலைக்கு வச்சாரு? எங்க அம்மாதான் உன்னை வேலைக்குச் சேர்த்துவிட்டாங்க. நான் சொல்றேன். நீ வாங்கிக்கோ.''

அவள், பணத்தை அவன் கையில் திணித்து விட்டுக் காரில் ஏறிப் பறக்க, அவன் எதும் செய்ய மாட்டாமல் ஸ்தம்பித்து நின்றான்.

கொஞ்ச நேரத்தில் திகைப்பு நீங்கியதும் கீர்த்திக்குப் போன் செய்ய முனைந்தான்.

''எங்கே போறதாச் சொன்னாங்க?''

''அதெல்லாம் சொல்ல மாட்டேனுட்டாங்க.''

''மடையா, நீ விசாரிக்க வேண்டிய இடத்திலே விசாரிக்கிறதுதானே?''

''யாருகிட்ட? மீனாட்சி அம்மாகிட்டேயா? அவங்க தான் போனாலே எரிஞ்சு விழுறாங்க உமா அம்மா, என் கையிலே இருநூறு ரூபா கொடுத்தாங்க. அதை அப்படியே வச்சிருக்கேன். நீங்க வந்தவுடனே கொடுத்திடறேன்.''

அவன் அதற்கு மேலும் பேசியதைக் கேட்கப் பொறுமை இல்லாமல், ரிஸீவரை வீசியெறிந்துவிட்டுத் தலை முடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாகத்

Vennila

[illegible]

அதற்கு மேல் அவளது வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காதவனாகச் சாப்பாட்டு மேஜையின் மீது அழகாய்ப் பரப்பப்பட்டிருந்த அத்தனை உணவு வகைகளையும் வாரி வீசியெறிந்தான் கீர்த்தி. அவனெதிரில் இருந்த வெள்ளித் தட்டைத் தூக்கி, சுவரில் அறைந்தான். அவனது ஆத்திரத்தைக் கண்டு அதிர்ந்து போய் நின்றாள் மீனாட்சி.



[illegible]

''எனக்குத் தெரியாதேடா, [illegible]; இப்ப நான் என்ன பண்ணுவேன்.''

மீனாட்சி பெரிதாய் அழத் தொடங்கினாள். என்ன தான் கீர்த்தி மீது வெறுப்பும் ஆத்திரமும் இருந்தாலும், உமாவின் விஷயத்தில் அவன் சொல்வதை இதற்கு மேலும் நம்பாமல் இருக்க முடியவில்லை.



Vennila

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

''வெயிட் எ மினிட்...''

பதற்றத்துடன் காத்திருந்தான்.

''ஷ்யாம்னா சொன்னீங்க. அப்படி யாருடைய பார்ட்டியும் இல்லையே!''

''ஓ. தாங்க்யூ.''

அவன் விரல் தேய, டெலிபோன் எண்களைச் சுழற்றியதுதான் மிச்சம். சோர்ந்து போய்ப் பொத்தென சோபாவில் அமர்ந்தான்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வாசலில் நின்றவன், உள்ளே வந்தான். கையில் [illegible] அழகான மலர்க்கொத்து.

''அவங்க பார்ட்டிக்குக் கிளம்பிப் போயிட்டாங்களா?''

வந்தவன் கேட்ட கேள்வி, கீர்த்தியைத் துள்ளி நிமிரச் செய்தது.

''இப்பத்தான் போனாங்க. நீங்க யாரு?''

''நான் ஃபிளவர் ஷாப்லேயிருந்து வர்றேன். அந்த அம்மா ஒரு கொத்துப் பூ கேட்டிருந்தாங்க. வீட்டுக்குக்

Vennila

கொண்டுவந்து கொடுத்திடுங்க...நாலு மணிக்கெல்லாம் கிளம்பிடுவேன், இங்கேயிருந்து ஸில்வர் சாண்ட்ஸ் போகணும்னு போன்லே சொன்னாங்க."

"எங்கே, எங்கே போகணும்னு சொன்னாங்க?"

"ஸில்வர் ஸாண்ட்ஸ், மகாபலிபுரம் கிட்டே...."

அவ்வளவுதான். அதற்கு மேல் அங்கு நிற்கவே இல்லை கீர்த்தி. காரை எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தான், அவன் கூடவே என்ன சொல்லியும் கேட்காமல் மீனாட்சியும் கிளம்பினாள்.

ஸில்வர் ஸாண்ட்ஸில் அவர்கள் போனபோது, பார்ட்டி மிக அமர்க்களமாய் நடந்து கொண்டிருந்தது. அந்த நாகரிகக் கும்பலில் உமாவைத் தேடிக் கண்டு பிடித்து விட்டான்.

இவனைக் கண்டதுமே அதிர்ந்து போனாள் அவள். கீர்த்தி மாத்திரமல்லாமல், அவனுடன் தன் தாயும் வேறு வந்திருப்பது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது அவளுக்கு.

மீனாட்சிதான் துணிந்து அவளருகில் போய், அவள் கையிலிருந்த மதுக் கோப்பையைப் பிடுங்கி எறிந்தாள்.

"கிளம்புடி போகலாம்."

"அம்மா, நாலு பேர் முன்னாலே அசிங்கமா நடந்துக் காதே."

"எதுடி அசிங்கம்? உங்க அப்பா இருந்த இருப்பென்ன? வாழ்ந்த வாழ்வென்ன? அவர் பொண்ணு, இப்படிக் குடிச்சு, கூத்தடிச்சு, வயித்திலே புத்து நோய் வந்து செத்தாங்கற வார்த்தை அசிங்கமா தெரியல்லே. நான் இங்கே வந்தது அசிங்கமாய்ப் போச்சா?"



உமா கீர்த்தியை எரித்துவிடுவது போலப் பார்த்தாள்.

"ஏது... என் வயித்திலே டியூமர்னு சொல்லி பயமுறுத்தினது பலிக்கல்லேன்னு தெரிஞ்சதும் புதுசாக் கேன்ஸர்னு ஒண்ணைக் கிளப்பி விட்டிருக்காப்பலே இருக்கு. டாக்டருக்குப் படிச்சது நல்லாத்தான் உபயோகமாகுது."

"உஷ்... உமா, அதிகமாப் பேசாதே, அறைஞ்சிடுவேன்."

"ஓகோ, அந்த அளவுக்குப் போயிட்டதா? ஹியாம்! போலீசைக் கூப்பிடு. என்னை அறையப் போற பெரிய மனுஷனை..."

அவள் பெரிதாய் இரைச்சல் போடக் கிளம்பியவள், ஏற்கெனவே வயிற்றுக்குள் தஞ்சம் புகுந்திருந்த போதைப் பொருட்களால் திடீரெனக் கிளம்பிய வயிற்று வலியைத் தாங்க முடியாமல் 'ஐயோ!' என்று அலறினாள்.

கீர்த்தி அவள் திமிறத் திமிறத் தன்னோட கையில் அள்ளிக் கொண்டு காருக்கு ஓடினான். பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக மீனாட்சி தொடர்ந்தாள்.

உமாவின் கர்ப்பப் பையை வெற்றிகரமாய் எடுத்துவிட்டான் கீர்த்தி. இன்னும் கொஞ்சம் தாமதித்து இருந்தாலும் நிலைமை சீர் கேடாயிருக்கும். என்னதான் அவனுக்கு இது ஒன்றும் பெரிய ஆபரேஷன் இல்லை என்றாலும், காரியம் ஒழுங்காக முடிய வேண்டுமே என்கிற பதைப்பும், பதட்டமும் சேர, கத்தியைக் கையில் எடுத்த போதே, அவன் கை ஒரு நிலையில் இல்லாமல் வெடவெட நடுங்கியது.

"என்ன டாக்டர் இது? நீங்களே இப்படிப் பதறலாமா?"

Vennila

உதவி டாக்டர் முரளி, அவனது தோளை ஆதரவாய் அணைத்துக் கொள்ள, நர்ஸிங் ஹோமின் ஆபரேஷன் தியேட்டர் வாசலில் மாட்டியிருந்த டாக்டர் சங்கரனின் கண்களை நடுக்கத்துடன் பார்த்து விட்டுத்தான் உள்ளே நுழைந்தான் கீர்த்தி.

''உங்க மகளைக் காப்பாத்த, நீங்கதான் பக்கத்திலே இருந்து துணை புரியணும் மாமா....''

உமா, அனஸ்தீஷியா மயக்கத்திலேயே இன்னமும் இருந்தாள். ஆபரேஷன் நடந்து முடிந்ததே அவளுக்குத் தெரியாது. முதல் நாள் மாலைதான் அவள், தனக்கு உண்மையிலேயே புற்று நோய்தான் என்பதை நம்பினாள். அதுவும் அப்பாவின் நெருங்கிய நண்பர்களான வேறு சில டாக்டர்கள் வந்து சொல்லி.

''உன்னைக் காப்பாத்த அவன் இந்தப் பாடு படறான், நம்ப மாட்டேங்கறியேம்மா.''

''இவனைவிட இதுல ஸ்பெஷலிஸ்ட் இப்ப யாரும் கிடையாது. அவனுக்கு இது பெரிய வேலையே இல்லை.''

''உனக்கும் அவனுக்கும் எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் இருந்திருக்கலாம். ஆனா, கத்தியைக் கையிலே எடுத்திட்டா, அவன் தன்னைக் கொல்ல வர்ற புலியைக் கூட எப்படியாவது காப்பபத்தணும்னுதான் பார்ப்பானே தவிர, கொல்லணும்னு நினைக்க மாட்டான்.''

''அவன் மாத்திரம் இல்லேம்மா. எல்லா டாக்டர் களுடைய கொள்கையும் அதுதான். பகை வேற, நோய் வேற. பகையாளி கூட நோயாளியா வந்தா, அவனைப் பிழைக்க வைக்கப் பாடுபடறதுதான் வைத்தியனோடக் குணம்.''



உமா மௌனமாய்ப் படுத்திருந்தாள். சாவின் வாசலில்தான் நிற்கிறோம் என்று தெரிந்ததுமே, நெஞ்சுக்குள் அதுநாள் வரையில் சேமித்து வைத்திருந்த வன்மமெல்லாம் கரைந்தது. கீர்த்தியின் தாயிடம் கூட மன்னிப்புக் கேட்டாள் அவள்.

''என்னை மன்னிச்சுடுங்க.''

''ஐயோ, இது என்னடியம்மா வார்த்தை! உன் மேலே எனக்கு எந்தக் கோபமும் இல்லே.''

''பூரணி... பூரணி எங்கே?''

''உனக்கு ரத்தம் கொடுக்கணுமாம், ஆபரேஷனுக்கு அப்புறம் அவ குரூப்தான் சேருதாம். ஒரு மாசத்துக்குள்ள ரெண்டு தடவை ரத்தம் கொடுக்கக் கூடாதுன்னு கீர்த்தி ஆன மட்டும் சொல்லிப் பார்த்துட்டான். கேட்கலை.''

மீனாட்சி சொல்ல, உமா கண்கள் கசிய லட்சுமியின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

அவள், ஆதரவாய் உமாவின் தலையைத் தடவினாள்.

''அம்மாடி.... என் உசிரை எமன் கொண்டு போயிட முடியாதபடி, என்னைச் சுத்தி எத்தனை பேர்!''

அவள் தனக்குள் விசும்பிக்கொண்டே, கீர்த்தியின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

அவர் வந்தா அவர் 'கிட்டேயும் மன்னிப்புக் கேட்டுக் கணும். ஆபரேஷனுக்கு அப்புறம் இருக்கேனோ, போயிடறேனோ!''

ஆனால், அவளுக்கு மயக்க மருந்து கொடுக்கும் வரையில் கீர்த்தி அவளெதிரில் வரவே இல்லை.

Vennila

வந்தால், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிவிடுமோ என்கிற கவலை.

ஆனால், ஆபரேஷன் முடிந்த பிறகோ, அவனால் நிற்கக் கூட முடியாத அளவுக்குச் சோர்வு. நெஞ்சில் இத்தனை நாள் சுமந்திருந்த பாரமெல்லாம் நீங்கியது போல ஒரு வித உணர்வு.

உமாவை ஆபரேஷன் தியேட்டரிலிருந்து படுக்கைக்குக் கொண்டு வந்து போடும் வரையில் கூடவே இருந்தான். பிறகு மீனாட்சியையும், லட்சுமியையும் பார்த்துப் புன்னகைத்தான்.

''எல்லாம் நல்லபடியா முடிஞ்சிட்டது, கவலைப் படாதீங்க.''

அவன் அந்த அறையில் ஒரு பக்கமாய் போடப்பட்டு இருந்த பிரம்புச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

பூரணிதான் அவனது சோர்வைக் கண்டு அதிகம் உருகிப் போனாள்.

''கொஞ்சம் சூடா காபி கொண்டு வரட்டுமா?''

''உம்''.

அவன் தலையசைக்க, அவள் ஓடோடிக் காப்பி கொணர்ந்தாள்.

காப்பியைக் குடித்துவிட்டுக் கண்ணயர்ந்தவன்தான் கீர்த்தி. மூடிய கண்ணுக்குள் கனவும் நனவுமாய்ப் பல காட்சிகள். உமாவிற்காக, அவளின் கல்யாணத்துக்காக ஓடி ஓடி உழைத்தது......

அதற்கும் முன்னால் பத்து வயதுச் சிறுவனாய், அவளிடம் திட்டு வாங்கிக்கட்டிக்கொண்டது. பூரணியுடன்



சிரிக்கச் சிரிக்கப் பேசியது. அவள் கொடுத்த மயிலிறகைப் புத்தகத்துக்குள் பத்திரப்படுத்தியது.....

பூரணி, பட்டுப் பாவாடையும் தாவணியுமாய் ஊஞ்சலில் அமர்ந்து, தம்பூராவை மீட்டியபடியே பாடியது... அவள் காலில் கொலுசை மாட்டித் திருகியது...

உமா, நடநடவென மாடிப் படியில் இறங்கி வர, அவள் அவன் மீது மோத, கைப்பையிலிருந்த மாத்திரைகள் சிதறியது...

டாக்டர் சரோஜாவின் நர்ஸிங் ஹோமில் இருந்து காரைக் கிளப்பிய உமா கண் மண் தெரியாமல் சுற்றியது... கடைசிக் கடைசியாய் அவனைத் தேடி மகாபலிபுரத்துக்கு ஓடிய காட்சி...

அது ஒன்றுதான் மனதில் ஸ்திரமாக நின்றது. விழியோரத்தில் முத்து முத்தாய்க் கண்ணீர் துளிர்த்தது.

''அழுதீங்களா? உமா கண்ணைத் திறந்து பார்க்கிறாள். உங்களைக் கூப்பிடறாள்.''

பூரணியின் மிருதுவான கைகள் அவனது கன்னத்தில் பதிய, அவன் அக்கைகளைத் தன் கன்னத்திலேயே மேலும் அழுந்தப் பதிய வைத்துக் கொண்டான்.

''எழுந்திருங்க.''

பூரணியின் குரல் கேட்டு, அவன் விழித்தெழத்தான் முயற்சிக்கிறான். முடியவில்லையே!

அவளது கையைப் பிடித்திருந்த அவனின் கை மெள்ள மெள்ளத் தளர்ந்தது.

நிலைமையை உணர்ந்து, அலற வாய் திறந்த பூரணி குரலே எழுப்பாமல் கல்லாய் நிற்கிறாள்.

Vennila